November 2024

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

## தீபாவளி மலர்




தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
HAPPY
DIWALI
2024
1 NOVEMBER
VARSHA

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

November 2024

சுவடி— 14
ஓலை— 9


உள்ளே...

## வணக்கம் பல

சான்றோர்களின் தலையாய கடமை அல்லதை நீக்கி நல்லதை ஓங்கச் செய்வதாகும். என்னதான் நல்லதைப் பெருக்கிக் கொண்டே போனாலும், ஊடுபயிர் நடுவே களைப்பயிரும் வளர்வது தவிர்க்கவியலாது.சமுதாயத்தில் நல்லதைச் செய்வதற்காகவே தலைவர்கள் உருவெடுத்தாலும், அதிகாரமும் ஆட்சியும் கைவசம் இருக்கும்போது, களைகளைப் போன்ற தலைவர்களும் உருவெடுத்து விடுகிறார்கள். அதனால் வருகின்ற சிக்கல், நாட்டுக்கே பெரும் கேடாக மாறிவிடுகிறது.


உலகெங்கும் போர் சூழல் மிரட்டிக் கொண்டிருப்பதற்கான காரணம் களைகளைப் போலத் தலை விரித்தாடுகின்ற தலைவர்களின் வேலையன்றி வேறென்ன? அத்தகைய தலைவர்கள் உருவாகி விடாமல் காப்பதற்கு தேர்தல் களத்தில் மக்கள் சிந்தித்து செயல்பட்டு மாற்றத்துக்கு வகை செய்ய வேண்டும். வல்லரசு நாடான அமெரிக்காவுக்கு இப்போது நல்வழி காட்டுவதற்கான ஒரு தலைமையே தேவை. அந்த மாற்றம் ஏற்படுமானால், அது அந்நாட்டுக்கு மட்டுமல்லாது அவர்களால் வழிநடத்தப்படுகின்ற பல நாடுகளுக்கும் ஒரு நல்ல தீர்வாக அமையும். அப்படியான நல்லதொரு மாற்றம் இலங்கையில் ஏற்பட்டிருப்பதாக மக்கள் நம்புகின்றனர். ஒரு சாமானியர் ஆட்சி பொறுப்பில் அமர்ந்தால், அவருடைய பார்வை எப்படி இருக்கும் என்றதொரு சிறப்பான புதிய பாதையில் பயணப்பட்டு இலங்கை, உலக நாடுகளின் மத்தியில் உயர்ந்த இடம் பெறட்டும்.

இருளும் ஒளியுமாகத்தான் இவ்வுலகம் காலகாலமாக இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்தத் தீப ஒளித் திருநாள் உலக மக்களின் மனங்களில் மத்தாப்புவாய் மகிழ்ச்சியைப் பரவச் செய்யட்டும்! உலகின் பல நாடுகளில் நிலவும் போர் மேகச் சூழல் நீங்கி, அங்கெல்லாம் அமைதி நிலவட்டும்! வானில் சீறிப் பாயும் ஏவுகணைகளுக்கும், குண்டு மழை பொழியும் விமானங்களுக்கும் நடுவே அமைதியையும் மகிழ்ச்சியும் பரவச் செய்யும் வகையில் தீப ஒளித் திருநாளில் இளம் சிறார்கள் வெடிக்கும் வண்ண ஏவுகணைகளும், ஒளிரும் மத்தாப்புக்களும் உலகெங்கும் மகிழ்ச்சியையும், அன்பையும் வெளிப்படுத்தும் விதமாய் அமையட்டும் என ‘அய் தமிழ்’ அனைவருக்கும் தீபத் திருநாள் வாழ்த்துக்களைக் கூறி, தீபாவளி சிறப்பிதழாக மலர்கின்றது.

இனிய தீபத் திருநாளைக் கொண்டாடும் மக்களின் இல்லங்களிலும் அவர்தம் உள்ளங்களிலும் நற்சிந்தனைகளும், ஆக்கபூர்வமான செயல்களும் விளையட்டும்! அனைவருக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்!

நேசப்பகிர்தலுடன்

ஆசிரியர் குழு





**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar

**Art Editor**
Sriram

**Art & Marketing Director**
Jaya

**Printers**
Kanagam Pathippagam

**Contact us:**
*editor@ithamil.com*



(பொறுப்பு துறப்பு: இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது. படைப்புக்கள் யாவும் படைப்பாளிகளின் கருத்துக்களே. அதற்கு எவ்வகையிலும் அய் தமிழ் பொறுப்பேற்காது.)

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு



சாதனைப் பெண்ணே!

நிலைக்குமா நம்பிக்கை?

நூல் பெருமை

பாயும் பணம்
பாதாளம் வரை!

நினைவு அலைகள்

யோக யோகம்!

நம்பிக்கை வை!
உன்னில்!





# உள்ளே


தமிழே தமிழே
தல வலம்
தமிழர் பெருமை
சிவகாமியின் சபதம்
மருத்துவ தமிழ்

கவிதைகள்

சிறுகதைகள்

சினிமா
பாலிவுட், கோலிவுட், டோலிவுட், மாலிவுட்



# சாதனைப்

## அமெரிக்க அதிபர் தேர்தல்: கமலா ஹாரிஸுக்கு காத்திருக்கும் சிக்கல்கள்?

அமெரிக்க அதிபர் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் கமலா ஹாரிஸுக்கு உள்ள சிக்கல்கள் அவரது வெற்றி வாய்ப்பை தட்டி பறிக்கலாம் என கூறப்படுகிறது. புதிய அதிபரை தேர்வு செய்யும் தேர்தல் நவம்பர் 5 ஆம் தேதி நடைபெறுகிறது. இந்த தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து ஜோ பைடன் விலகினார். இதையடுத்து ஜனநாயக கட்சி சார்பில் இந்திய வம்சாவளியான கமலா ஹாரிஸ் போட்டியில் இறங்கினார்.

அவரை எதிர்த்து குடியரசு கட்சி தரப்பில் முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப் போட்டியிடுகிறார். இவர்கள் இருவருக்கும் இடையே கடுமையான பிரச்சாரம் நடைபெற்று வருகிறது. பிரச்சார மேடைகளில் இருவரும் ஒருவரை ஒருவர் கடுமையாக தாக்கி பேசி வருகின்றனர். அண்மையில் அமெரிக்காவின் தனியார் தொலைக்காட்சி நிறுவனங்கள் வெளியிட்ட கருத்துக் கணிப்புகளில் கமலா ஹாரிஸ் தான் அதிபராக தேர்வு செய்யப்படுவார் என கூறப்படுகிறது. இதனால் டிரம்ப் தனது பிரச்சார முறைகளில் சில மாற்றங்களை செய்துள்ளார்.

கடந்த செப்டம்பர் மாதம் 10 ஆம் தேதி கமலா ஹாரிஸ் மற்றும் டிரம்ப் இடையே முதல் நேரடி விவாதம் நடைபெற்றது. அப்போது ஒருவர் மீது ஒருவர் குற்றச்சாட்டுகளை அடுக்கினர். கருக்கலைப்பு சட்டம், சட்டவிரோத குடியேற்றம் போன்றவை தொடர்பாக விவாதங்கள் நடந்தன. இதையடுத்து மற்றொரு நேரடி விவாதத்திற்கு கமலா ஹாரிஸ் அழைப்பு விடுத்து இருந்தார். ஆனால் டொனால்ட் டிரம்ப் இதற்கு மறுப்பு தெரிவித்தார்.

இந்த நேரடி விவாதத்திற்கு பிறகு கமலா ஹாரிஸுக்கு ஆதரவு மேலும் அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது. எனினும் சில மாகாணங்கில் டிரம்பிற்கு ஆதரவு பெருகி உள்ளதாக கூறப்படுகிறது. இந்த நிலையில் அமெரிக்க அதிபர் தேர்தல் களம் சூடுபிடிக்க தொடங்கி உள்ளது.

வெறும் 15 நாட்களில் அமெரிக்க அதிபர் தேர்தலில் மாற்றம் ஏற்படலாம் என கூறப்படுகிறது. கமலா ஹாரிசின் வெற்றி வாய்ப்பை தட்டி பறிக்க சில விஷயங்கள் தயாராக உள்ளது. கமலா









# பெண்ணே!


ஹாரிஸுக்கு பல்வேறு சவால்கள் உள்ளன. இஸ்ரேல் ஹமாஸ் போரை, கமலா ஹாரிஸ் ஊக்குவிப்பதாக டிரம்ப் குற்றம்சாட்டி வருகிறார்.

அதேபோல் ரஷ்யா உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் அமெரிக்க அரசு உள்ளதாகவும் கூறப்படுகிறது. மேலும் அமெரிக்காவில் சட்டவிரோத குடியேற்றம் போன்ற முக்கிய விஷயங்களை கமலா ஹாரிஸுக்கு பெரும் சவாலாக உள்ளது. 15 நாட்களில் அமெரிக்கர்கள் தங்களின் அதிபரை தேர்வு செய்யும் தேர்தலில் ஜனநாயக கடமையை ஆற்ற உள்ளனர். உலக நாடுகளின் கவனம் அமெரிக்க தேர்தலை நோக்கி உள்ளது.

அமெரிக்க அதிபர் தேர்தல்களம் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு பல்வேறு திருப்பங்களைச் சந்தித்து வருகிறது. ஜனநாயகக் கட்சி சர்பில் முதலில் வேட்பாளராக களமிறங்கிய இப்போதைய அதிபர் ஜோ பைடன் (81) வயது முதிர்வால் ஏற்பட்ட தடுமாற்றங்கள் காரணமாக போட்டியில் இருந்து விலகினர் இது, துணை அதிபர் கமலா ஹாரிஸை அதிபர் வேட்பாளராக மாற்றியது.



குடியரசுக் கட்சி வேட்பாளர் டொனால்ட் டிரம்ப் சர்ச்சைகள் மூலமே பிரபலமானவர். மேலும்



இந்தத் தேர்தல்களத்தில் இதுவரை டிரம்ப் மீது இருமுறை படுகொலை முயற்சிகள் நடைபெற்று அவர் உயிர்தப்பியுள்ளர்.

இதனிடையே, ஆதரவு அலை கமலா ஹாரிஸ் பக்கமே வீசி வருவதாக அமெரிக்க ஊடக கணிப்புகள் கூறி வருகின்றன. இதனால் சலிப்படைந்த டிரம்ப், இந்தத் தேர்தலில் தோற்றால் இனி அதிபர் பதவிக்குப் போட்டியிட மாட்டேன் என்று கூறிவிட்டார் ஏற்கெனவே 78 வயதை எட்டிவிட்ட டிரம்ப்புக்கு இதுவே கடைசி வாய்ப்பாகவும் உள்ளது.

அமெரிக்க தேர்தல் பிரசார களம் என்பது கமலா ஹாரிஸை டிரம்ப் கடுமையாக விமர்சிப்பது மற்றும் குற்றம்சாட்டுவது, கமலா அதற்கு அதிகம் பதிலளிக்காமல் கடந்து செல்வது என்பதே இதுவரை நிகழ்ந்து வருகிறது. கமலா ஹாரிஸின் நிறம் மற்றும் தோற்றத்தை வைத்து உருவகேலி பிரசாரத்திலும் டிரம்ப் ஈடுபட்டர்‘கமலா ஹாரீஸின் புகைப்படங்கள் எதுவும் நன்றாக இல்லாததால்தான் டைம் பத்திரிகை அட்டைப்படத்தில் கமலாவின் படத்தை ஓவியமாக வரைந்து வெளியிட்டுள்ளது. கமலாவைவிட நான் அழகானவன்’ என்பது தேர்தல் பிரசாரத்தில் ட்ரம்ப் உதிர்த்த வர்த்தைகள். இதன் மூலம் ஆப்பிரிக்க—இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கமலாவைவிட வெள்ளை இனத்தைச் சேர்ந்த நான்தான் அதிபர் பதவிக்குத் தகுதியானவன் என்பதை டிரம்ப் மறைமுகமாகச் சுட்டிக்காட்டினர்எனினும், இது அமெரிக்க மக்களால் ரசிக்கப்படவில்லை; தேர்தல் களத்தில் டிரம்ப்புக்கு ஆதரவாக பெரிய அளவில் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை.







கமலா ஹாரிஸ் சூழலுக்குத் தகுந்தாற்போல தன்னை இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர் என்றும் கறுப்பினத்தைச் சேர்ந்தவர் என்றும் கூறி வந்ததும் டிரம்ப்பின் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகி வருகிறது. கமலாவின் தாய் சென்னையிலிருந்து அமெரிக்காவில் குடியேறியவர். தந்தை கருப்பினத்தைச் சேர்ந்தவர். டிரம்ப் தனது அடுத்தகட்ட பிரசார உத்தியாக கமலா ஒரு மார்க்ஸியவாதி (கம்யூனிஸ்ட்) என்ற குற்றச்சாட்டை முன்வைத்தர்அமெரிக்கர்களுக்கும், கம்யூனிஸத்துக்கும் 7—ஆம் பொருத்தம் என்பதும், வெனிசூலா, கியூபா போன்ற கம்யூனிஸ நாடுகளில் இருந்து தப்பி அமெரிக்காவில் தஞ்சமடைந்தவர்களின் வாக்கு வங்கி முக்கியமானது என்பதும் டிரம்ப் இந்த பிரசார உத்தியை கையிலெடுக்க முக்கியக் காரணம்.

கமலா ஹாரிஸை சே குவேரா பாணி உடையிலும், அரிவாள், சுத்தியல் சின்னத்துடன் செந்நிற உடையில் உருவகப்படுத்தும் படங்களும் டிரம்ப் ஆதரவாளர்களால் சமூக வலைதளங்களில்




‘மீம்ஸ்’ அதிகம் பகிரப்பட்டு வருகிறது. வெனிசூலா போன்ற நாடுகளில் கம்யூனிஸ்ட் ஆட்சியில் மக்களுக்கு எதிராகவும் ஜனநாயகத்துக்கு விரோதமாகவும் நிகழும் அடக்குமுறைகளை கமலா ஹாரிஸ் சர்ந்த ஜனநாயகக் கட்சி பெரிய அளவில் கண்டனம் தெரிவிக்கவில்லை என்பது பொதுவான விமர்சனம்.

கமலா மீதான ‘கம்யூனிஸவாதி’ குற்றச்சாட்டுக்கு டிரம்ப் முன்வைக்கும் முக்கிய ஆதாரம், கமலா ஹாரிஸின் தந்தை டொனால்ட் ஹாரிஸ், அமெரிக்காவின் ஸ்டான்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரப் பிரிவில் மார்க்சிய பாடம் கற்பித்து வந்தர்மகள் கமலாவுக்கு அவர் கம்யூனிஸத்தை நன்றாக கற்பித்துள்ளர் என்பதுதான் ‘குற்றச்சாட்டு’.

கமலாவின் கணவர் டக்ளஸ் எம்ஹாஃப் சர்வதேச சட்ட ஆலோசனை நிறுவனத்தில் பணியாற்றி வருகிறர்அந்த நிறுவனம் கம்யூனிஸ சீன அரசுடன் நெருங்கிய தொடர்புடையது.

மேலும், கமலாவின் பெற்றோர் ஆப்பிரிக்க—அமெரிக்க கூட்டமைப்பில் உறுப்பினர்களாக இருந்தனர். அந்தக் கூட்டமைப்பு இடதுசாரி புரட்சியாளர் சே குவேரா, மறைந்த கியூபா அதிபர் ஃபிடல் காஸ்ட்ரோ ஆகியோரின் அடியொட்டி செயல்பட்டு வந்தது என்று கூறப்படுகிறது. அமெரிக்காவில் அனைத்து சமூக ஊடங்களிலும் கமலா ஒரு கம்யூனிஸ்ட் எனும் பிரசாரம் மிகவும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு பதிலளிக்கும் விதமாக, கமலாவின் தந்தை இடதுசாரி பொருளாதாரக் கொள்கையை விமர்சித்தவர் என்று 1976—இல் அவர் பணியாற்றிய ஸ்டான்ஃபோர்ட் பல்கலைக்கழக பத்திரிகையில் வெளியான செய்தியை அவரது ஆதரவாளர்கள் பகிர்ந்து வருகின்றனர்.





அமெரிக்க தேசியவாதம், வெள்ளையினவாதம் ஆகியவையே டிரம்ப்பின் பிரதான கொள்கைகள். கடந்த 2020—ஆம் ஆண்டு தொடர்ந்து இரண்டாவது முறையாக அதிபர் தேர்தலில் களமிறங்கிய டிரம்ப், ‘நான் தேர்தலில் தோல்வியுற சாத்தியமில்லை; அவ்வாறு தோற்□க அறிவிக்கப்பட்டால், அதனை ஏற்க மாட்டேன்’ என்று பிரசாரத்தின்போதே தெரிவித்தது சர்ச்சையானது. தோல்வியடைந்த பிறகும் டிரம்ப் ஆதரவாளர்கள் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் புகுந்து தாக்கியது அமெரிக்க வரலாற்றில் அதிர்ச்சி நிறைந்த நிகழ்வாக அமைந்தது. கமலா மீது இதுபோன்ற எந்த சர்ச்சையும் இல்லை என்பது அவருக்கு சாதகமான அம்சம்.

அதிபர் தேர்தலில் இந்த முறை டிரம்ப் கையிலெடுத்துள்ள தீவிர தாக்குதல் பிரசார உத்தி எந்த அளவுக்கு அவருக்கு கைகொடுக்கும் என்பது நவம்பர் 5—ஆம் தேதி நடைபெறும் தேர்தலின் முடிவில் தெரியவரும்.

அங்குள்ள பிரபல டிவி சேனல் ஒன்றுக்கு

பேட்டியளித்த கமலா ஹாரிஸ், எப்போதுவாது மது குடித்துவிட்டு சில் செய்வது தனக்கு மிகவும் பிடிக்கும் என்று ஓபனாக தெரிவித்தார். அத்துடன் நிற்காமல் நேர்காணலின் போதே பீர் ஒன்றை ஓபன் செய்து குடிக்கவும் தொடங்கினார். கடைசியாக பேஸ் பால் மேட்ச் ஒன்றைப் பார்க்கக் கணவருடன் சென்ற போது பீர் குடித்ததாகவும் கமலா ஹாரிஸ் தெரிவித்தார். கமலா ஹாரிஸின் இந்த வீடியோ இணையத்தில் இப்போது டிரெண்டாகி வருகிறது. என்று சொல்லிச் சிரித்தார். அமெரிக்காவில் புதிய அதிபரை தேர்வு செய்ய அடுத்த மாதம் 5ம் தேதி தேர்தல் நடக்கிறது. இதில் டிரம்ப் மற்றும் கமலா ஹாரிஸ் களத்தில் உள்ளனர். இதில் தற்போது வெளியாகும் சர்வேக்களில் டிரம்பை விடக் கமலா ஹாரிஸ் முன்னிலையில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க அதிபர் தேர்தல் முடியும் வரை தினமும் ஒருவருக்கு ஒரு மில்லியன் டாலர் பரிசு





கடும் விமர்சனம்: இது மட்டுமின்றி அந்த நேர்காணலில் டிரம்பை கமலா ஹாரிஸ் மிகக் கடுமையாக விமர்சித்துப் பேசினார். டிரம்ப் அதிபர் காலத்தைக் குறிப்பிட்டுப் பேசிய கமலா ஹாரிஸ், "நீங்கள் அதிபராக இருந்த போதுதான் நாம் பல லட்சம் வேலைகளை இழந்தோம். உற்பத்தித் துறையில் பின்னடைவைச் சந்தித்தோம். ஆட்டோமொபைல் துறையில் பின்னடைவைச் சந்தித்தோம். இதற்காகத் தான் மக்கள் உங்களுக்குத் தோல்வியைப் பரிசாக அளித்தார்கள். ஆனால், அதை ஏற்கும் பக்குவம் கூட உங்களுக்கு இல்லை" என்று சரமாரியாக விமர்சித்தார். ரொம்பவே சீரிஸயாக பேசுவதை உணர்ந்தாரோ என்னவோ திடீரென டோனை மாற்றிய கமலா ஹாரிஸ், "நான் பீர் குடித்தால் இதுபோலத் தான் பேசிக் கொண்டே இருப்பேன்"




வழங்க உள்ளதாக உலக பெரும் பணக்காரரும், டெஸ்லா உள்ளிட்ட நிறுவனங்களின் தலைவரான எலான் மஸ்க் அறிவித்துள்ளார். அமெரிக்க அதிபர் வேட்பாளர் டொனால்டு டிரம்புக்கு ஆதரவாக குரல் கொடுத்து வரும் மஸ்க் இவ்வாறு கூறியுள்ளார்.

பிரசார குழுவிற்கு உதவி அளிக்கும் வகையில் இணையதளத்தை தொடங்கியுள்ளார். இதில் உருவாக்கப்பட்டு இருக்கும் பெட்டிஷனில் கருத்து சுதந்திரம் மற்றும் ஆயுதங்கள் வைத்து இருக்கும் உரிமை ஆகியவற்றிக்கு நான் ஆதரவு அளிக்கிறேன் என்று கூறப்பட்டுள்ளது. எலான் மஸ்க், "சவாலான மாகாணங்களில் வாக்காளர்களை ஒருங்கிணைக்கவும் பதிவு செய்ய வைக்கவும் இந்த பிரசி குழு உதவும்" என்றார்.

அமெரிக்காவில் அதிபர் தேர்தல் பிரசாரங்கள் சூடுபிடித்து வருகிற சூழலில் பாடகி டெய்லர்




ஸ்விஃப்ட்டின் ரசிகர் பட்டாளம் ஒருவருக்கு ஒருவர் அரசியல் பற்றிய புரிதலையும் அமெரிக்க தேர்தல் களம் குறித்த அறிவையும் பரிமாறிக் கொள்கின்றனர்.

29 வயதான நோயல் ட்ரேக் யுடாவில் வசிக்கிறார். சென்ற வருடம் வரை அவருக்கு அரசியல் பற்றிய அபிப்ராயம் குறைவாகவே இருந்துள்ளது. 2020—ஆம் ஆண்டு நடைபெற்ற அதிபர் தேர்தலில் அவர் பெரிய ஆர்வத்துடன் வாக்கு செலுத்தவில்லை.

“ஆனால் ஸ்விஃப்டிகள் (அமெரிக்கப் பாடகி டெய்லர் ஸ்விஃப்ட்டின் ரசிகர்கள் தங்களை இவ்வாறு அடையாளப்படுத்திக் கொள்கின்றனர்) நாங்கள் அரசியல் குறித்து ஆன்லைனில் ஒருவருடன் மற்றொருவர் உரையாடுகிறோம். இந்தத் தேர்தல் காலத்தில் நான் அரசியல் குறித்து பேசும் விதத்தை இந்த உரையாடல்கள் மாற்றியுள்ளன,” என்று பிபிசியிடம் கூறினார் நோயல். ஒரு மாதத்திற்கு முன்பு பாப் இசைப் பாடகியும் பாடலாசிரியருமான டெய்லர் ஸ்விஃப்ட் ஜனநாயகக் கட்சியின் அதிபர் வேட்பாளரான கமலா ஹாரிஸிற்கு இந்தத் தேர்தலில் ஆதரவு அளிப்பதாக அறிவித்திருந்தார். அதனைத் தொடர்ந்து நோயல், ‘கமலாவுக்காக ஸ்விஃப்டிகள்’ என்ற குழுவை சமூக வலைதளத்தில் பின் தொடர ஆரம்பித்தார்.

கமலாவுக்கு அதிகாரப்பூர்வமாக பரப்புரையை மேற்கொண்டு வரும் குழுவுக்கும் இந்த குழுவுக்கும் சம்பந்தமில்லை என்றாலும் கூட, இந்த குழுவினர் தொடர்ச்சியாக பரப்புரை குழுவின் உறுப்பினர்களுடன் பேசி வருகிறனர்.ஒரே எண்ண ஓட்டத்துடன் இருக்கும் ஸ்விஃப்டிகளுடன் பேச ஆரம்பித்த பிறகு நோயல் தன்னுடைய மாகாணத்தில் நடைபெற்று வரும் தேர்தல் பரப்புரையை உன்னிப்பாகக் கவனிக்கத் துவங்கினார்.




நோயல் மட்டுமல்ல, நோயலைப் போன்று கிட்டத்தட்ட ஒரு டஜன் ஸ்விஃப்டிகளை அடையாளம் கண்டுள்ளது பிபிசி. டெய்லர் ஸ்விஃப்ட் மற்றும் அவருடைய மிகப்பெரிய ரசிகர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவுகளைப் பார்த்து ஊக்கம் அடைந்து வாக்களிக்கச் செல்வதாகவும், தேர்தல் தொடர்பான செயல்பாடுகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதாகவும் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால், நீங்கள் டெய்லர் ஸ்விஃப்டின் ரசிகராக இருக்கின்ற ஒரே காரணத்திற்காக அவரைப் போன்று வாக்களிக்கப்பீர்கள் என்று அர்த்தமில்லை என்பதையும் நான் உணர்ந்து கொண்டேன்.

கமலாவுக்கு ஆதரவாக ஸ்விஃப்டிகள்

மீம்களை ஆர்வத்துடன் சமூகவலைதளங்களில் பகிரும், டெய்லர் ஸ்விஃப்ட்டின் ரசிகையான ஐரின் கிம் ஒரு ரசிகையில் இருந்து ஒரு அரசியல் வியூக வகுப்பாளராக மாறியிருக்கிறார். இது எப்படிச் சாத்தியம் என்று நான் ஆய்வு செய்து வந்தேன். ஐரின் கிம் ‘ஸ்விஃடிஸ் ஃபார் கமலா’

என்ற சமூக வலைதள பிரசாரக் குழுவின் இணை நிறுவனர். கிம் அல்லது அவரைப் பின்தொடரும் நபர்கள் பயன்படுத்திய வியூகங்கள் ஏதேனும் உண்மையாகவே மாற்றங்களை ஏற்படுத்தினவா?

கடந்த ஒரு மாதமாக ஸ்விஃப்டிஸ் ஃபார் கமலா பக்கத்தில் பகிரப்படும் பதிவுகளை ‘லைக்‘ செய்து ‘மிதமான பழமைவாத’ அரசியல் பார்வையைக் கொண்ட அவருடைய ஆண் நண்பரையும் கமலா ஹாரிஸுக்கு வாக்களிக்கும் படி மாற்றிவிட்டதாக அவர் தெரிவிக்கிறார்.

கமலா—டிரம்ப் பிரபலங்கள் யாரை ஆதரிக்கின்றனர்?




‘கமெண்ட்’ செய்யும் ஒரு சிலருக்கு நான் குறுஞ் செய்திகளை அனுப்பினேன். ஒரு சிலர் ஏற்கனவே ஜனநாயகக் கட்சியின் ஆதரவாளர்களாக இருக்கின்றனர். ஒரு சிலர் அவ்வாறு இல்லை. 27 வயதான டெஸ்டினியை எடுத்துக் கொள்ளுங்கள். தன்னுடைய முழுப் பெயரைக் கூற விரும்பாத அவரும் அவருடைய ஆண் நண்பரும் ‘அரசியல் ஆர்வமில்லாதவர்கள்’ என்று கூறுகிறார். ஆனால் இந்த ஸ்விஃப்டிஸ் ஃபார் கமலா பக்கத்தில் பதிவு செய்யப்படும் பதிவுகள் இந்த தேர்தலில் ஜனநாயகக் கட்சிக்கு வாக்களிக்க அவர்கள் எடுத்த ஆதரிக்கும் வகையில் அமைந்துள்ளன என்று கூறுகிறார். “என்னைப் போன்ற கொள்கைகளைக் கொண்ட பெண் ஒருவர் அதிபராக வர வேண்டும் என்று நான் விரும்புகிறேன். உண்மையில் இந்த ஒரு காரணம்தான் தேர்தலில் வாக்களிக்கத் தேவையான உத்வேகத்தை முதன்முறையாக கொடுத்துள்ளது,” என்று கூறுகிறார் டெஸ்டினி. இதே பதிவுகளை பயன்படுத்தி,




பிரபலங்கள் அறிவிக்கும் ஆதரவு மற்றும் அவர்களின் ரசிகர்கள் உருவாக்கும் அரசியல் உள்ளடக்கங்கள், பணம் செலுத்தி செய்யப்படும் விளம்பரங்கள் போன்று இல்லாமல் நம்பத்தகுந்தவையாக இருக்கின்றன. மக்களை வெளியே சென்று வாக்களிக்க வைக்கும் வகையில் தாக்கத்தை ஏற்படுத்துவதில் பிரபலங்களின் ‘உண்மைத்தன்மை’ பங்காற்றுகிறது என்கிறது ஹார்வர்ட் பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஒரு ஆய்வு. சரியான தகவல்கள் இல்லாதது, நம்பிக்கையின்மை, ஊக்கமின்மை ஆகிய காரணங்களால் மக்கள் வாக்களிக்காமல் இருக்கின்றனர். இந்தப் பிரச்னையைத் தீர்க்க, பிரபலங்களின் ‘சமூக அந்தஸ்து’ உதவுவதாக இந்த ஆய்வின் ஆசிரியர் ஆஷ்லி ஸ்பில்லேன் கூறுகிறார். கமலா ஹாரிஸுக்கு ஸ்விஃப்ட் மட்டுமின்றி பியான்ஸ் மற்றும் இதர பிரபலங்கள் ஆதரவை வழங்கியுள்ளனர்.

டொனால்ட் டிரம்பிற்கும் பிரபலங்கள் ஆதரவை வழங்கி வருகின்றனர். கிட் ராக், ஈலோன் மஸ்க், ஜான் வொய்ட், யூடியூப் பிரபலங்களும் ஆதரவு

அளித்துள்ளனர்.இளம் பெண்கள் மத்தியில் கமலா ஹாரிஸின் அரசியல் கொள்கைகளை டெய்லர் ஸ்விஃப்டின் ஆதரவு கொண்டு போய் சேர்த்தது போன்றே, நெல்க் பாய்ஸ் போன்ற பிரபலங்களின் ஆதரவு டொனால்ட் டிரம்பை இளம் ஆண்கள் மத்தியில் கொண்டு போய் சேர்த்திருக்கிறது. டிரம்பின் உண்மையான ஆதரவாளர்களும் ஒரு ரசிகர் பட்டாளம் போலவே செயல்படுகின்றனர்.

இந்த ஆதரவு எதிர்மறைத் தாக்கதையும் ஏற்படுத்தக் கூடும். கருத்துக் கணிப்பு முடிவுகள் கூறுவது என்ன? செப்டம்பரின் பிற்பாதியில், குயின்னிபியாக் பல்கலைக்கழகம் சார்பில் கமலா ஹாரிஸுக்கு ஸ்விஃப்ட் ஆதரவு அளித்தது தொடர்பாக கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. அதில் பங்கேற்றவர்களில் 9% நபர்கள், ஸ்விஃப்டின் ஆதரவு கமலாவின் போட்டியை உற்சாகமாக்கியுள்ளது என்று கூறியுள்ளனர். 13% நபர்கள் குறைவான உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது என்று கூறியுள்ளனர்.

ஈலோன் மஸ்கின் ட்ரம்ப் ஆதரவு குறித்த கருத்துக் கணிப்பில் 13% பேர் அதிக உற்சாகமாக உணர்ந்தனர் என்றும் 21% பேர் குறைவான உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் கூறியுள்ளனர். நவம்பர் மாத இறுதியில்தான் இந்த தேர்தலில், பிரபலங்கள் மற்றும் அவர்களின் ரசிகர்கள் பட்டாளம் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர் என்பதை அறிந்து கொள்ள முடியும்.

கடுமையான போட்டியாக பார்க்கப்படும் இந்த தேர்தலில் இது போன்ற ஆன்லைன் ஆதரவு குழுவினர் மக்களை வாக்களிக்க ஊக்குவிக்க இயலும். குறிப்பாக சில ஆயிரம் வாக்குகள் வித்தியாசம் வெற்றி தோல்வியை உறுதி செய்யும் மாகாணங்களில் இவர்களின் வாக்குகள் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும்.இத்தகைய மாகாணங்களை கவனத்தில் கொண்டு செயல்பட்டு வருவதாக கூறுகிறார் ‘ஸ்விஃப்டிஸ் ஃபார் கமலா’ குழுவின் இணை நிறுவனர் கிம். இந்த தேர்தலில் அதிகமாக கவனிக்கப்பட்ட மாகாணங்களில் ஒன்றாக இருக்கும் அரிசோனாவை சேர்ந்தவர் பெக்கி ரோவ்.


அவர், “கருக்கலைப்பு உரிமைகளுக்கான கமலா ஹாரிஸின் நிலைப்பாடுதான் நான் அவருக்கு ஆதரவு அளிக்க காரணமாக அமைந்தது,” என்று தெரிவிக்கிறார்.அமெரிக்காவில் நடைபெறும் தேர்தல் பரப்புரைகள் அனைத்தும் பாரம்பரிய முறைகளை பின்பற்றுகின்ற சூழலில், ‘ஸ்விஃப்டிஸ் ஃபார் கமலா’ அதில் ‘ஒரு ட்விஸ்ட்டை’ வைத்திருக்கின்றனர். அவர்கள் எப்போதெல்லாம் நிகழ்வுகளை நடத்துகின்றனரோ, அப்போதெல்லாம் அரசியல் கருத்துகளை உள்ளடக்கிய ‘ஃப்ரெண்ட்ஷிப் ப்ரேஸ்லெட்களை’ (கைப்பட்டை) வழங்குகின்றனர்.




ஸ்விஃப்டுக்கு நம்பிக்கையான ஒரு ரசிகர் வட்டம் உள்ளது. அனைத்து தரப்பினருக்கும் நியாயமாக நடந்து கொள்ள வேண்டுமென்றால் அவர் அரசியல் விவகாரங்களில் இருந்து விலகியே இருக்க வேண்டும் என்று என்னிடம் கூறினார் ப்ரி.டொனால்ட் டிரம்ப் ஸ்விஃப்டின் ஆதரவைப் பெறவில்லை என்றாலும் அவரின்



ரசிகர் பட்டாளங்களின் வாக்குகளைப் பெற, ஸ்விஃப்ட் டிரம்பை ஆதரிக்கும் ஏ.ஐ. மீமை அவரின் ஆதரவாளர்கள் பதிவு செய்தனர். உண்மையில் டிரம்ப் அந்த மீமை பகிர்ந்த பின்பு தான், தன்னுடைய ஆதரவு கமலாவுக்கு என்று வெளிப்படையாக ஸ்விஃப்ட் பதிவு செய்ய நேரிட்டது. கமலா ஹாரிஸுக்கு ஆதரவு வழங்கும்




‘ஸ்விஃப்டிஸ் ஃபார் கமலா ‘குழுவினர் உட்பட ஒருவரின் அரசியல் கொள்கைகளுக்காக நான் அவரை ஒரு போதும் வெறுக்கமாட்டேன் என்று கூறுகிறார் ப்ரி.

ஆனால் சமூக வலைதளங்களில் நடைபெறும் விவாதங்கள் அனைத்தும் நட்பு ரீதியில் மட்டுமே நடைபெறும் என்று கூற இயலாது. சூடான விவாதங்கள் ஸ்விஃப்டின் ரசிகர்கள் எப்போதும் காணும் ஒன்று தான் என்று குறிப்பிடும் கிம், இந்த பரப்புரையில் நெறிமுறைகளை கொண்டுள்ளதாக கூறுகிறார்.



### அமெரிக்க அதிபர் தேர்தலில் ஆதிக்கம் செலுத்தும் கழுதை மற்றும் யானை

ஜனநாயக கட்சியின் சின்னமாக கழுதை உள்ளது. இது 1828இல் தொடங்கியதாக கருதப்படுகிறது. ஜனநாயக கட்சி வேட்பாளர் ஆண்ட்ரூ ஜாக்ஸனை கழுதை என பொருள்படும் விதமாக ‘ஜாக் ஆஸ்’ என குடியரசுக் கட்சியினர் அழைத்தனர்.

இதைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்ட அவர், கழுதையை பிரசாரங்களில் சின்னமாகப் பயன்படுத்திக்கொண்டார். கழுதை பிடிவாதம் நிறைந்தது, முட்டாள்தனமானது என விமர்சகர்கள் பார்த்தனர். ஆனால், அது அடக்கமானது மற்றும் புத்திசாலிதனமானது என ஜனநாயகவாதிகள் சிலர் கூறினர்.

இப்போது குடியரசு கட்சியினரின் யானையைப் பற்றி பார்க்கலாம். 1860களில் ஆப்ரஹாம் லிங்கனின் தேர்தல் பிரசாரங்களின்போது, செய்தித்தாள்களில் இது முதன்முதலில் பயன்படுத்தப்பட்டது என சிலர் கூறுகின்றனர். ஒருவேளை வலிமையின் சின்னமாக இருக்கலாம். எனினும், கார்டூனிஸ்டும் குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவருமான தாமஸ் நஸ்ட் 1874இல் இதை பத்திரிகையில் வரைந்த பின்னரே அது பிரபலமடையத் தொடங்கியது.

ஜனநாயகக் கட்சி ஆதரவாளர்கள் யானையை முட்டாள்தனமானது, விகாரமானது எனக் கூறலாம். ஆனால், குடியரசுக் கட்சியினர் இதை வலிமை மற்றும் புத்திசாலிதனத்தின் சின்னம் என்று கூறினர். 19ஆம் நூற்றாண்டின் இறுதியில், இந்த இரு சின்னங்களும் அமெரிக்காவின் இரு பிரதான கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்த பரவலாகப் பயன்படுத்தப்பட்டன.

# கருத்துப் ப(ா)டம்

நன்றி: தினமலர்




# சொல்றாங்க... சொல்றாங்க...



*"ரஷிய அதிபருடன் பேச்சுவார்த்தைக்கு இடமில்லை!"*

**கமலா ஹாரிஸ்**


*(இப்படி எல்லாம் சொல்லிக்கிட்டே இருந்தா எப்போதான் சமரசம் வரும்?)*



*"மேற்கத்திய நாடுகளின் ஆதரவின்றி போரில் இஸ்ரேல் வெற்றி பெறும்."*

**நெதன்யாகு**

*(என்னய்யா இது? போரே வேண்டாம்னு சொல்லத் தோணலையா இப்பவும்?)*



*"இறுதி மூச்சு வரை நடிப்பேன்; யாராவது ஆக்‌ஷன் சொல்ல நான் சாக வேண்டும்."*

**ஷாருக்கான்**

*(செய்யும் தொழிலே தெய்வம் என்பதை உண்மையாக்கத் துடிக்கும் ஹீரோ!)*



*"அரசியல் தொழில்நுட்பம் மட்டும்தான் மாற வேண்டுமா? அரசியல் மாறக்கூடாதா?"*

**விஜய்**

*(மாறத்தான் வேணும்! அந்த மாற்றத்தை உண்மையா உண்டு பண்ணுவீங்கன்னா உங்களை மாதிரி ஆள்தான் அரசியலுக்கு வேணும்!)*

# நிலைக்குமா

## இலங்கை அதிபர் தேர்தலும் இந்தியாவும்

இலங்கையின் புதிய அதிபராக மக்கள் விடுதலை முன்னணி கட்சியின் தலைவர் அநுர குமார திஸ்ஸநாயக பதவியேற்றுள்ளார்.

இலங்கையின் புதிய அதிபராக ஜனதா விமுக்தி பெரமுன (மக்கள் விடுதலை முன்னணி) கட்சியின் தலைவர் அநுர குமார திசாநாயக கடந்த திங்கள்கிழமை பதவியேற்றுள்ளார். அந்த நாட்டில் இடதுசாரி தலைவர் ஒருவர் அதிபராகத் தேர்வு பெற்றுள்ளது இதுவே முதல் முறையாகும். கரோனா தீநுண்மி பரவலுக்குப் பிறகு அந்த நாட்டில் பிரதான வருவாய் அளிக்கும் தொழிலான சுற்றுலாத் தொழில் முடங்கியதையடுத்து கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. அத்தியாவசிய பொருள்களின் விலை வரலாறு காணாத உச்சத்தை தொட்டது. அந்த நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு கடனுதவி அளித்த சர்வதேச நிதியம் (ஐஎம்எஃப்) விதித்த நிபந்தனைகளால் விலைவாசி தாறுமாறாக ஆனதால் மக்கள் சொல்லொணா துயரத்தை அனுபவித்தனர்.

அதனால் பொங்கி எழுந்த பொதுமக்கள் பெரும் போராட்டத்தை 2022—ஆம் ஆண்டு முன்னெடுத்தனர். அதிபராக இருந்த கோத்தபய ராஜபட்ச ஆட்சியில் இருந்து அகற்றப்பட்டார். அவரது மாளிகை சூறையாடப்பட்டது. ரணில் விக்ரமசிங்கவின் வீடு கொளுத்தப்பட்டது. இந்தப் போராட்டத்தில் அநுரகுமார திசாநாயகவின் ஜனதா விமுக்தி பெரமுன முக்கிய பங்கு வகித்தது. ஒரு வகையில், அந்தப் போராட்டத்தின் பலன்களை அநுரகுமார இப்போது பெற்றுள்ளார் எனலாம்.

2019—இல் முதல் முறையாக அதிபர் தேர்தலில்








# நம்பிக்கை?

## ம. விஸ்வநாதன்

அநுரகுமார போட்டியிட்டார். அப்போது வெறும் 3% வாக்குகள் மட்டுமே பெற்று கோத்தபயவிடம் தோல்வி அடைந்தார். இப்போது இரண்டு சுற்று வாக்கு எண்ணிக்கைக்குப் பின்னர் 57.40 லட்சம் வாக்குகள் பெற்று கடந்த 70 ஆண்டுகளுக்கும் மேலாக கோலோச்சி வந்த ரணில் விக்ரமசிங்க, சஜித் பிரேமதாச, மகிந்த ராஜபட்ச ஆகியோரது கட்சிகளைப் பின்னுக்குத் தள்ளி அநுரகுமார திசாநாயக வெற்றி பெற்றது மக்கள் மாற்றத்தை விரும்புவதன் அறிகுறியாகும்.

ஊழல் ஒழிப்பு, பொருளாதார மீட்சி ஆகியவற்றை முன்னிறுத்தி அநுரகுமார பிரசாரம் மேற்கொண்டார். ஏற்கெனவே ஆட்சியில் இருந்த கட்சிகள் மீது மக்கள் நம்பிக்கை இழந்ததால், கடந்த தேர்தலில் வெறும் 3% வாக்குகளைப் பெற்ற அநுரகுமார இப்போது இரண்டு சுற்றுகளையும் சேர்த்து 56% வாக்குகள் பெற்றுள்ளார். ஜனதா விமுக்தி பெரமுன வன்முறையில் தொடங்கி ஜனநாயக நடைமுறைக்கு மாறிய கட்சியாகும். உலகின் முதல் பெண் பிரதமர் என்ற பெருமையைப் பெற்ற சிறிமாவோ பண்டாரநாயக ஆட்சிக் காலத்தில் 1971—இல் ஜனதா விமுக்தி பெரமுன ஆயுதம் தாங்கிய கிளர்ச்சியில் ஈடுபட்டது. அப்போது சுமார் 20,000 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். இந்தக் கிளர்ச்சியை இலங்கை அரசு அடக்கிவிட்டது.






அதன் பின்னர், அந்த நாட்டில் சிறுபான்மையினரான தமிழ் மக்களுக்கு அதிகாரம் அளிக்க இந்தியா — இலங்கை அரசுகள் 1987—இல் ஒப்பந்தம் செய்துகொண்டபோது தமிழர்களுக்கு அதிகாரம் அளிக்கக் கூடாது என்று அந்தக் கட்சி கிளர்ச்சியில் ஈடுபட்டது. சிறுபான்மைத் தமிழரின் அரசியல் தன்னாட்சிக் கோரிக்கைக்குத் தீர்வு காண்பதில் இந்தியா நேரடியாகத் தலையிட்டது. இந்த தலையீடு இறையாண்மைக்கு இழைத்த துரோகம் என்று கருதி, இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டை ஜேவிபி எடுத்தது.

1994—இல் வன்முறைப் பாதையைக் கைவிட்டு ஜனநாயகப் பாதைக்குத் திரும்பி தேர்தல்களில் பங்கெடுக்கத் தொடங்கியது. கம்யூனிஸ்ட் கட்சி என்பதால் கொள்கை ரீதியாகவே சீனாவுக்கு நெருக்கமாகவே ஜனதா விமுக்தி பெரமுன இருக்கும் என்பது பொதுவான கருத்தாகும்.

இதற்கு முன்பு, தங்கள் நாட்டு பால் நிறுவனங்களுக்கு கேடு விளைவிக்கும் என்பதால் அமுல் நிறுவனம் இலங்கையில் வர்த்தகத்தில் ஈடுபட அநுரகுமார எதிர்ப்பு தெரிவித்தார். காற்றாலை நிறுவனம் தொடங்க அதானி குழுமத்துடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை ரத்து செய்வேன் என்றார். இவரது எழுச்சியை மோப்பம் பிடித்ததாலோ என்னவோ, அவருக்கு இந்தியா அழைப்பு விடுத்தது. இந்த அழைப்பை ஏற்று கடந்த பிப்ரவரியில் புது தில்லிக்கு வந்த அநுரகுமார வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜீத் தோவல் ஆகியோரை சந்தித்தார். பிரபலமாகத் தொடங்கிய பின்னர் அவரது நிலைப்பாட்டில் சிறிய மாற்றங்களைக் காண முடிகிறது. தனியார்மயத்தை தான் முழுமையாக எதிர்க்கவில்லை என்றும், மற்ற நாடுகளுக்கு எதிராக இலங்கையை பயன்படுத்த எந்த நாட்டையும் அனுமதிக்க மாட்டேன் என்றும் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது. கடந்த 2022—ஆம் ஆண்டு கடும் பொருளாதார நெருக்கடியில் இலங்கை சிக்கித் தவித்தபோது, உடனடியாக ஆதரவுக் கரம் நீட்டியது சீனா அல்ல, இந்தியாதான் என்பது அவர் அறியாததல்ல. இலங்கை முழுமையாக இந்தியாவைப் புறக்கணிப்பது என்பது சாத்தியமல்ல. நடந்து முடிந்த தேர்தலில், தமிழர்களுக்கு அதிகாரம் அளிக்கும் 1987 ஒப்பந்தம் குறித்து சஜித் பிரேமதாச தவிர எவரும் வாக்குறுதி அளிக்கவில்லை. தமிழர்கள் அதிகம் வாழும் மாவட்டங்களில் சஜித் பிரேமதாச சுமார் 42% வாக்குகளும், அநுரகுமார 15% வாக்குகளும் பெற்றுள்ளனர்.




பொதுவாக இந்தியாவுக்கு சாதகமாக கருதப்பட்ட ரணில் விக்ரமசிங்க ஆட்சியில் இருந்தபோதே தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவது தொடர்கதையாகவே இருந்தது. சமீபகாலமாக மீனவர்களுக்கு கோடிக்கணக்கான ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுவருகிறது. உள்நாட்டில் கடும் நெருக்கடி, ஆட்சி செய்து அனுபவம் இல்லாதது போன்றவற்றை எதிர்கொள்ளும் அநுரகுமார அந்த நாட்டில் உள்ள தமிழர்களின் பிரச்னைகளுக்கும், தமிழக மீனவர்களின் பிரச்னைகளுக்கும் எவ்வாறு தீர்வு காணப் போகிறார் என்பதற்கு காலம்தான் பதில் சொல்லும்.



ராஜபக்ஸ குடும்பம் கடந்த 87 ஆண்டுகளில் முதன் முறையாக சொந்த மண்ணில் போட்டியிடாதது ஏன்? இலங்கை அரசியல் வரலாற்றில் தவிர்க்க முடியாத அரசியல் குடும்பமாக திகழ்ந்த ராஜபக்ஸ குடும்பம், இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் தனது சொந்த மண்ணில் போட்டியிடாமல் பின்வாங்கியுள்ளது. ராஜபக்ஸ குடும்பத்தின் சுமார் 87 வருட கால அரசியல் வாழ்க்கையில், சொந்த மண்ணில் அவர்கள் தேர்தலை சந்திக்காமல் இருப்பது இதுவே முதல் முறையாகும்.

இலங்கையில் 3 தசாப்தங்கள் நீடித்த உள்நாட்டு போர், 2009—ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஸ தலைமையிலான அரசாங்கத்தினால் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. அன்று முதல் இலங்கையின் தவிர்க்க முடியாத ஆட்சியாளர்களாக ராஜபக்ஸவின் குடும்பத்தினர் விளங்கிய போதிலும், 2015—ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஸ மக்களால் தோற்கடிக்கப்பட்டார். எனினும், 2019—ஆம் ஆண்டு மீண்டும் ராஜபக்ஸ குடும்பம் ஆட்சி அமைத்த நிலையில், அப்போது தெரிவான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸவின் ஆட்சியில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்கு பின்னர், ராஜபக்ஸ குடும்பத்தின் மீதான நம்பிக்கையை மக்கள் முழுமையாக இழந்தனர்.

இதையடுத்து, 2022ம் ஆண்டு ஏற்பட்ட பாரிய போராட்டத்திற்கு மத்தியில் கோட்டாபய ராஜபக்ஸ பதவி விலகினார். ராஜபக்ஸ குடும்பத்தின் பிடியில் இருந்து ஆட்சி, அதிகாரம் மீண்டும் நழுவியது.

அதன் பின்னர் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஸ குடும்பத்தின் அரசியல் வாரிசாக நாமல் ராஜபக்ஸ களமிறக்கப்பட்டார். ஆனால் அவர் போட்டியில் வெற்றியடையவில்லை. இந்த நிலையில், தற்போது நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலில் ராஜபக்ஸ குடும்பத்தைச் சேர்ந்த எவரும் அவர்களது சொந்த மாவட்டமான ஹம்பாந்தோட்டையில் போட்டியிடவில்லை. ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் ராஜபக்ஸ குடும்பம் அரசியல் செயற்பாடுகளிலிருந்து விலகியுள்ள முதலாவது சந்தர்ப்பமாக இது காணப்படுகின்றது. எனினும், ராஜபக்ஸ குடும்பத்திலுள்ள ஷஷிந்திர ராஜபக்ஸ மாத்திரம் இம்முறை தேர்தலில் மொனராகலை மாவட்டத்தில் போட்டியிடுகின்றார்.

2015ம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த தோல்வி அடைந்தார். அத்தோல்வி ராஜபக்ஸ குடும்ப அரசியலின் வீழ்ச்சியின் முதல்படியாக காணப்பட்டது. இலங்கையில் நாடாளுமன்ற முறைமை அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னதாக இலங்கை அரசாங்க சபை (இலங்கை அரசு சபை) செயல்பட்டு வந்தது. ஆங்கிலேயர்கள் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில், 1931—ஆம் ஆண்டு இந்த அரசாங்க சபை உருவாக்கப்பட்டது. இந்த சபையில் இருந்தே, ராஜபக்ஸ குடும்பத்தின் அரசியல் நடவடிக்கை ஆரம்பமாகியிருந்தது.



61 உறுப்பினர்களை கொண்ட அரசாங்க சபையின் உறுப்பினராக, ராஜபக்ஸ குடும்பத்தின் முதலாவது அரசியல்வாதியாக கருதப்படும் டி.எம். ராஜபக்ஸ அங்கம் வகித்தார். அன்று முதல்



ராஜபக்ஸவின் குடும்பம் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி, தேசிய அரசியலில் முக்கிய இடம் வகித்து வந்துள்ளது. டொன் மெத்திவ்ஸ் ராஜபக்ஸ என அழைக்கப்பட்ட டி.எம்.ராஜபக்ஸவின் அரசியல் செயற்பாடுகளுக்கு ஆதரவாக செயற்பட்ட டி.ஏ.ராஜபக்ஸ, டி.எம். ராஜபக்ஸவின் மறைவுக்கு பின்னர் தனது செயற்பாடுகளை ஹம்பாந்தோட்டையில் ஆரம்பித்திருந்தார்.





டி.ஏ.ராஜபக்ஸ அப்போது நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்டு அரசாங்க சபைக்கு தெரிவு செய்யப்பட்டார். 1947—ஆம் ஆண்டு நாடாளுமன்ற முறைமை அறிமுகப்படுத்தப்பட்டதை அடுத்து நடைபெற்ற தேர்தலில் டி.ஏ.ராஜபக்ஸ ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்டு, நாடாளுமன்ற உறுப்புரிமையை பெற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து. ஐக்கிய தேசியக் கட்சியில் ஏற்பட்ட முரண்பாடுகளை அடுத்து 1951—ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் தன்னை இணைந்துக் கொண்டு, அரசியலை தொடர டி.ஏ.ராஜபக்ஸ தீர்மானித்தார். அவ்வாறு பல்வேறு சவால்களுக்கு மத்தியில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியுடன் ராஜபக்ஸ குடும்பத்தின் அரசியல் தொடர ஆரம்பித்தது. சமல் ராஜபக்ஸ, மஹிந்த ராஜபக்ஸ, பஷில் ராஜபக்ஸ, கோட்டாபய ராஜபக்ஸ உள்ளிட்டோர் டி.ஏ.ராஜபக்ஸவின் மகன்கள். 1967—ஆம் ஆண்டு டி.ஏ.ராஜபக்ஸவின் மறைவுக்கு பின்னர், அவரது புதல்வரான மஹிந்த ராஜபக்ஸ 1970—ஆம் ஆண்டு காலப் பகுதியில் நேரடி அரசியலில் நுழைந்தார்.




அன்று முதல் மஹிந்த ராஜபக்ஸ, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி வந்தார். அவரை தொடர்ந்து, சமல் ராஜபக்ஸ, பஷில் ராஜபக்ஸ, கோட்டாபய ராஜபக்ஸ உள்ளிட்ட ராஜபக்ஸ குடும்ப உறுப்பினர்கள் தொடர்ச்சியாக அரசியலுக்குள் பிரவேசித்தனர்.நாடாளுமன்ற உறுப்பினராக, அமைச்சராக, பிரதமராக, ஜனாதிபதியாக பதவி வகித்த மஹிந்த ராஜபக்ஸ, உள்நாட்டு போரிலும் வெற்றி கண்டார். அதன் பின்னர், மஹிந்த, கோட்டாபயவை உள்ளடக்கிய ராஜபக்ஸ குடும்பம் அசைக்க முடியாத ஒரு அரசியல் குடும்பம் என்ற நிலையை எட்டியது. அந்த பின்னணியில், 2015—ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஸ அடைந்த தோல்வி ராஜபக்ஸ குடும்பத்தின் வீழ்ச்சியின் முதல்படியாக கருதப்பட்டது. பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியிலிருந்து ராஜபக்ஸ குடும்பம் வெளியேறியது.

ஐக்கிய தேசியக் கட்சியில் தமது அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்த ராஜபக்ஸ குடும்பம், பின்னர் சுதந்திர கட்சியுடன் பல தசாப்தங்கள் தொடர்ந்தது. 2015 தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியுடனான உறவை முடிவுக்கு கொண்டு வந்தது ராஜபக்ஸ குடும்பம். 2016—ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி மஹிந்த ராஜபக்ஸ தலைமையில் ஸ்தாபிக்கப்பட்டது. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியிலிருந்து வெளியேறிய ராஜபக்ஸ குடும்பம், இதர உறுப்பினர்களின் அங்கத்துவத்துடன் இந்த கட்சியை ஆரம்பித்தது.

தாமரை மொட்டு சின்னத்தை தேர்வு செய்த இந்த கட்சி, ஓரிரு வருடங்களிலேயே பாரிய வளர்ச்சியை எட்டியது. 2018—ஆம் ஆண்டு நடைபெற்ற




உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ராஜபக்ஸ குடும்பம் தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முதல் தடவையாக போட்டியிட்டு, மாபெரும் வெற்றியை தன்வசப்படுத்தியது.

2019—ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஸ களமிறக்கப்பட்டு, மாபெரும் வெற்றியை தன்வசப்படுத்தினார். அத்துடன், 2020—ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பெற்றது. இலங்கையில் ஆட்சியை ஒரு குடும்பம் வசப்படுத்திய பின்னணியில், இலங்கை மாபெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியது. இந்த பொருளாதார நெருக்கடிக்கு ராஜபக்ஸ குடும்பமே காரணம் என தெரிவித்து, மக்கள் வீதிகளில் இறங்கி போராட்டங்களை நடாத்த ஆரம்பித்தனர்.

இதையடுத்து, கோட்டாபய ராஜபக்ஸ பதவி விலகிய நிலையில், நாட்டில் அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டன. இடைக்கால ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க தெரிவு செய்யப்பட்டு, பொருளாதார நிலைமை வழமைக்கு கொண்டு வரப்பட்ட போதிலும், ராஜபக்ஸ குடும்பத்தின் ஆதரவுடன் ரணில் விக்ரமசிங்க செயல்பட்டார் என்ற குற்றச்சாட்டை மக்கள் முன்வைத்திருந்தனர்.இம்முறை நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட வேட்பாளர்கள் நிராகரிக்கப்பட்டு, இதுவரை ஆட்சி பீடத்தை கைப்பற்றாத மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்கவை மக்கள் தேர்வு செய்தனர். இந்த நிலையிலேயே, தற்போது நாடாளுமன்றத் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.




இலங்கையில் ஆட்சியை ஒரு குடும்பம் வசப்படுத்திய பின்னணியில், இலங்கை மாபெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியது. நாடாளுமன்றத் தேர்தலில் சமல் ராஜபக்ஸவின் புதல்வரான ஷஷிந்திர ராஜபக்ஸவை தவிர வேறு எந்தவொரு ராஜபக்ஸ குடும்ப அங்கத்தவர்களும் போட்டியிடவில்லை. குறிப்பாக ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் ராஜபக்ஸ குடும்பத்திலிருந்து எந்தவொரு வேட்பாளரும் களமிறக்கப்படவில்லை.

மஹிந்த ராஜபக்ஸ, சமல் ராஜபக்ஸ உள்ளிட்ட மூத்த அரசியல்வாதிகள் இம்முறை நாடாளுமன்ற பிரவேசத்தை தவிர்க்க முடிவெடுத்துள்ளதுடன், நாமல் ராஜபக்ஸவின் பெயர் தேசிய பட்டியலில் உள்வாங்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. நாமல் ராஜபக்ஸ தேர்தலில் போட்டியிடாத தேசிய பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்திற்கு பிரவேசிக்க முயற்சித்து வருகின்றார்.

தேசிய மக்கள் சக்தியின் ஆதரவு வெகுவாக அதிகரித்துள்ள இந்த சூழ்நிலையில், நாடாளுமன்றத் தேர்தலில் ராஜபக்ஸ குடும்பம் போட்டியிட்டால் பாரிய தோல்வியை சந்திக்கும் என்ற அச்சமே போட்டியிடாததற்கு காரணம் என்று இலங்கை அரசியல் அரங்கில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.




## தமிழே முன்... பெருமாள் பின் !

**வை**கறையில் ஓர் இலக்கியக் காட்சி (காட்சியை அகக் கண்ணால் காண்க).

ஓர் ஊரின் கோயிலுக்கு அருகே, வயல்களுக்கு நடுவே பாம்புபோல வளைந்து, நெளிந்து செல்லும் கழனிப் பாதை. அதிகாலையிலேயே வேர்க்க, விறுவிறுக்க, ஓட்டமா? நடையா? என்று யாரும் யூகிக்க முடியாததொரு பரபரப்பில் ஒருவன் ஓட்டநடை போட்டுக் கொண்டிருக்கிறான்.

யார் அது?
அட ... கார்மேக வண்ணன்... திருமால்..!
அது என்ன அவன் தோளில்?
அடடே... நாளும் தான் படுத்துக் கொண்டிருந்த பைந்நாகப் பாய்ப் படுக்கையை அவசர அவசரமாகச் சுருட்டி எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டிருக்கிறானே! பாம்பாகையால் அது விறைப்பாக இல்லாமல், துவண்டு, நெகிழ்ந்து, குழைந்து, ஓடுபவன் முதுகில் தனது வாலால் 'பட், பட்'டென அடித்து அவனுக்குத் துன்பம் தருகிறது.




வேறு என்ன நிகழ்கிறது அங்கே?

கண்ணி கண்ணிகளாகக் கட்டப்பட்ட வாசமிகு துளசிமாலை (திருத்துழாய் மாலை) பரபரப்பாய் 'ஓட்ட நடை' போடும் அவனுடைய பரந்த மார்பில் புரளுகிறது; அதிலிருந்து அருவியாய்த் தேன் வழிந்து வெள்ளம் போலப் பெருக்கெடுத்து ஓடுகிறது. அதன் காரணமாக, அவன் (திருமால்) 'ஓட்ட நடை' செல்லும் கழனிப்பாதை முழுவதும் குழைந்து சேறு போலாகிவிட்டது.

சரி, அது யார்..., பின்னால் ஒரு மங்கை...?
தட்டுத் தடுமாறி, தத்தித் தத்தி...?
ஓ... திருமகள்!
திருமால் எங்கு செல்கிறானோ அவனைப் பின்தொடர்ந்து தானும் அங்கு செல்ல விழைந்து, ஆவலால் விடுக்கென எழுந்து, உடன்





செல்ல முயன்று, தட்டுத் தடுமாறி வருகிறாள் போலும். வழிமுழுதும் முன்னோடும் திருமாலின் மாலையிலிருந்து அருவியாய்த் தேன் இறங்கிச் சேறுபோல ஆகிவிட்டதே!

மிகவும் வழுக்குகிறது திருமகளுக்கு. அதனால்தான் தத்தித் தத்தி, இந்தத் தடுமாற்ற நடை திருமால் துணைவிக்கு. யாரையோ பின்தொடர்ந்து போகும் அவசரத்தில் ஓட்டமும் நடையுமாக, 'பைந்நாகப் பாய்ச்' சுமையோடும் சென்று கொண்டிருந்த திருமால் நல்லவேளையாக ஒரு கணம் திரும்பிப் பார்த்தான். பூவாசமே செய்து புவி வாசம் சிறிதும் அறியாதது திருமகள் சீரடி.(அவள் 'வண்ணச்சீரடி மண்மகள் அறியாளே'!) அதிலும் குழ, குழ, வழு வழு, சேற்றுப்பாதையில் நடக்கவே இயலாமல் தத்தித் தத்தி, தடுமாற்ற நடை பயின்று வரும் திருமகளைக் கண்டான் திருமால்.

இராஜ முத்திருளாண்டி

தான் பள்ளி கொள்ளும்போது தனது கையையே தலையணை போல வைத்துக் கொள்பவனல்லவா அவன்? மனையாள் கையைத் தனது, கையணையைக் கொண்டு, முகந்தெடுத்தது போலக் கோர்த்து அணைத்தவாறு (இழுத்துக்) கொண்டு உடனழைத்துச் செல்கின்றான்.




அது சரி. ஏனிந்த இடப்பெயர்வு இருவருக்கும்?

பள்ளிகொண்டிருந்த இடத்தில் பூகம்பமா?

கொள்ளிடத்து வெள்ளமா?



கோவிலில் தீயா?
எதுவும் இல்லையே.
பிறகென்ன?

தான் மிகவும் விரும்பும் ஒரு பொருளுக்காக... ஒருவர் சொல்லுக்குக் கட்டுப்பட்டு... மறுபேச்சு எதுவுமே இல்லாமல்... அவர் பின்னால் தன் வழக்கமான இருப்பிடத்தையும் விட்டு திருமால் விரைந்துகொண்டிருக்கிறான். அவன்பின் திருமகளும் தொடர்கிறாள்.



இவர்கள் இருவர் மட்டுந்தானா? இல்லையே. கூடவே, பழைய மறைகளாகிய வேதங்கள் யாவும் “திருமாலே! நீ எம்மை மறந்து விட்டாயே” எனப் புலம்பிக்கொண்டே திருமால் — திருமகள் இணையின் பின் தொடர்ந்து வருகின்றனவாம்.

வேதங்களையே திருமால் மறந்து, துறந்து, எப்பொருள் நாடி இப்படிப் பைந்நாகப் பாயோடும் இடப்பெயர்வானான்? அப்பொருள்... அமுதப் பைந்தமிழ்!. திருமாலையே அவசர இடப்பெயர்வு செய்யப் பணித்தது ஓர் ஆழ்வார்... அவர் திருமழிசை ஆழ்வார்! இக்காட்சியைப் பிள்ளைத்தமிழ் இலக்கியங்களுக்கே சிகரமாகத் திகழும் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் குமரகுருபரர் வழங்குவதன் வழி அறிகிறோம்.




இதோ அப்பாடல்:

மணிகொண்ட நெடுநேமி
வலயஞ் சுமந்தாற்று
மாசுணச் சூட்டுமோட்டு
மால்களிறு பிடர்வைத்த வளரொளிவிமானத்து
வாலுளை மடங்கல்தாங்கும்
அணிகொண்டபீடிகையின் அம்பொன்முடி முடிவைத்தெம்
ஐயனொடு வீற்றிருந்த
அங்கயற் கண்ணமுதை மங்கையர்க்கரசியையெம்
அம்மனையை இனிதுகாக்க
கணிகொண்ட தண்துழாய்க்காடலைத் தோடுதேம்
கலுழிபாய்ந் தளறுசெய்யக்
கழனிபடு நடவையில் கமலத்தணங்கரசொர்
கையணை முகந்துசெல்லப்
பணிகொண்ட முடவுப் படப்பாய்ச்சுருட்டுப்
பணைத்தோள் எருத்தலைப்பப்
பழமறைகள் முறையிடப் பைந்தமிழ்ப் பின்சென்ற
பச்சைப் பசுங்கொண்டலே.

சரி. குமரகுருபரர் சொல்வது போல ‘பச்சைப் பசுங்கொண்டல்’ திருமால், ஏன் “பைந்தமிழ்ப் பின்” சென்றான்? அதற்கு ஒரு முன் கதை இருக்கிறது. சுருக்கமாகப் பார்ப்போம்.

காஞ்சியில் உறையும் பெருமாள் திருமழிசை ஆழ்வார் எனும் தனது அடியாரின் அமுதினிய பைந்தமிழ்ப் பாடல்களுக்கு ஆட்பட்டுவிட்டான். திருமழிசை ஆழ்வார் ஊரைவிட்டே செல்கிறார். அவர் போய்விட்டால் எவ்வாறு தினமும் அவர் போற்றிப் பாடும் இன் தமிழ்ப் பாடல்கேட்டு இன்புறுவது? அவர் பாடும் செந்தமிழ்த்தேன்

பாய்ந்து தன் செவி நிறைக்காமல் தனக்கு ஒருநாள் கூடக் கழிக்க இயலாதே!

அவரோ 'நான் ஊரை விட்டுச் செல்கிறேன்; நீயும் உன் பாம்பணையைச் சுருட்டி எடுத்துக் கொண்டு எம்முடன் வந்து விடு,' என கட்டளை இடுகிறார். மறுபேச்சுப் பேசாமல் தானும் அவர் பின்னால் போய்விடலாம் என்று திருமாலும் கிளம்பி விட்டானாம்!

அது சரி, திருமழிசை ஆழ்வார் ஊரைவிட்டே செல்லக் காரணம் என்ன? வாங்க... அக் கதைக்குள்... விளக்கமாகப் பார்க்கலாம்..

சென்னை பூவிருந்தவல்லிக்கு அருகிலுள்ள திருமழிசை என்ற ஊரில் பிறந்தவர். அவ்வூரின் பெயராலேயே திருமழிசை ஆழ்வார் என்றானார். 12 ஆழ்வார்கள் வரிசையில் 4—வது ஆழ்வார் என அவர் கருதப்படுகிறார். 7 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இவர் ஆரம்பத்தில் சைவநெறியாளராக இருந்து முதலாழ்வாரான பேயாழ்வாரால் வைணவத்திற்கு ஈர்க்கப்பட்டவர் எனும் செய்திகளுண்டு. தமிழுக்கு 216 பாசுரங்களை அருளியவர். அவை நான்முகன்திருஅந்தாதி (96), திருச்சந்த விருத்தம் (120) என்று அழைக்கப்படுகின்றன. இவை நாலாயிரத் திவ்யபிரபந்தத்தில் முறையே மூன்றாவதாயிரத்திலும், முதலாயிரத்திலும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. திருமழிசை ஆழ்வாரது பிரபந்தங்கள் தான் முதன்முதலில் திருமாலை வேறு தெய்வங்களுக்கு மேலாக உயர்வாகச் சொல்லியவை. திருவெஃகா தலத்தில் (காஞ்சிபுரம்) பெருமாள் கோயிலில் தனது இளவல் முறையான சீடனுமான கணிகண்ணனுடன் தங்கி அவர் இறைச் சேவை செய்து வந்தார். அவர்களின் குடிலைத் தினமும் கைம்மாறு கருதாது தூய்மை செய்துவரும் வயது முதிர்ந்த ஒரு மூதாட்டி இருந்தார். அம்மூதாட்டிக்கு ஏதாவதொரு நன்மை செய்ய எண்ணிய ஆழ்வார், ஒருநாள் அவரிடம் "நீ வேண்டுவன கேள்" எனக் கூறினார்.

அம்மூதாட்டியோ "ஐயா எனது வயது முதிர்வால் ஏற்பட்ட இயலாமையால் தங்களுக்கு முழுமையான சேவை செய்ய முடியாமல் தடுமாறுகிறேன். இளமையாக இருந்தால் இன்னும் கூடுதலாக உங்களுக்குப் பணியாற்றுவேன். வேறேதும் விருப்பமில்லை " என்றார். மூதாட்டியின் அந்த வருத்தத்தை உடனே போக்கும் வண்ணம் 'என்றும் இளமையாக இருக்கும்படி' அம்மூதாட்டிக்கு ஆழ்வார் வரம் நல்கினார். அக்கணமே முதுமையகன்று அழகிய இளமங்கையாய் அவர் மலர்ந்தார். அச்சமயத்தில் காஞ்சியை ஆண்டு வந்தது பல்லவராயன் என்ற மன்னன். ஒருநாள் நகர்வலத்தின்போது மன்னன் அந்தப் பெண்ணைக் கண்டு, கண்டதும் அவள் அழகில் மயங்கி, அவளை மணந்து கொண்டான்.




காலச் சுழற்சியில் மன்னன் இளமை குன்றி முதுமையடையத்



துவங்கினான். ஆனால் தன் மனைவி இளமை குன்றாமல் இருப்பதன் காரணத்தை அவளிடம் வினவினான். அவள் திருமழிசை ஆழ்வார் தனக்கு ‘என்றும் இளமையாக இருக்கும்படி’ வரம் நல்கியதைத் தெரிவித்தாள். தானும் அந்த ஆழ்வார் மூலம் இழந்துவரும் இளமையை மீட்டெடுக்க மன்னன் ஆசைப்பட்டான். தன் சேவகர்கள் மூலம் ஆழ்வாரின் (இளவல்) சீடனான கணிகண்ணனை அரசன் அழைத்துத் தனக்கும் என்றும் மாறாத இளமை அருள ஆழ்வாரிடம் எடுத்துரைக்கும்படி வேண்டினான்.



தனது (உடன் பிறவாத் தமையனான) குருவின் தன்மையறிந்த சீடன் கணிகண்ணன் அவ்வாறெல்லாம் ஆழ்வார் செய்ய மாட்டாரே என மிகப் பணிவுடன் எடுத்துரைத்தான்.

‘சரி, நாமே பிறகு ஆழ்வாரைப் பார்த்துக் கொள்ளலாம்’ என்று கருதி, முன்னோட்டமாகத் தன்னைப் பற்றி ஒரு பாடலேனும் பாடுமாறு ஆழ்வாரிடம் சொல்ல வேண்டும் எனக் கணிகண்ணனுக்கு மன்னன் ஆணையிட்டான். தன் குருவின் பதில் என்னவாக இருக்கும் என்று கணிகண்ணனுக்குத் தெரிந்தும் அரசன் விருப்பத்தை ஆழ்வாரிடம் தெரிவிக்கும் கடமையைச் செய்தான். எதிர்பார்த்தது போலவே ‘நாராயணனையன்றி எந்த நரனையும் பாடேன்‘ என்ற துணிவுடன் முழங்கினார் திருமழிசை. (இவருக்கு ‘உறையில் இடாதவர்’ என்றொரு பெயர் உண்டு — ‘வாளினை உறையில் இடாத வீரன் என்பது அப்பெயரின் பொருள் (இங்கு ஆழ்வாரின் நா ‘வாள்’




எனப்படுகிறது).

“ஆழ்வார் ஆண்டவனை ஏற்றிப் பாடுவாரேயன்றி ஆள்பவரைச் சும்மா புகழ்ந்து அருந்தமிழ் தரமாட்டாரே” என முன்பே நன்கு அறிந்திருந்த சீடன் ஆழ்வாரின் பதிலைப் பக்குவமாக மன்னனிடம் பணிந்தளித்தான். பொங்கு கடலென மன்னன் வெகுண்டான். கணிகண்ணனை உடனே நாடு கடத்தும்படி மன்னன் வாய்மொழி ஆணை வெடித்தது. தனது இருப்பிடத்துக்கு வருத்தமுகமாக வந்த சீடனிடம் கேட்டுச் செய்தியறிந்தார் ஆழ்வார். சீடனுக்கு ஏற்பட்ட துயர் தன்னால்தானே என உணர்ந்து, சீடனுடன் தானும் நாடகலத் தயக்கமின்றி முடிவெடுத்தார். பின்னர், கோவிலுக்குச் சென்று, “பெருமாளே கிளம்பு உடனே, உனது உடைமையான பாம்புப் படுக்கையைச் சுருட்டி எடுத்துக்கொண்டு” எனுந் தொனியில்—

கணிகண்ணன் போகின்றான் காமருபூங்கச்சி
மணிவண்ணா நீ கிடக்கவேண்டா — துணிவுடைய
செந்நாப்புலவனும் போகின்றேன் நீயுமுன்றன்
பைந்நாகப்பாய்சுருட்டிக்கொள்.

என்று கட்டளையிட்டுவிட்டுக் கார்வண்ணனுக்குச் சற்றும் காத்திருக்காமல் கிளம்பிவிட்டார் ஆழ்வார் (கவனிக்க: ‘துணிவுடைய செந்நாப்புலவனும்...’).

(பொருள்: கணிகண்ணைன் செல்கின்றான், நானும் உடன் செல்கிறேன், கச்சி (காஞ்சி)யில் இருக்கும் பெருமானே, நீ எதற்கு இங்கு கிடக்கிறாய்? இங்கு நீ இருக்க வேண்டாம். ஆதிசேஷனாகிய உன்னுடைய பாயைச் சுருட்டிக்கொண்டு கிளம்பி

எங்களுடன் வா).



ஏன்? என்ன? என்று ஒருவார்த்தை கேட்கவில்லையே பெருமாள். தன் பக்தன் போய்விட்டால், தினமும் தன் செவியும் சிந்தையும் குளிரச் செய்யும் செந்தமிழுக்கு எங்கே போவது? அரைநொடியும் தனக்கு அவகாசம் தராமல் ஆழ்வார் கிளம்பிவிட்டாரே! தமிழ்ப் பட்டினி தனக்கு வராமலிருக்க வேண்டுமானால் தனக்கு வேறு வழியேயில்லை. தானும் தன் நாகப்படுக்கையைச் சுருட்டிக்கொண்டு ஆழ்வாரின் பின் செல்வதே அதிஉத்தமம் என்ற கருத்தில், நொடியும் தாமதிக்காமல் அவசர அவசரமாக படுக்கையைச் சுருட்டித் தோளில் போட்டுக்கொண்டு ஓட்டமா? நடையா? என்று எவரும் நிர்ணயம் செய்ய முடியாததொரு பரபரப்பில் பரந்தாமன் தொடர்ந்தானாம்.

(கிளம்பிச் சென்ற ஆழ்வார், திருமகள், கணிகண்ணன், பெருமாள் ஆகியோர் ஒரு நாள் இரவு தங்கியிருந்த இடம் "ஓர் இரவு இருக்கை" என அழைக்கப்பட்டது. பின்னாளில் அது மருவி "ஓரிக்கை" என இந்நாளில் அழைக்கப்படுகிறது).

பெருமாளைத் தொடர்ந்து திருமகளும் செல்ல, காஞ்சி நகரமே பொலிவிழந்தது. நாடு வறண்டது, வளம் குறைந்தது. மன்னன் தன் தவறுணர்ந்தான். ஆழ்வாரிருந்த ("ஓர் இரவு இருக்கை") இடத்திற்குச் செருக்கில்லாமல் சென்று பணிந்து தன்னை மன்னித்தருளும்படியும் அவரையும் அவருடன் வந்தவர்களையும் நாடு திரும்ப மன்னன் வேண்டினான். காழ்ப்புணர்வு களைந்துள பண்புநிறை ஆழ்வார் கனிந்தார். இருப்பினும் தனது சீடனின் சுயமரியாதை காயம்பட்டிருப்பதால் அவனிடம் பொறுத்தமைய வேண்டுமாறு மன்னனுக்கு அறிவுறுத்தினார். நாட்டு நலம் பெரிதெனக் கருதிய மன்னன், தயங்காது கணிகண்ணன் மன்னிப்பைக் கோரினான்.

குருவழியே தன்வழி எனக் காட்டும் வண்ணம் சீடனான கணிகண்ணன் மன்னனுடன் இயல்பானான். யாவும் சுமுகமாகவே, திருமழிசை ஆழ்வார் சீடனுடன் காஞ்சி திரும்ப முடிவெடுத்தார். காஞ்சி மீண்ட பின்னரும் கார்வண்ணன் நின்றுகொண்டே இருந்தானாம் ('பாயைச் சுருட்டி வா' என்றார். அவ்வாறே வந்தேன். 'திரும்பு காஞ்சிக்கு' என்று கிளம்பினார். அவரைத் தொடர்ந்து வந்துவிட்டேன் 'படு' என்று ஆழ்வார் சொல்லவில்லையே' என்று பரந்தாமன் நினைத்தே நின்றான் போலும்).

திருமாலின் மனவோட்டம் திருமழிசையைத் தொட்டது. அக்கணமே சட்டென்று திரும்பி 'அதுதான் யாவும் இனிதே முடிந்து விட்டதே. முன்பு எண்ணிய போக்கினைக் கணிவண்ணன் கைவிட்டான். நீயும் நானும் காஞ்சிக்கு மீண்டோம். ஆகவே பழையபடி நீ 'பாம்பணையில் 'கிட' என்று புதிய உத்தரவு பிறப்பித்தார்.

தன் சொல் ஏற்றுப் பின் தொடர்ந்து வந்த பெருமாளை நோக்கி ஆழ்வார் அளித்த சொல் இது:

கணிகண்ணன் போக்கொழிந்தான் காமருபூங்கச்சி
மணிவண்ணா நீ கிடக்கவேண்டும் — துணிவுடைய
செந்நாப்புலவனும் போக்கொழிந்தேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்படுத்துக்கொள்




தமிழுக்கும் தன்மேல் ஆழ்வார் சொரியும் பேரன்புக்கும் உடன்பட்டுப் பெருமாளும் மீண்டும் பைந்நாகப்பாய் விரித்துப் படுத்துக்கொண்டாராம். அவசரத்தில் அவ்வாறு செய்கையில் பெருமாள் வலமிருந்து இடமாக மாறிப் படுத்துக்கொண்டார் என்ற மரபு அங்குண்டு.

தன் பக்தரான (திருமழிசை ஆழ்வார்) சொன்ன படியெல்லாம், கிஞ்சிற்றும் மாறுபடாமல் —

'கிளம்பு' என்றால் கிளம்பி,
'திரும்பு' என்றால் திரும்பிக்,
'கிட' என்றால் கிடந்து
உடன்படு செய்கைகள் பல புரிந்ததால்,
"பைந்தமிழ்ப் பின் சென்ற பச்சைப் பசுங்கொண்ட"லான (காஞ்சித்) திருமாலைச் "சொன்ன வண்ணம் செய்த பெருமாள்" என்றழைப்பதுண்டு.

தமிழ் முன் செல்லப்
பின்சென்ற பெருமாளைத்
தமிழ்கொண்டு குளிர்விப்போம் இன்றும்.
எம் தமிழே முன் என்றும்.

# சரித்திரத்தின் முதலெழுத்து!

ஆதிரையில் வந்தவளே!
ஆண்டவனின் மறுவுருவே!
மார்கழியில் பிறந்தவளே!
மார்கொடுத்து வளர்த்தவளே!
தேர்ந்தெடுக்கா நற்பேறே!
தேவனவன் திருக்கொடையே!
பேர்கொடுத்து மகிழ்ந்தவளே!
பேறெனவே நெகிழ்ந்தவளே!

சோர்வுடனே தானிருந்தும்!
சுகமெனக்கு விழைந்தவளே!
நீர்குடித்துப் பாற்சோறு!
நிதமெனக்குத் தந்தவளே!
சீர்கொடுத்துச் சினந்தாங்கிச்
செய்தபிழை மறந்தவளே!
யார்கழித்துப் பேசிடினும்
எனைஉயர்த்தி நின்றவளே!

வேர்எனவே எனைப்பிடித்து
வெளித்தெரியா திருப்பவளே!
ஊர்தெரியச் சண்முகமாய்
உள்ளழுது வாழ்பவளே!
சார்ந்திருக்க மறுத்தவனின்
சரித்திரத்தின் முதலெழுத்தே!

தீர்ந்தெனது நாள்முடிந்து
தேவனிடம் சேருகையில்!
நேர்ந்திடப்போம் தண்டனையை
நீகுறைக்க வேண்டம்மா!

**எசேக்கியல் காளியப்பன்**




தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
தீபாவளி
வாழ்த்துக்கள்
HAPPY
Diwali
FESTIVAL OF LIGHTS
VARSHA™



# தெய்வமாக்கிய தெய்வம்

ரா.வீழிநாதன்

"ராஜாதிராஜ, ராஜ மார்த்தாண்ட, வீராதிவீர, வீர மார்த்தாண்ட, அகிலம் புகழும் அதிவீர, தீர, பராக்கிரம கேசரி, சர்வகலா விசாரத, சங்கீத, நாட்டிய, நாடக, ரசிக சிரோமணி, மலய சிம்ம மகாராஜா வருகிறர், பராக்!"

பாராக்காரன் 'பராக்' போட மன்னர் மலயசிம்மர் கம்பீர நடை பயின்று கலைக்கூடத்துக்குள் பிரவேசித்தார்.

அருங்கலைப் பொருள்கள் அனந்தமாகச் சேகரித்து வைக்கப்பட்ட கலைக்கூடம் அது. அதில் இல்லாத கலைச் செல்வங்கள் அவனியில் இல்லை என்றே சொல்லவேண்டும். கவினுறு சித்திரங்கள், எழிலுறச் சமைக்கப்பட்ட சிலைகள், பார்ப்பவர் பிரமிக்கும் வண்ணம் படைக்கப்பெற்ற பஞ்சலோக பிம்பங்கள், பாரதத்தின் பண்டைய பெருமையைப் பறைசாற்றும் பற்பல கலைச் செல்வங்கள் அங்கே கொலு வீற்றிருந்தன.




ஆண்டுதோறும் அரசரின் பணியாட்கள் எண்திசைக்கும் சென்று அகப்படும் அருங்கலைச் செல்வங்களைக் குவிப்பார்கள். ஆண்டில் ஒருநாள் மன்னர் அவற்றைப் பார்வையிடக் கலைக்கூடத்துக்கு விஜயம் செய்வார். அது அந்த அரசாங்கத்தின் சம்பிரதாயம்.

அன்றும் அதே நன்னாள், பொன்னாள்; திருநாள். அலங்காரத்துக்குக் கேட்க வேண்டுமா? கலைக்கூடம் சொர்க்கபுரியெனத் திகழ்ந்தது.

மன்னர் மலயசிம்மர் திக்கெட்டும் புகழ் எட்ட எழுபது கோடைகளைக் கண்டவர். புவியோர் பேரதிசயப்படும் வண்ணம் செங்கோல் ஓச்சிவந்த பேரரசர். கலையின் கருவூலமாகத் தம் நாட்டைத் திகழச்செய்த கலையன்பர். நீதிக்கும், நேர்மைக்கும், தர்மத்துக்கும், நியாயத்துக்கும் உறைவிடமாக விளங்கிய பெருந்தகையாளர். தெய்வ பக்தியிலே திளைத்து அடியார்க்கும் அடியாராக அடிபணிந்து வாழ்பவர். அத்தகைய மன்னர் கலைக்கூடத்தைக் காண வருகிறார் என்றால், அலங்காரத்துக்கும் அணிக்கும் கேட்க வேண்டுமா?

மன்னர் ஒவ்வொரு பகுதியாக, ஒவ்வொரு பொருளாக ஆற அமர இருந்து பார்த்து ரசித்தவாறே நடந்தார். பஞ்சலோகப் படிமங்கள் வைத்திருந்த பகுதிக்கு வந்ததும் விக்கிரகங்களில் சிலவற்றைப் பார்த்தவர், பிரமித்து நின்றுவிட்டார். பேசும் பொற்சித்திரங்களாக வீற்றிருந்த விக்கிரகங்களைத் தாண்டிச்செல்ல மனம் ஒப்பவில்லை. எந்த ஸ்தபதியின் கைவண்ணம்

இப்படிக் கலையுருவங்களாக உயிர்பெற்றுத் திகழ்கிறது? அதோ நிற்கும் கல்யாணசுந்தரர் நித்யகல்யாண மூர்த்தியாகக் காட்சி அளிக்கிறார்! இதோ வீற்றிருக்கும் ஆனைமுகத்தான்— ஐங்கரத்தான் கட்டமைந்த மானிட உடல் பெற்று, கைகளும், கால்களும் கரணை கரணையாகத் திகழ, மோதகம் தின்ற வயிறு புடைத்திருக்க, தம்மைத் தஞ்சம் அடைந்தவர்களுக்கு ஊறு நேராவண்ணம் அபயஹஸ்த முத்திரையோடு கருணையொளி கண்களில் படரக் காட்சி தருகிறார்!

அதோ, அந்த வில்லேந்திய ராமன் பிராட்டியும், இளையவனும் இரு பக்கங்களிலும் நிற்க, சாந்தமே உருவாக நிற்கிறார்! பக்கத்தில் நிற்கும் பிராட்டியின் ஒரு கை கீழ்நோக்கி எதைச் சுட்டிக் காட்டுகிறது? 'இறைவனான இராமனின் அருட் பாதங்களைச் சரணடைவதல்லால் கதியில்லை' என்பதைச் சுட்டிக் காட்டுகிறதோ? இல்லை, இல்லை! அதோடு 'கால் அமைப்பிலே ஸ்தபதியின் கை வண்ணத்தைக் கண்டு களிப்பாய்!' என்றும் கூறுகிறது. பஞ்சலோகத்தாலான மூர்த்தியாக இருந்தாலும், புறங்கால்களிலே நரம்பு ஓடுவதை அந்த ஸ்தபதியினால் எப்படித் தத்ரூபமாகக் காட்ட முடிந்தது. கால் அழகைக் காணக் கோடிக்கண்கள் தான் வேண்டும்! அடுத்த விக்கிரகத்தைப் பார்க்கக் கண்களைப் பலவந்தப்படுத்தித்தான் பிரிக்க வேண்டியிருந்தது.

மன்னரது குலதெய்வமான கூத்தபிரான் கொவ்வைச் செவ்வாயும், குமிண் சிரிப்புமாக அருகிலே அம்மை சிவகாமி நிற்கத் தரிசனம் தந்து கொண்டிருந்தான், உருவத்திலே சிறியதாயினும் கீர்த்தியிலே மாணப் பெரிது என்பது மூர்த்தியைப் பார்த்த மாத்திரத்திலே தெரியவந்தது. ஒரு காலைத் தூக்கிநின்ற






தெய்வத்தின் கால்களில் சதங்கை கொஞ்சியது. ஒரு காலைத் தூக்கி ஒரு காலில் நின்றிருந்த காரணத்தினால் உடலிலே ஓர் அநாயாசமான வளைவு, தானும் ஆடித் தரணிதன்னையும் ஆட்டும் ஆண்டவனது வதனாரவிந்தத்திலே அலட்சியமான கம்பீரத் திருப்பம். ஆட்டத்துக்கேற்றபடி திருவாச்சியிலும் அதியற்புதமான வேலைப்பாடு. அன்னை சிவகாமி ஆடாமல் அசையாமல் அருகில் நின்றவண்ணம் அகிலமனைத்தையும் ஆட்டிப் படைக்கும் ஆண்டவனது ஆடலைக் கண்டு ரசித்துக் கொண்டிருந்தாள், அற்புத மூர்த்திகரம் வாய்ந்த அந்த விக்கிரகங்களைக் கண்டு களித்துக் கொண்டிருந்த மன்னரும் அப்படியே அசையாமல் சிலையெனச்

சமைந்து நின்றுவிட்டார். எத்தனை நேரம் அவர் அப்படி நின்றாரோ, தெரியாது. கலைக்கூடத்தின் இடைவேளை மணி ஒலித்தபின்தான் அவர் தமது சமாதி நிலையை விட்டு இவ்வுலக நினைவுக்கு வந்தார். அரசருக்குரிய அலட்சிய பாவக்குடன் உடலை வளைக்காமல் கழுத்தை



மட்டும் திருப்பியபொழுது. பக்கத்தில் மந்திரி பிரதானிகளும் அதிகாரிகளும் கைகட்டி வாய் புதைத்து நிற்பதைக் கண்டார். கலைக்கூடத்து அதிகாரியை அருகில் அழைத்து, “இந்த ஐம்பொன் விக்கிரகங்கள் இவ்வாண்டுதான் கலைக்கூடத்துக்கு வந்து சேர்ந்தனவோ?” என்று கேட்டார்.

“ஆம், அரசே!”

“விநாயகரது இந்த விக்கிரகத்தை வார்த்த ஸ்தபதி யார்?”

“ஸ்தபதி சிவாச்சாரியாரின் சீடன் சாம்பமூர்த்தி”

“வில்லேந்திய இராமனை?”

“சாம்பமூர்த்தியே தான்!”




“ஆடும் அம்பலத்தரசனை?”

“அதுவும் அவனேதான்!”

அப்புறம் அரசருக்குக் கேள்வி கேட்கவேண்டும் என்று தோன்றவில்லை. அதற்குள்ளாக ஆடும் அம்பலத்தரசன்

அரசரது மனத்துள் புகுந்து ஆட்டுவிக்கத் தொடங்கிவிட்டான். சின்னஞ்சிறு மூர்த்தியாகத் திகழும் அவனை மானிட ஆகிருதியில் சமைத்துக் கண்ணாரக் காணவேண்டும் என்ற ஆசை அவரைப் பற்றிக் கொண்டது.

“சாம்பமூர்த்தி ஸ்தபதி எங்கிருந்தாலும் இன்று மாலைக்குள் நமது மாளிகைக்கு அழைத்து வருவது உங்கள் பொறுப்பு!” கலையுள்ளம் படைத்த காவலர் கனகம்பீரமாகவும், ஆனால், அதே நேரத்தில் கண்ணியத்தோடும் ஆணையிட்டுச் சென்றார்,

அரசர் ஆணையென்றால் அப்புறம் கேட்க வேண்டுமா? குறிப்பிட்டபடி ஸ்தபதி சாம்பமூர்த்தி அரசவைக்கு அழைத்து வரப்பட்டான். எழுபது கோடையையும் குளிரையும் கண்ட மன்னர் தமது அரியாசனத்தில் அமர்ந்திருந்தார். இருபத்தைந்து பிராயம்கூட நிரம்பாத சாம்பமூர்த்தி மன்னரெதிரே பவ்யமாக நின்று கொண்டிருந்தான்.

ஒருமுறை தம்மைப் பார்த்துக் கொண்ட மன்னர், இளைஞனான சாம்பமூர்த்தியின் மீது கண்ணோட்டம் விட்டார். பழுத்து உதிரப்போகும் இலைக்கெதிரே பல்லவத் துளிர் நிற்பதாகக் கண்டாரா? வாடி வதங்கி விழுந்து மண்ணோடு மண்ணாகப் போகும் மலருக்கெதிரே முகை விரித்து மணம் பரப்பப்போகும் மொட்டெனக் மதித்தாரா? மலைவாயில் விழப் போகும் மாலைக் கதிரவனுக்குப் போட்டியாகப்

பதினாறு கலைகளையும் காட்டிக்கொண்டு பிரகாசிக்கப் போகும் சரத்காலச் சந்திரன் என்று எண்ணமிட்டாரா? அல்லது வாழ்க்கையின் தலைவாசலை மிதித்திருக்கும் இந்த இளைஞனா இத்தனை அருங்கலைத் திறன் பெற்றிருப்பான்! எத்தனையோ அருங்கலைஞர்களிடம் இல்லாத ஆற்றல் இவனிடம் இயல்பாகவே வந்திருக்குமா? — நம்பிக்கைக் குறைவின் காரணமாக இப்படிக் குறைவாக மதிப்புப் போட்டாரா? அவர் மனத்தில் ஓடிய உணர்ச்சிப் பெருக்கை யார் கண்டார்கள்?

பிராயம் முதிர்ந்த மன்னரின் உதடுகளிலே இலேசாக இளநகை ஓடியது. "ஏன் ஸ்தபதியாரே! கலைக்கூடத்திலே கண்ட விநாயகர், ராமர், நடராசர் முதலியவர்களது சுந்தர விக்கிரகங்களையெல்லாம் வார்த்தது நீர்தானா?" என்று கேட்டார்.

"மன்னரின் மனத்திலே இப்படி ஓர் ஐயம் முளைக்கக் காரணம்"

"ஐயமா? இல்லை, இல்லை. எழில் பிம்பமாக வடித்திருக்கிறாயே நடராஜ மூர்த்தியை! மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிது என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறாய். ஆனால், என் ஐயன் சிற்றம்பலக் கூத்தனை மனித ஆகிருதியில் செய்வித்துக் கண்குளிரக் காணவேண்டும் என்று எனக்கு வெகுநாட்களாக ஆசை. அது உன் கைத்திறன் மூலம்தான் நிறைவேற வேண்டும். உன்னால் சாத்தியமா?" என்று கேட்டார் மன்னர்.




"மன்னர் மன்னவா! சாத்தியக்கூறைப் பற்றி ஆராயத் தேவையில்லை. ஒருமித்த உள்ளத்துடன் வழிபட்டு அருவமான ஆண்டவனையே அடைந்துள்ளார்கள் நமது மாமுனிவர்கள். ஆண்டவன்மீது அரும்பக்தி பூண்டு அவனே நினைவாய்,




அருவத்துக்கு உருவம் கொடுக்கும் பேற்றைக் கலைஞர் பெருமக்கள் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் வழிவழி வந்த நான், என்னால் ஆன முயற்சியை, திருப்பணியைச் செய்யக் கடமைப்பட்டவன்" என்றான் சாம்பமூர்த்தி.

கலைஞன் இளைஞனாயிருந்தாலும், முதிர்ச்சிபெற்ற மனத்தினன் என்பதைப் பேரரசர் அறிந்துகொண்டார். "காலம்கடந்த கலைப் பொருளுக்குக் காலவரையறை ஏற்படுத்துவது உசிதமில்லைதான். ஆயினும் என் பிராயமும் ஆசையும், கண் மூடுவதற்கு முன்னால் கலைத் தெய்வத்தைக் கண்டுகளிக்க வேண்டும் என்ற அவாவைக் கிளறி விட்டுள்ளன. அடுத்த ஆனித் திருமஞ்சனத்துக்குள் முடித்துத் தர இயலும் அல்லவா?" என்று கேட்டார்.

"ஆண்டவன் அருளும், அரசர் சித்தமும் பக்கத் துணையிருந்து

உதவுமெனில் முடித்துத் தருவது ஒரு சிரமமா?" என்றான் ஸ்தபதி சாம்பமூர்த்தி. அவனுக்கு வேண்டிய வசதிகள் அனைத்தும் செய்து தருமாறு அமைச்சர்களுக்கு ஆணையிட்டு விட்டு அரியாசனத்திலிருந்து எழுந்தார் அரசர் மலயசிம்மர்.

அந்தக் காலத்தில் ஸ்தபதி சிவாச்சாரியரின் புகழ் எட்டுத் திக்கும் பரவியிருந்தது. அவர் விக்கிரகங்கள் வார்ப்பதிலே தன் நிகரற்றவர். சிறந்த பக்திமான். அருவமான ஆண்டவனுக்கு உருவம் கொடுத்து உலகோரை வழிபடச் செய்யும் அற்புதமான ஸ்தாபத்யக் கலையினை ஆர்வமுடன் முறையோடு பயின்றவர். உலோகக் கலவையில் தேர்ந்தவர். எந்த உலோகத்தை எந்தக் கணக்கில் கலந்தால், விக்கிரகத்துக்கு என்ன நிறம் வரும் என்பதெல்லாம் அவருக்குத் தண்ணீர் பட்டபாடு. விக்கிரகங்கள் வார்ப்பதற்கான சாமுத்ரிகா லட்சணங்களில் அதி நிபுணர் அவர்.



அவருக்கு ஒரே மகள். மகன் இல்லை. தமக்கு ஆண் வாரிசு இல்லாததனால், வழி வழி வந்த விக்கிரக வார்ப்புக்கலை தம்மோடு அஸ்தமித்துவிடப்போகிறதே என்று ஏங்கினார். மகளுக்குக் கிடைக்கப் போகும் மணாளனாவது இந்தக் கலையில் தேர்ந்தவனாக இருந்தால் சிறிது சமாதானம் பெறலாம் என்று எண்ணினார், அவரது ஏக்கத்தைத் தவிர்க்கவென்பதற்கேபோல், சாம்பமூர்த்தி அவரிடம் அக்கலையைப் பயிலும் சீடனாக வந்து சேர்ந்தான். அவனது ஒழுக்கம், அவனது அறிவாற்றல், அவனது பக்தி எல்லாமாகச் சேர்ந்து அவரை ஆட்கொண்டன. முழுமனம் வைத்துத் தாம் அறிந்த விக்கிரக வார்ப்புக் கலையைக் கற்பித்தார், ஸ்தபதி சிவாச்சாரியார். அவர் புகழைப் பன்மடங்கு உயர்த்திப் போற்றிப் பாதுகாக்கும் சீடனாகவும், அவரது ஒரே மகளின் மணாளனாகவும் ஆனான் ஸ்தபதி சாம்ப மூர்த்தி. தமது மகள் இன்பகரமான இல்லற வாழ்க்கை நடத்துவதையும், தமது சீடன் தமக்கு ஏற்ற வாரிசாக அமைந்து புகழ்க்கொடி நாட்டிப் பிரகாசிப்பதையும் கண்ணாறக் கண்டு களித்த பின்னரே சிவாச்சாரியார் கண்களை மூடினார்.




இளந்தம்பதிகள் இன்ப வாழ்க்கை நடத்தியவாறே கலை வளர்ச்சியிலும் ஈடுபட்டிருந்த காலத்தில்தான், மன்னர் மலயசிம்மர், நடராஜப் பெருமானின் திருவுருவத்தைச் சகல கலையழகும் ததும்பும்படி மனிதனைப் போன்ற பேருருவில் வார்க்கவேண்டும் என்று உத்தரவிட்டார்.

கலையுள்ளம் படைத்த ஸ்தபதிக்கு ஏற்பட்டுவிட்ட ஆனந்தத்தை என்னவென்று சொல்வது? இரவு, பகல் என்று பாராமல் உழைத்தான். நாளடைவில் உணவை மறந்தான்; உறக்கத்தை மறந்தான்; இளம் மனையாளை மறந்தான். ஏன், தன்னையேகூட மறந்தான். ஆனந்த நடராஜனின் நினைவைத் தவிர வேறு நினைவில்லை அவனுக்கு. தில்லைக்கூத்தன் மனித ஆகிருதியில் மனத்தில் இடம்பெற்று அவன் மனத்தையே நிறைத்துவிட்டான்.இதய அரங்கத்திலே வைத்து மனம் எண்ணியபடியெல்லாம் அவனைச் சிங்காரிப்பதையே தன் வாழ்வாகக் கொண்டுவிட்டான் ஸ்தபதி. இளம் மனைவியின் உள்ளத்திலே எத்தனை இன்ப நினைவுகள் எழுந்தென்ன, ஏக்கப் பெருமூச்சுகள் பிறந்தென்ன? பேரின்பத்திலே லயித்துவிட்ட அவன் அதன்

மூர்த்திகரத்திலேயே ஒன்றிவிட்டான்.

அவன் வார்க்கவிருக்கும் விக்கிரகத்துக்குத் தெய்வ சாந்நித்தியம் வர வேண்டுமானால், என்ன என்ன ஆசார நியமங்களை எப்படி எப்படியெல்லாம் அநுஷ்டிக்க வேண்டுமோ, அப்படி அப்படியெல்லாம் இம்மிகூடத் தவறாமல், அநுஷ்டித்தான். விக்கிரகம் வார்ப்பதற்குரிய



அச்சைப் பலமுறை நுணுக்கமாக ஆராய்ந்து தட்டிக்கொட்டிச் சமைத்துக் கொண்டான். அப்புறம் ஐம்பொன்களை உருக்கி அளவோடு கலந்து 'மழு' கொதிக்க வைத்தான். அச்சிலே மழுவை ஊற்றி விக்கிரகம் வார்த்தான். மழு ஆறி விக்கிரகமாகச் சமைவதற்கு எத்தனை நாட்கள் தேவையோ, அத்தனை நாட்கள் ஆண்டவனின் நினைவாகவே வாளாவிருந்து அச்சிலிருந்து விக்கிரகத்தை அப்புறப்படுத்தினான். அவன் மனத்திலே ஆனந்த நர்த்தனம் புரிந்த நடராஜன் அப்படியே சிலை வடிவில் இறங்கி வந்திருப்பதாக அவனுக்குப் படவில்லை. எங்கோ ஏதோ குறையிருப்பதாகவே தோன்றியது. மீண்டும் மீண்டும் வார்த்தான்; மீண்டும் மீண்டும் குறையையே கண்டான்.


அப்படியும் அந்தக் கலைஞன் உள்ளம் சோரவில்லை; மனம் தளரவில்லை. அசையாத நம்பிக்கையுடன் ஆனந்தக் கூத்தனின் அற்புத வடிவத்தைச் சமைப்பதிலேயே முனைந்தான்.




தோல்வியுறத் தோல்வியுற அவன் நெஞ்சம் உறுதிப்பட்டது: விக்கிரகத்தை வார்த்தே தீருவது என்ற திட நம்பிக்கை வலுப்பெற்றது.

சின்னஞ்சிறு உருவத்தில் தில்லை நடராஜனது உருவத்தைப் பார்த்த நாள் முதல் மன்னருக்கும் ஒரே நினைவு. மனித ஆகிருதியில் அம்பலத்தரசனைக் கண்டு களித்துவிட வேண்டும் என்ற ஒரே ஆசை. ஒரே ஆத்திரம். அதனால் தினமும் பொழுது விடிந்தால், பொழுது போனால் ஸ்தபதியின் வேலை எம்மட்டில் இருக்கிறது என்று விசாரித்து வந்தார். ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு குறை ஏற்பட்டு வருவதாகவே அவர் காதுகளுக்குச் செய்தி எட்டியது.

என்னதான் பொறுமைசாலியாக இருந்தாலும், வயது ஏற ஏறப் பொறுமை குன்றிவிடுகிறது. நினைத்த காரியம் நிறைவேறவில்லை என்றால் ஆத்திரம் மூளுகிறது. இந்த மானிட இயல்புக்கு மன்னரும் தப்பவில்லை. அதோடு அவர் மனத்திலே அந்தச் சந்தேகமும் முளைத்து வளர்ந்தது. 'மன்னரின் மனத்திலே இப்படி ஓர் ஐயம் முளைக்கக் காரணம்.?' என்று அன்று ஸ்தபதி சாம்பமூர்த்தி கேட்டானே, உண்மையில் அவனுக்குத்தானே முதலில் அத்தகைய சந்தேகம் வந்தது? அதனால் அவன் திறமையற்றவன்



தானோ? சிறந்த ஸ்தபதியே இல்லையோ? பிரசித்தி பெற்ற சிவாச்சாரியாரின் கைத்திறனைத் தன் கைத்திறன் என்று பொய்யுரைத்து, தான் பெரியவனாகப் பார்க்கிறானோ!

நாளுக்கு நாள் அவன் சமைத்து வரும் விக்கிரகத்திலே ஏற்படும் குறைகளைக் கேட்கக் கேட்க அவருடைய சந்தேகம் வலுத்து விசுவரூபம் எடுத்தது. அருவமான ஆண்டவன் உருவம் பெற்று விகவரூபம் எடுத்ததுபோல் சந்தேகமும் பொறுமையின்மையும் சேர்ந்து தயாள சித்தம் படைத்த அவரைக் கல் நெஞ்சக்காரராக்கி விட்டன. 'இன்னும் ஒரு மாதத்துக்குள், தாம் கூறியதுபோல் நடராஜ விக்கிரகம் வார்க்கப்படவில்லையென்றால், ஸ்தபதிக்குச் சிரசாக்ஞை' என்று நெஞ்சை வைரமாக்கிக் கொண்டு கடுந்தண்டனை விதித்து விட்டார்.

கருமமே கண்ணாயிருந்த ஸ்தபதிக்கு அரசரின் இந்த ஆணையைப் பொருட்படுத்திச் சிந்திக்கவே நேரம் இல்லை. பார்க்கப்போனால் உண்மையில் அவன் மன்னருக்காகவா அந்தச் சிலையை வார்க்க ஒப்புக் கொண்டான்? அரசரது சொற்கள் அவனைக் கலைப்படைப்பில் இறங்க ஊக்கினவே ஒழிய வேறு




என்ன செய்தன? அவன் 'தன்கடன் பணிசெய்து கிடப்பது' என்றல்லவா கலைத்தெய்வத்தைப் படைக்க முயன்று கொண்டிருந்தான்!

ஆனால், அவனது இளம் மனைவியோ அரசரது ஆணையைக் கேட்டு அப்படியே நிலை குலைந்துவிட்டாள். 'இந்தக் கல் நெஞ்சக்காரரையா மக்கள் கருணையே வடிவானவர், நீதியே உருவானவர் என்றெல்லாம் புகழ்கிறார்கள்? அவருக்குப் பிடித்த ஒரு காரியத்தை ஒருவனால் செய்ய முடியவில்லையென்றால், அதற்கு அவன் உயிரையா பிணை வைப்பது? இது எந்த ஊர் நியாயம்? இந்தக் கொடுங்கோலர் ஒழிய மாட்டாரா?' என்றே எண்ணினாள், பிறருக்குத் தீங்கு நினைத்தே அறியாத அவள் நெஞ்சம் கணவனுக்கு வந்த கஷ்டத்தை நினைத்தபொழுது இப்படிப் பொருமியது. தன் கணவனிடம் சென்று, "போதும் நீங்கள் விக்கிரகம் வார்த்தது. புறப்படுங்கள். இந்தக் கொடுங்கோலரின் நாட்டைவிட்டே நாம் வெளியேறி விடுவோம்" என்றாள்.

"சிவகாமி! நான் மன்னருக்காகவா விக்கிரகம் வார்க்கும் இந்தத் தெய்வக் கலையைக் கற்றேன்? அல்லது எனக்காகச் சுயநலநோக்கம் கொண்டு கற்றேனா? 'கலை, கலைக்காக; கலைஞனுக்காக! வாழ்வுக்காக: மன்னருக்காக, மக்களுக்காக' என்றெல்லாம் வரையறுத்துக் கூறுகிறார்களே, அறிவறிந்த மக்கள் எனப்படுவோர். என்னைக் கேட்டால், 'கலை இவை எல்லாவற்றுக்கும் மேம்பட்டது. காலத்துக்கும் கோளத்துக்கும் அப்பாற்பட்டது. மனிதனுக்கும், தெய்வத்துக்கும் இடையே உள்ள மடுவைத் தூர்த்து மனிதனையே சிரஞ்சீவியாக்கித் தெய்வமெனப் புகழ்படைத்து வாழச் செய்வது! என்பேன். என் தலையே போவதாயிருந்தாலும், என் கலைச்செயலைப் புரிந்தவாறே கடைசி மூச்சை விடுவேன். கவலைப்படாதே! என் இந்த மண்ணுடம்பு அழிந்தாலும், புகழ் உடம்பு அழியாது!" என்று

கலை வேதாந்தம் பேசினான் சாம்பமூர்த்தி.

இதையெல்லாம் அவளது பேதைமனம் புரிந்துகொண்டால் தானே? அஞ்ஞானம் அவள் வாயை எப்படியெல்லாமோ கிளறிக்கொட்டி மூடியது.

மன்னர் வைத்த கெடு நெருங்கி விட்டது. அன்று மாலைக்குள் மன்னர் கூறியபடி நடராஜ விக்கிரகம் உருவாகவில்லையென்றால், மறுநாள் சூரியோதயத்தைக் காணச் சாம்பமூர்த்தியின் உயிர் இவ்வுலகில் இராது. தலை தரையை முத்தமிட்டுக் கொண்டிருக்கும். .

சாம்பமூர்த்தியின் கலைச் சாலையிலே ஒருபுறம் அச்சிலே வார்க்கப்பட்ட சிலை ஆறிக் கொண்டிருந்தது. இன்னொரு புறம் தகதகவென்று எரிந்து கொண்டிருந்த அடுப்பிலே பெரும் பாத்திரத்தில் மழு தளதளவென்று கொதித்துக் கொண்டிருந்தது. நம்பிக்கையே மூச்சாகக்கொண்ட கலைஞன் கொலைக்கு அஞ்சுவானா? உயிர்போகும் தருணத்திலும் அழகியதொரு நடராஜ விக்கிரகத்தைச் சமைக்க முயல்வது என்று, தான் முன்பே தயாரித்து வைத்திருந்த புது அச்சின் கலை நுணுக்கங்களைப் பரிசோதித்துக் கொண்டிருந்தான். ‘ஆறிக் கொண்டிருந்த விக்கிரகம் சரியாக உருப்பெற்றால் சரி, இல்லாவிட்டால் இன்னொரு புதிய விக்கிரகம்’ என்ற முனைப்பு, பணியாற்றிக் கொண்டிருந்த அவனிடம் காணப்பட்டது.



அவன் மனைவி சிவகாமிக்கோ ஒரே கவலை. தன் கணவன் சிரசாக்ஞைக்கு உட்படாமல் உயிர் தப்பிப் பிழைத்தால் போதும் என்ற ஒரே சிந்தனை. அரசர் வைத்த கெடு நெருங்க ஊண் உறக்கம் இன்றிக் கணவனின் கலைச் சாலையே கதியென்று இருந்தாள். மாலை மஞ்சள் வெய்யில் மறைய மறைய அவள் மனநிலை தடுமாறிவிட்டது.

மேற்றிசையிலே படர்ந்த செக்கர் வானத்தைக் கண்ட அவளுடைய மனத்திரையிலே, எமகிங்கரர் போலக் கொலைகாரர்கள் கையில் சுருக்கு நிறைந்த கொலை வாள் ஏந்திய வண்ணம் வரும் காட்சி தெரிந்தது. அடுத்த கணமே தன் கணவனின் செங்குருதி பூமியில் பாய்ந்தோடிச் செக்கர் வானத்தோடு போட்டியிடுவதாகத் தோன்றியது. அவள் வாய் கூச்சலிடக்கூடச் சக்தியற்றுப் போய், அடைத்துவிட்டது. அவள் தன் நிலை மறந்து மயங்கிவிட்டாள்.

“அம்மா , தாயே!” யாரோ கூப்பிடும் குரல் கேட்டுத் துணுக்குற்றுக் கண் விழித்தாள். கொட்டு கொட்டெனச் சுற்றுமுற்றும் பார்த்தாள். எதிரே பழுத்த கிழவரும் கிழவியும் நின்றுகொண்டிருந்தார்கள். கிழவரின் கால்களோ தரையில் பாவவில்லை; வெடவெடவென்று நடனமாடிக் கொண்டிருந்தன. தலை மயிரோ மட்டை நாரெனப் பரட்டையாகப் பரந்து விரிந்திருந்தது. கண்களில் மட்டும் அசாத்தியப் பேரொளி!

“அம்மா, தாயே”

அவள் தலை நிமிர்ந்து பார்த்தாள். அவனோ தன்னுடைய காரியத்திலேயே கண்ணாயிருந்தான். கிழவர் — கிழவியைத் தலை உயர்த்திக்கூடப் பார்க்கவில்லை.

“என்ன?”

அவள் வாய் திறந்து கேட்கவில்லை; முகம் மட்டும் கேள்விக்குறியை எழுப்பியது.

“நெடுந்தூரத்திலிருந்து நாங்கள் வருகிறோம், அம்மா!”

“அதற்கென்ன!”




வாய் கேள்வியை உதிர்க்கவில்லை; விழிகளே உதிர்த்தன.

“தாகம் தாங்க முடியவில்லை. நாவறட்சி உயிர் போகிறது. கொஞ்சம் குடிக்கத் தண்ணீர் தரமுடியுமா?”

அப்பொழுது அவளுக்கு இருந்த மனநிலை எழுந்து சென்று நீர் எடுத்துவர இசையவில்லை. கணவனது உயிர் ஊசலாடுகிறது. அவனோடு தன்னுயிரையும் மாய்த்துக்கொள்வதென்று தீர்மானித்துவிட்ட அவளுக்கு, யார் உயிர் போனால் என்ன? இருந்தால் என்ன? உலகமே வெறுத்துவிட்ட பின் அவள் யாரை லட்சியம் செய்ய வேண்டும்?


“இங்கே எங்கள் உயிரும்தான் போகிறது. இது தண்ணீர்ப் பந்தலோ தர்ம சத்திரமோ இல்லை.

வழியில் போகிறவர்களுக்கெல்லாம் தண்ணீர் ஊற்றிக்கொண்டிருப்பதற்கு! போங்கள், போங்கள்" என்று உள்ளத்தோடு சேர்ந்து வாயும் வெறுப்பை உமிழ்ந்தது. "சிவகாம சுந்தரியாகத் திகழும் நீ இப்படி அலுத்துக் கொள்ளலாமா? ஆத்திரப்படலாமா? குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் கொடு, அம்மா! கோடிப் புண்ணியமுண்டு" என்று கிழவி கெஞ்சினாள். .

"புண்ணியமும் ஆயிற்று. பாவமும் ஆயிற்று! அதுதான்! தரட்டுமா இரண்டு கரண்டி!" ஆத்திரம் குமுறச் சீறினாள் சிவகாமி.

"கொடேன்! எதுவாயிருந்தால் என்ன? தாகம் தணித்தால் சரி" என்றாள் கிழவி.

சிவகாமிக்கு வந்த ஆத்திரத்தில் முன்னும் யோசிக்கவில்லை, பின்னும் யோசிக்கவில்லை. மடமடவென்று அகப்பை அகப்பையாக மொண்டு கிழவர், கிழவியின் கைகளில் ஊற்றினாள்,



இங்கு விட்டுப் போகிறீர்களா, இல்லையா?" எரிந்து விழுந்தாள் சிவகாமி,

"ஆண் பிள்ளை பிறக்கும், அம்மா!" கிழவர் கிடைக்கப்போகும் தண்ணீருக்காக முன்கூட்டியே ஆசீர்வதித்தார்.

"நாளை பொழுது விடிவதற்கு முன்பாக உயிர் போகப்போகிறது. ஆண் பிள்ளைக் குழந்தை பிறக்குமாம்! ஆசீர்வாதத்தைப் பார், ஆசீர்வாதத்தை! இன்னமும் நின்று கொண்டிருந்தீர்களானால், மழுவை எடுத்து ஊற்றுவேன்"



"மழுவா? அது என்ன அம்மா?"

"அதோ உலையில் கொதித்துக் கொண்டிருக்கிறது பாருங்கள், "இன்னும் வேண்டுமா? இன்னும் வேண்டுமா?" என்று வெறி பிடித்தவள் போலக் கேட்டாள். கொதிக்கும் மழுவைக் கிழவரும் கிழவியும் எப்படித்தான் பருகுவார்கள்? இந்த நினைப்பே அவளுக்கு எழவில்லை. ஆசை தீரப் பருகட்டும் என்று ஆத்திரம் தீரக் கொட்டினாள்.

"அட! இதென்ன இது? மழுவைக் குடித்த கிழவரும் கிழவியும் விக்கிரகமாக மாறுகிறார்களே! அதோ, கிழவரது பரட்டைத்தலை விரித்த செஞ் சடையாக மாறி விட்டதே! தரையில் கால் பாவாமல் நர்த்தனம் புரிந்து கொண்டிருந்த காலோடு தோன்றிய கிழவர், நர்த்தன சுந்தர நடராஜனாக உருப்பெற்று விட்டாரே! கிழவிஞ்? சிவகாமசுந்தரியாகச் சமைந்து விட்டாளே!"

சிவகாமி காண்பது என்ன, கனவா?

“சிவகாமி! சிவகாமி!”

மகிழ்ச்சி பொங்கும் குரலில் சாம்பமூர்த்தி உரக்கக் கூவுவதைக் கேட்ட சிவகாமி கண்களைக் கசக்கிக்கொண்டு திறந்து பார்த்தாள்.



எதிரே மனித ஆகிருதியில் சிவகாமிப் பிரிய நடராஜன் கலைக்கூத்தனாக நர்த்தனமாடிக் கொண்டிருந்தான். அருகில் அடக்கமே உருவாகச் சிவகாம சுந்தரி நின்று கொண்டிருந்தாள்.

அவள் மழுவூற்றித் தாகவிடாய் தீர்த்து வைத்த கிழவரும் கிழவியும் எங்கே? சுற்றுமுற்றும் பார்த்தவளின் பார்வை மீண்டும் விக்கிரகங்களில் லயித்தது. இரண்டு உயிர்கள் அவற்றுள் புகுந்து விக்கிரகச் சிலைகளை உயிர்ச் சிலைகளாக ஆக்குவதைக் கண்டாள். மறுகணமே, தன் மணாளனின் பக்கம் திரும்பி, “போங்கள், போங்கள்! உடனே ஓடிப் போய் உங்களைத் துன்புறுத்தினாரே, அந்த மன்னரை அழைத்து வந்து உயிர்ச் சிலைகளாகத் திகழும் இந்த நடராஜர், சிவகாமியின் விக்கிரகங்களைக் காட்டுங்கள். கண்டு களிக்கட்டும்!” என்று துரிதப்படுத்தினாள்.

அந்தியும் சந்தியும் கூடும் அந்தப் பிரதோஷ வேளையிலே மன்னருக்கு மகிழ்ச்சிகரமான செய்தியைத் தெரிவிப்பதற்காக ஓடினான் சாம்பமூர்த்தி ஸ்தபதி.

மன்னர் அப்பொழுதுதான் நெற்றியிலே விபூதி அணிந்து, தமது பட்டமகிஷியுடன் ஆண்டவன் தரிசனத்துக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். இரண்டடி எடுத்து வைத்தவர் ஏதோ மார்பை வலிக்கிறது என்று கூறி மஞ்சத்தில் அமர்ந்தார். அதே சமயம், சாம்பமூர்த்தி ஸ்தபதி தம்மைக் காண வந்திருக்கிறான் என்னும் செய்தி அவருக்குப் போயிற்று. உடல் கோளாறு ஏற்பட்டிருந்த அந்த வேளையிலும் அதைப் பொருட்படுத்தாமல் அவனைத் தம் அறைக்கு வர அனுமதித்தார் மன்னர். சிவகாமியின் விக்கிரகமும், நடராஜனின் விக்கிரகமும் அழகுறச் சமைந்து கலைத் தெய்வமாகத் திகழ்வதை வர்ணித்தான் சாம்பமூர்த்தி. தரிசனத்துக்குத் தன்னோடு உடனே வருமாறும் வேண்டினான்.

அவன் வர்ணிக்கும் அந்த வேளையிலேயே மன்னரின் மன அரங்கிலே சித் சபை உருவாகியது. ஆனந்த நர்த்தனம் புரியும் ஐயன், அபிராம சுந்தரியான சிவகாமசுந்தரியோடு கலைஞன் உருவாக்கிய வண்ணமே மனித ஆகிருதியில் காட்சியளித்தான். மன்னர் இறுகக் கண்களைப் பொத்திக்கொண்டு அந்தக் காட்சியை அப்படியே மனத்தில் பதித்துக் கொள்ள முயன்றார். அப்புறம் அவரது மூடிய கண்கள் திறக்கவே இல்லை. தில்லை வெளியில் கலந்து கொண்டால் அவர் திரும்பியும் வருவாரோ?




உண்மைக் கலைஞனின் உயிர்ப்படைப்பு கலைச் சிகரத்தின் உச்சத்தை அடைந்துவிட்டால், அத்துடன் தெய்வத்தையும், தெய்வத்தின் செயலையும் இணைத்துக் கூறுவது பாரதத்தின் பண்டைய காலத்துக் கலைமரபு. உண்மையில், உயர்ந்த கற்பனையைச் சிறப்பான சுலைப்பொருளாகக் கலைஞன் படைத்துவிட்டால், அவனே தெய்வமாகி விடுகிறான். தெய்வமே அவனாக, அவனது கலைப்பொருளாகப் பரிணமித்து விடுகிறது. கலைஞனுக்கும், கலைஞன் படைத்த தெய்வத்துக்கும், தெய்வம் படைத்த கலைஞனுக்கும் அப்புறம் வேற்றுமை இருப்பதில்லை.

‘ஸ்வாயம்புவ மூர்த்தி’ அதாவது தாமாகவே உற்பத்தியானவர் என்று கூறப்படும் கலைஞனின் உயர் கற்பனையான இந்த நடராஜப் பெருமான், மனித ஆகிருதியில் இன்றும் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த கோனேரிராஜபுரத்தில் காட்சி தருகிறார், தெய்வக் கலைஞனின் கலைத்திறனுக்கு அத்தாட்சியாக; தெய்வமாக்கிய தெய்வமாக.

# ஆசீர்வாதம்

ஒருவர் நெற்றியிலிருந்து
இன்னொருவர் நெற்றிக்கு
நம் காய்ச்சல் தொற்றிக்கொள்கிறது.

வெளியே உயிரோட்டமாக
மின்னும் நட்சத்திரங்கள்
மற்றும் ஒரு படர்கொடி
அதன் உள்ளங்கை போன்ற இலைகளை நீட்டி
நட்சத்திரங்களின்

லேசான வெளிச்சத்தைப் பிடிக்கிறது.
வெதுவெதுப்பான என் வீட்டில்,
அதன் வேறு யாருக்கும் தெரியாத
முக்கியமான விஷயங்களைப் பற்றி

நீ என்னிடம் சொல்கிறாய்,
வெகு தொலைவில்,
ஒரு ஆழமான நீர்ம குரல்
தவறாகப் புரிந்து கொள்ளப்படும்
வார்த்தைகளில் மழையாகப் பொழிகிறது
மற்றும் ஒருவேளை உன்னை ஆசீர்வதிக்கிறது
இனிய சகோதரி,

என் அன்பு மற்றும் உன் சோகத்தின் பெயரால்,
உனக்கு என் வாழ்வின்
வெள்ளை இறக்கையைப் பரிசளிக்கிறேன்.




அன்ட்டோனியா பாஸி
தமிழில்: கனியமுது அமுதமொழி


தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
HAPPY
DIWALI
2024
VARSHA

# பாயும்

*அமெரிக்க அதிபர் தேர்தல்: டிரம்புக்கு துணை நிற்கும் ஈலோன் மஸ்க் அடையப் போகும் பலன் என்ன?*

'விசாண்டர் மண்டி, அமெரிக்காவின் பென்சில்வேனியா மாகாணத்தின் ஃபோல்சம் நகரிலுள்ள தனது அலுவலகத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தபோது ஒரு செய்தியைக் கேள்விப்பட்டார். அதாவது, தொழில்நுட்ப பில்லியனர் ஈலோன் மஸ்க் அருகிலுள்ள பள்ளியில் உரையாற்றிக் கொண்டிருக்கிறார் என்ற செய்தி அது. "உலகின் மிகப்பெரிய பணக்காரர்களில் ஒருவரான மஸ்க் இந்தச் சிறிய பகுதிக்கு வருவது அரிதல்லவா!" என சாண்டர் நினைத்தார்.

காரணம், 9,000க்கும் குறைவான மக்கள்தொகை கொண்ட ஃபோல்சம் ஓர் அமைதியான நகரம். இந்த நகரின் மக்கள் பொதுவாகத் தங்கள் அரசியல் நிலைபாட்டைப் பற்றி அதிகம் பேசுவதில்லை அல்லது வெளிப்படுத்துவதில்லை.

ஓர் அடுக்குமாடிக் குடியிருப்பில் குத்தகை முகவராகப் பணிபுரியும் 21 வயதான சாண்டர், நவம்பர் மாதம் நடக்கவிருக்கும் அமெரிக்க அதிபர் தேர்தலில் வாக்களிக்கத் தனக்கு விருப்பமில்லை என்பதை ஒப்புக் கொண்டார். ஆனால் ஈலோன் மஸ்க் பேசுவதைக் கேட்க ஒரு பெரும் கூட்டம் கூடுவதையும், அவர்களிடையே ஓர் உற்சாகம் இருப்பதையும் உணர்ந்த அவர், அந்தக் கூட்டத்திற்குச் செல்ல முடிவெடுத்தார்.

கூட்டம் முடிந்து பள்ளியைவிட்டு வெளியேறியபோது, கமலா ஹாரிஸைவிட டொனால்ட் டிரம்ப் மீதான தனது மதிப்பு கூடியிருந்ததை அவர் நினைவு கூர்கிறார். "இது நமது எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் தேர்தல், அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு யார் அதிபர் என்பது மட்டுமல்ல, உலகம் எப்படி இருக்கப்






# பணம் பாதாளம் வரை!

போகிறது என்பதையும் முடிவு செய்யும் தேர்தல் இது.' இப்படி யாராவது உங்களிடம் சொன்னால், அது மிகவும் முக்கியமான, குறிப்பிடத்தக்க விஷயம் என்று நான் நினைக்கிறேன்" என்று சாண்டர் பிபிசியிடம் கூறினார்.

அரசியலில் பெரிதும் ஆர்வமில்லாத, ஒரு விசித்திரமான தொழில்நுட்ப மேதை என்று முன்பு ஒரு பிம்பத்தைக் கொண்டிருந்த மஸ்க், இப்போது டிரம்பிற்கு தனது முழு ஆதரவையும் அளித்துள்ளார். அமெரிக்க பொது மக்களின் பார்வையில், '53 வயதான மஸ்க், டிரம்பை மீண்டும் அதிபராக்கும் முயற்சியில் தனது நேரத்தையும், அறிவையும், ஏராளமான பணத்தையும் முதலீடு செய்துள்ளார்.'

புதிய அணுகுமுறை

அமெரிக்க நாட்டின் பணக்காரர்களிடையே இது வழக்கமான ஒன்று அல்ல, ஏனெனில் அவர்கள் பெரும்பாலும் நேரடியாக அரசியல்

நடா தவ்ஃபிக், பெர்ண்ட் டெபுஸ்மேன் ஜூனியர்
& மேக்ஸ் மாட்சா

தலைவர்களுக்கு ஆதரவளிக்க மாட்டார்கள் அல்லது திரைமறைவாகவே அரசியலில் ஆதிக்கம் செலுத்துவார்கள். இது முற்றிலும் மாறுபட்ட அணுகுமுறை. வழக்கமாக பெரு நிறுவன அதிபர்கள், தலைமை நிர்வாக அதிகாரிகள் பலர் தேர்தலுக்கு நிதி திரட்டும் பிரத்யேக விருந்துகளைத் தங்களது ஆடம்பரமான வீடுகளில் நடத்துவார்கள். அங்கு சாத்தியமான




நன்கொடையாளர்களை அரசியல்வாதிகள் சந்திப்பார்கள். எனவே மஸ்கின் இந்த வித்தியாசமான, வெளிப்படையான அணுகுமுறை




அரசியல் விமர்சகர்களிடையே பல கேள்விகளை எழுப்பியுள்ளது.

தலைமை நிர்வாக அதிகாரிகளின் பாரம்பரிய அரசியல் அணுகுமுறை என்பது 'பொது வெளிச்சத்திற்கு அப்பாற்பட்டதாக இருக்கும்' என்று மிச்சிகன் பல்கலைக் கழகத்தின், ரோஸ் ஸ்கூல் ஆஃப் பிசினஸில், தொழில்முனைவோர் துறையின் தலைவராக உள்ள எரிக் கார்டன் விளக்குகிறார். ஆனால் "மஸ்க், அதைச் சத்தமாகவும் பெருமையாகவும் செய்கிறார். இதன் ஸ்டீவ் டேவிஸ், இந்தத் திட்டத்தில் உதவுவதற்காக நியமிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

'ஈலோன் முதலீடு'

டிரம்பின் பிரசாரத்தில் மஸ்க்கின் தனிப்பட்ட பெருமளவு முதலீடு சாண்டரால் விரைவாகக் கவனிக்கப்பட்டது. "அது மட்டும் எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. வாக்காளர்களிடம் செல்வாக்கு செலுத்துவதற்கு ஒருவர் உண்மையில் இவ்வளவு நேரத்தையும் பணத்தையும்




மூலம், அரசியல் களத்தின் புகழ் வெளிச்சத்தை ஈர்க்கக்கூடிய ஒரு நபராக அவர் இருக்கிறார்" என்கிறார் எரிக்.

மஸ்க்கின் 'டிரம்ப்—ஆதரவு அரசியல் நடவடிக்கைக் குழுவான, அமெரிக்கா பிஏசி' — இந்தத் தேர்தலில் ஏற்கெனவே 119 மில்லியன் டாலர்களுக்கும் அதிகமாகச் செலவிட்டுள்ளதாக ஒரு லாப நோக்கற்ற ட்ராக்கர் அமைப்பான ஓபன் சீக்ரெட்ஸ் தெரிவித்துள்ளது. கூடுதலாக, மஸ்க்கின் சொந்த பங்களிப்புகள் அவரை அதிபர் தேர்தலில் மிகப் பெரிய தனிப்பட்ட நன்கொடையாளர்களில் ஒருவராக மாற்றியுள்ளன. மேலும் உறுதியற்ற மாகாணங்களில் முக்கியமானவற்றில், வாக்காளர்களிடையே டிரம்பிற்கான ஆதரவைப் பெருக்குவதிலும் இது முக்கியப் பங்கு வகிக்கிறது.




ஸ்பேஸ் எக்ஸ், எக்ஸ், தி போரிங் நிறுவனம் உள்ளிட்ட மஸ்க்கின் நிறுவனங்களில் பணிபுரிந்த, மஸ்க்கின் முக்கிய உதவியாளர்

செலவிடுவார் என்றால், மஸ்க் அதை ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காகச் செய்கிறார்" என்றார் சாண்டர்.

பென்சில்வேனியா செனட்டர் ஜான் ஃபெட்டர்மேன் போன்ற சில ஜனநாயகக் கட்சியினர், தேர்தலுக்கு முன்னதாக மஸ்க் விடுக்கும் அச்சுறுத்தலைப் புறக்கணிக்க வேண்டாம் என்று தங்கள் கட்சியை வலியுறுத்தி வருகின்றனர்.

'தன்னை ஒரு மிகப்பெரிய புத்திசாலியாகப்' பார்க்கும் ஒரு குறிப்பிட்ட மக்கள் பிரிவிடம் டிரம்பை ஆதரிக்க மஸ்க் வேண்டுகோள் விடுக்கிறார். அத்தகைய மக்களின் ஆதரவைப் பெறுவது, ஜனநாயகக் கட்சியினருக்குக் கடினமான ஒன்று என நிரூபிக்கப்பட்டுள்ளதாக ஃபெட்டர்மேன் கூறுகிறார்.

ஜூலை 13 அன்று பென்சில்வேனியாவின் பட்லரில், டிரம்பின் மீது நடத்தப்பட்ட படுகொலை முயற்சிக்குப் பிறகுதான், ஈலோன் மஸ்க் முதல் முறையாக டிரம்பை வெளிப்படையாக ஆதரித்தார்.

அதன்பிறகு மஸ்க், டிரம்பின் பிரசாரப் பயணத்தில் ஒரு பொதுவான அங்கமாகிவிட்டார். 'டிரம்ப் மட்டுமே அமெரிக்க ஜனநாயகத்தை காப்பாற்ற முடியும்' என்ற எச்சரிக்கையையும் அடிக்கடி வழங்கி வருகிறார் ஈலோன் மஸ்க்.

தேர்தலின் இறுதி நாட்களில், டிரம்ப், கமலா ஹாரிஸ் என இருவரும் கவனம் செலுத்தக்கூடிய ஒரு தேர்தல் களமாகவும், ஒரு முக்கியமான உறுதியற்ற மாகாணமாகவும் உள்ள பென்சில்வேனியா மாநிலத்திற்கு மஸ்க் விஜயம் செய்துள்ளார்.

அமெரிக்கா பிஏசி அமைப்பு இப்போது, 'தேர்தல் முடியும்வரை தினமும் ஒரு வாக்காளருக்கு ஒரு மில்லியன் அமெரிக்க டாலர்கள்' என்ற திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. ஒரு மில்லியன் அமெரிக்க டாலர்கள் என்பது இந்திய மதிப்பில் சுமார் 8.3 கோடிகள்.

இந்தத் திட்டத்தின்படி யாரேனும் ஒரு வாக்காளருக்கு, அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி, இந்தப் பரிசு கிடைக்கும். ஆனால், அவர் வாக்களிக்கப் பதிவு செய்திருக்க வேண்டும், பிஏசி அமைப்பின் ஒரு மனுவில் கையெழுத்திட்டிருக்க வேண்டும். இந்த இரண்டு தகுதிகளும் இருந்தால் அந்த நபர் இந்தப் பரிசை வெல்வதற்கான வாய்ப்புகள் அமையும்.

'வாக்காளர்களுக்கு ஒரு மில்லியன் டாலர் — சட்டவிரோதமானது'

ஆனால், அமெரிக்க நீதித்துறை ஈலோன் மஸ்க்கின் 'அமெரிக்கா பிஏசி குழுவிற்கு' அனுப்பிய கடிதத்தில், "பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களுக்கு, லாட்டரி முறையில் ஒரு நாளைக்கு 1 மில்லியன் டாலர்கள் கொடுப்பது சட்டவிரோதமானது" என்று எச்சரித்துள்ளதாக அமெரிக்க ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பிபிசியின் அமெரிக்க கூட்டாளியான சிபிஎஸ் நியூஸ் உட்பட அமெரிக்க செய்தி முகமைகள், 'இவ்வாறு பணத்தைக் கொடுப்பது, கூட்டாட்சி தேர்தல் சட்டங்களை மீறும் செயல் என மஸ்க்கின் குழுவிற்கு அக்கடிதம் எச்சரித்ததாக' புதன்கிழமை செய்தி வெளியிட்டன.

அமெரிக்க சட்டத்தின்படி, வாக்களிக்கப் பதிவு செய்ய மக்களுக்குப் பணம் கொடுப்பது சட்டவிரோதமானது. ஆனால் ஸ்வீப்ஸ்டேக்ஸ் எனப்படும் இத்தகைய போட்டிகள் ஏதேனும் தேர்தல் சட்டங்களை மீறுகிறதா என்பது தெளிவாக இல்லை. ஈலோன் மஸ்க்கின் இந்தப் போட்டி, பிஏசி குழு விநியோகித்த ஒரு மனுவில் கையெழுத்திட்டவர்களுக்குப் பணத்தை வழங்குகிறது.




"முதல் மற்றும் இரண்டாவது திருத்தத்திற்கு ஆதரவாக மனுவில் கையெழுத்திட, ஸ்விங் மாகாணங்களில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான அல்லது



"2 மில்லியன் வாக்காளர்களைப் பெற விரும்புகிறோம்" என்று மஸ்க் சனிக்கிழமை அன்று பென்சில்வேனியாவில் இந்தப் போட்டி குறித்து அறிவித்தபோது கூறினார்.

இந்தப் போட்டியின் வெற்றியாளர்கள், வாக்களிக்கப் பதிவு செய்திருக்க வேண்டும் என்று போட்டி விதிகள் கூறுகின்றன. ஆனால் அவர்களுக்கு எந்தக் கட்சி சார்பும் கட்டாயமில்லை.




"மனுவில் கையெழுத்திட்ட நபர்களுக்கு, ஒவ்வொரு நாளும், இப்போதிருந்து தேர்தல் வரை தோராயமாக 1 மில்லியன் டாலர்கள் வழங்கப் போகிறோம்," என்று மஸ்க் கூறினார்.

'அமெரிக்கா பிஏசி' இணையதளம், "1 மில்லியன் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களை ஸ்விங் மாகாணங்களில் அரசியலமைப்புச் சட்டத்திற்கு ஆதரவாக, குறிப்பாக பேச்சு சுதந்திரம், ஆயுதம் வைத்துக்கொள்ளும் உரிமைகளுக்குக் கையெழுத்திட வைப்பதே தங்கள் இலக்கு" எனக் கூறுகிறது.

பென்சில்வேனியா, ஜார்ஜியா, நெவாடா, அரிசோனா, மிச்சிகன், விஸ்கான்சின், வட கரோலினா ஆகிய ஏழு ஸ்விங் மாகாணங்களைச் சேர்ந்த வாக்காளர்கள் இந்தப் போட்டியில் கலந்துகொள்ள முடியும். அமெரிக்க அதிபர் தேர்தல் நாள் நவம்பர் 5.




'கட்டுப்பாடுகளை எதிர்த்த ஈலோன் மஸ்க்'

கடந்த வார இறுதியில் ஹாரிஸ்பர்க் மற்றும் பிட்ஸ்பர்க்கில் நடந்த 'டவுன் ஹால்' நிகழ்வுகளில், மஸ்க் வெற்றியாளர்களுக்கு மிகப்பெரிய லாட்டரி மாதிரியான காசோலைகளை வழங்கினார். அப்போது உற்சாகமான கூட்டத்தினர் 'ஈலோன்' என்று கோஷமிட்டனர்.

பிலடெல்பியாவில் நடந்த ஒரு பேரணியில், அமெரிக்க செனட் சபை உறுப்பினர் அலெக்ஸாண்டிரியா ஒகாசியோ—கோர்டெஸ், "அன்றாட வாழ்க்கையை எதிர்கொள்ளப் போராடும் நம்மில் பலர் முன்பாக, ஒரு மில்லியன் டாலர்களை காட்டி மஸ்க் தனது சொல்படி ஆடச் சொல்கிறார்" என்று விமர்சித்தார்.

"ஈலோன் மஸ்க் உழைக்கும் நபர் ஒருவரின் முன்பாகப் பணத்தைக் காட்டி, அந்த நபரை ஆட்டுவிப்பது அழகான விஷயம் என்று நினைக்கிறார். அமெரிக்காவின் மிக முக்கியமான தேர்தல் நெருங்கி வரும் சூழலில், அவரைப் போன்ற மக்களும் கோடீஸ்வரர்களும் அதைத்தான் செய்கிறார்கள்," என்று அவர் கூறினார்.

இருப்பினும், சில அரசியல் பார்வையாளர்கள் மஸ்க்கின் ஆதரவைக் கேள்விக்கு உள்ளாக்கியுள்ளனர். மஸ்க் மற்றும் அவரது வணிகங்கள் டிரம்ப் உடனான உறவால் பயனடையும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

அந்த அரசியல் பார்வையாளர்களில் மின்சார வாகன சார்ஜிங் தளமான சார்ஜ்வேயின் தலைமை நிர்வாக அதிகாரி மாட் டெஸ்கேவின் கூற்றுப்படி, 'மஸ்கின் அரசியல் மாற்றம் மின்சார வாகனத் துறையில் பலருக்கும் கடினமான முடிவாக இருந்தது. ஆனால் பல ஆண்டுகளாக மஸ்க்



TRUMP DECLARES THAT JAN. 6 WAS A "DAY OF LOVE"

அரசியலில் காட்டிய அதீத ஆர்வம் காரணமாக இந்த முடிவு அவர்களை ஆச்சரியப்படுத்தவில்லை.'

"மஸ்க்கின் நலன்கள், அவரது வணிகங்கள் தொடர்பான முக்கியமான சில விஷயங்களைச் சுற்றியே கவனம் செலுத்துகின்றன என்று நான் நினைக்கிறேன். கட்டுப்பாடுகள் குறித்து இதற்கு முன்பாகவும் அவர் கவலைகளை வெளிப்படுத்தியுள்ளதாக" டெஸ்கே கூறுகிறார்.

கலிஃபோர்னியாவில், கொரோனா தொற்றுநோய் காலத்தின்போது அமல்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகளை மஸ்க் 'பெரிதும் எதிர்த்தார்' என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

மிச்சிகன் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கார்டனும் இதை ஒப்புக்கொள்கிறார். மஸ்க் தன்னை கட்டுப்பாட்டாளர்களால் தடுத்து நிறுத்தப்பட்ட ஒருவராகப் பார்க்கிறார், அரசாங்கத்தின் தலையீடு 'தன்னியக்க ஓட்டுநர்' போன்ற தான் கவனம் செலுத்தும் தொழில்நுட்பங்களின் வளர்ச்சியைத் தடுக்கிறது என்று மஸ்க் நினைப்பதாக கார்டன் கூறுகிறார்.

"ஓர் அதிரடியான, கட்டுப்பாடுகள் இல்லாத தொழிலதிபர் போல, புதிய பாதைகளை உருவாக்கக் கூடிய, ஒழுங்குமுறைகளில் சிக்கிக் கொள்ளாமல் இருக்கக்கூடிய ஒருவராக, மஸ்க் முன்னோடியாக இருக்க விரும்புகிறார்" என்று பேராசிரியர் கார்டன் கூறுகிறார்.

"மஸ்க் தனிப் பாதையில் பயணிக்க விரும்புகிறார். அவர் செவ்வாய் கிரகத்திற்குச் செல்ல விரும்புகிறார்" என்று கார்டன் கூறுகிறார்.

நவம்பரில் டிரம்ப் வெற்றி பெற்றால், அமெரிக்க அரசாங்கத்தில் 'செலவு குறைப்பு' பணிகளை மஸ்க் மேற்பார்வையிட முடியும் என்று டொனால்ட் டிரம்ப் பரிந்துரைத்துள்ளார். அவருக்கு அந்தப் பணி கிடைக்கவில்லை என்றாலும்கூட, பிரசாரத்தின்போது மஸ்க் அளித்த ஆதரவால் அவரது பேச்சிற்கு டிரம்ப் செவிசாய்ப்பார் என அரசியல் பார்வையாளர்கள் நம்புகிறார்கள். மேலும் அரசு நிர்வாகத்தின் முடிவுகளில் மஸ்க் வலுவான செல்வாக்கைக் கொண்டிருக்க முடியும் என்றும் நம்புகிறார்கள்.

ஃபெடரல் தேர்தல் ஆணையத்தின் முன்னாள் பொது ஆலோசகரான லாரன்ஸ் நோபல், தேர்தல் களத்தில் மஸ்க் வழங்கும் பரிசுகள், சலுகைகளின் சட்டப்பூர்வமான தன்மை குறித்துக் கேள்வி எழுப்பியுள்ளார்.

பாதுகாப்பான பணிச்சூழல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புகளை மதிக்கும் அமெரிக்கர்களை இந்த வகையான பிரசாரம் கவலையில் ஆழ்த்த வேண்டும் என்று நோபல் நம்புகிறார்.

"வணிகங்கள் சொந்தமாகச் செயல்பட அனுமதிக்கப்படும்போது, அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். அவர்கள் பாதுகாப்பு தொடர்பான பிரச்னைகளை, கூடுதல் செலவு என்ற பெயரில் ஒதுக்கி விடுகிறார்கள். அவர்கள் லாபம், பங்குதாரர் மதிப்பு மற்றும் தலைமை நிர்வாக அதிகாரிகளுக்கான வெகுமதி ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கின்றனர்" என்று நோபல் பிபிசியிடம் கூறினார்.




"வணிகத்தை அப்படிப் பார்க்கும் ஒருவர், அரசாங்கத்தையும் அப்படியே அணுகும் ஒருவர், பாதுகாப்பிற்குப் பொறுப்பாக இருப்பது ஆபத்தானது," என்று அவர் கூறுகிறார்.

நவம்பர் தேர்தலின் முடிவு என்னவாக இருந்தாலும், கட்டுப்பாடுகளை மீறுவதிலும் கிளர்ச்சியாளராக இருப்பதிலும் மகிழ்ச்சி அடையும் ஈலோன் மஸ்க், அமெரிக்க அரசாங்கத்துடனான தனது லாபகரமான கூட்டாண்மைகளைத் தொடர்ந்து பேணுவார் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

இருப்பினும், அவரது நற்பெயரும் பிராண்டும் இப்போது டொனால்ட் டிரம்புடன் இணைக்கப்பட்டுள்ளன என்பதை அவர் நன்றாக அறிந்திருப்பதை அவரது நடவடிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

# ஆறுமனமே ஆறு

ஆறுமனமே ஆறு — அந்த
ஆண்டவன் கட்டளை ஆறு
தேர்ந்து மனிதன் வாழும் வகைக்கு
தெய்வத்தின் கட்டளை ஆறு!

ஒன்றே சொல்வார் ஒன்றே செய்வார்
உள்ளத்தில் உள்ளது அமைதி
இன்பத்தில் துன்பம் துன்பத்தில் இன்பம்
இறைவன் வகுத்த நியதி!
சொல்லுக்குச் செய்கை பொன்னாகும் — வரும்
துன்பத்தில் இன்பம் பட்டாகும் — இந்த
இரண்டு கட்டளை அறிந்த மனதில்
எல்லா நன்மையும் உண்டாகும்!

உண்மையைச் சொல்லி நன்மையைச் செய்தால்
உலகம் உன்னிடம் மயங்கும் — நிலை
உயரும்போது பணிவு கொண்டால்
உயிர்கள் உன்னை வணங்கும்!
உண்மை என்பது அன்பாகும் — பெரும்
பணிவு என்பது பண்பாகும் — இந்த
நான்கு கட்டளை அறிந்த மனதில்
எல்லா நன்மையும் உண்டாகும்!

ஆசை, கோபம், களவு கொள்பவன்
பேசத் தெரிந்த மிருகம்
அன்பு, நன்றி, கருணை கொண்டவன்
மனித வடிவில் தெய்வம் — இதில்
மிருகம் என்பது கள்ளமனம் — உயர்
தெய்வம் என்பது பிள்ளை மனம் — இந்த
ஆறு கட்டளை அறிந்த மனது
ஆண்டவன் வாழும் வெள்ளை மனம்

**கவிஞர் கண்ணதாசன்**




VARSHA TM
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा

# நூல்

## நூலகம் என்றோர் அறிவுப் பட்டறை

பாரதி, "பயிற்றிப் பலகல்வி தந்து இந்தப் பாரை உயர்த்திட வேண்டும்' என்றார். பாரதியின் தாசனாகத் தன்னை அறிவித்துக் கொண்ட பாரதிதாசன், "புனிதமுற்று மக்கள் புது வாழ்வு வேண்டில் புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும்' என்றார்.

கல்வி மனிதனின் அடிப்படைத் தேவை. அதற்கு நூல்கள் வேண்டும். நூல்களைப் பாதுகாத்து சமூகத்துக்கு அளிக்க நூல்நிலையங்கள் அவசியம்.

தமிழ்ச் சமூகத்துக்கு நூல்நிலையங்கள் புதிதல்ல. சங்கம் வைத்து மொழி வளர்த்த தமிழகத்தில் பல்லாயிரம் ஆண்டுகளாக மூன்று சங்கங்களிலும் நூல்கள் அரங்கேற்றப்பட்டதோடு பாதுகாக்கவும் பட்டன. பிற்காலத்தில், அச்சுஇயந்திரம் வந்த பின் பழந்தமிழ் நூல்களைப் பதிப்பிக்க எண்ணிய தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதையர், ஆதீனங்களை நாடினார். அங்கே நூல்கள் ஏட்டுச் சுவடிகளாகப் பாதுகாக்கப்பட்டு வந்தன. தமிழர், நூல் நிலையங்களை ஏற்படுத்திப் பாதுகாக்கும் வழக்கம் கொண்டிருந்தமை இதனால் தெளிவாகிறது.






தமிழகத்தில் மட்டுமல்ல, பாரத தேசத்தில் நூல்களைப் பாதுகாத்து வைக்க நூல் நிலையங்களை ஏற்படுத்தியிருந்ததை நாளந்தா பல்கலைக்கழகத்தின் வழியாகத் தெரிந்து கொள்கிறோம். லட்சக்கணக்கான நூல்கள் இங்கே பாதுகாக்கப்பட்டிருந்ததை வரலாறு கூறுகிறது. யுவான் சுவாங், ஹியூன் சாங் போன்ற பயணிகளும் இங்கு வந்து கல்வி பயின்றதோடு சமய, சித்தாந்த நூல்களைப் படியெடுத்துக் கொண்டு, அதைப் பொக்கிஷமென தமது நாட்டுக்குக் கொண்டு சென்றதை அவர்களே பதிவு செய்துள்ளனர்.

காஞ்சியிலும் நூல்களைப் படியெடுத்துக் கொள்ள பல ஆண்டுகள் யுவான் சுவாங் தங்கியிருந்ததாகத் தெரிவித்துள்ளார். நூலகங்களும் கல்வி நிறுவனங்களும் அரசின் மானியத்தில் செயல்பட்டு வந்ததற்கும் குறிப்புகள் உள்ளன.

ஔவை தனது மூதுரையில்,"நீரளவே யாகுமாம் நீராம்பல் தான் கற்ற நூலளவே யாகுமாம் நுண்ணறிவு' என்று நூல் பல கற்க

# பெருமை

## கோதை ஜோதிலட்சுமி

வேண்டியதன் அவசியத்தைச் சொல்கிறார். இந்தப் பாரம்பரியத்தில் வந்த நமக்கு நூல் நிலையங்கள் வாழ்வோடு இணைந்தவை. இன்றைக்கும் அந்தத் தத்துவமே நூல் நிலையங்களை அரசு ஏற்படுத்துவதற்கான அடிப்படை.

தமிழக அரசு, மாவட்ட மைய நூலகம், மாவட்டக் கிளை நூலகம், ஊர்ப்புற நூலகம் என ஊர்தோறும் நூலகங்களை ஏற்படுத்தியிருக்கிறது. இது தவிரவும் சென்னையில் அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகம், மதுரையில் தமிழ்ச் சங்க நூலகம், கலைஞர் நூற்றாண்டு நூலகம் என சிறப்பு நூலகங்களும் அதிநவீன வசதிகளுடன் இயங்கி வருகின்றன. பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்களிலும் நூலகங்கள் மாணவர்களுக்குக் கற்றல் வாய்ப்பை ஏற்படுத்தக் கட்டாயமாக்கப்பட்டுள்ளன. தொழில்நுட்பம் வளர்ந்துள்ள இந்த நாளில் நடமாடும் நூலகம், மின் நூலகம் போன்ற வசதிகளும் ஏற்பட்டுள்ளன.

சமூகத்தின் அறிவு வளர்ச்சிக்கு நூலகம் அத்தியாவசியமானது. சாதாரண மனிதர்களையும் சாதனையாளர்களாக மாற்றியமைக்கும் வல்லமை நூல்களுக்கு உண்டு. அனைத்து நூல்களையும் ஒருவர் வாங்கிப் படித்தல் சாத்தியமில்லை என்பதால் நூலகங்கள் அனைவரும் எளிதாகச் சென்று பயன்படுத்தக் கூடிய வகையில் அமைதல் வேண்டும்.





இதற்காகவே ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி

> THE ONLY TRUE EQUALISERS IN THE WORLD ARE BOOKS; THE ONLY TREASURE-HOUSE OPEN TO ALL COMERS IS A LIBRARY; THE ONLY WEALTH WHICH WILL NOT DECAY IS KNOWLEDGE; THE ONLY JEWEL WHICH YOU CAN CARRY BEYOND THE GRAVE IS WISDOM.
>
> - JOHN ALFRED LANGFORD -

LIBQUOTES.COM

மற்றும் மாநகராட்சி நிர்வாகத்திற்கு வீட்டுவரி செலுத்தும்போதே அதில் ஒரு சிறு தொகையை நூலக வரி என்று செலுத்துகிறோம். இந்தத் தொகை, மாவட்ட நூலக ஆணைக் குழுவுக்கு வழங்கப்படும். இந்தத் தொகையைக் கொண்டு அந்தந்த மாவட்டங்களில் நூலகங்கள் பராமரிப்பு, நிர்வாகம், புதிய நூல்கள் வாங்குவது ஆகியவற்றைச் செயல்படுத்த முடிகிறது.

இப்படி நூல்நிலையங்களை அரசு சாத்தியமாக்கியுள்ள நிலையில், அதில்




நூல்கள் வாங்குவதில் ஏற்படும் சிக்கல்கள் குறித்தான ரிட் மனு ஒன்று 2019—ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை அமர்வில் தாக்கல் செய்யப்பட்டது. அதற்கான தீர்ப்பினை கடந்த ஜூன் மாதம் உயர்நீதிமன்ற தலைமை (பொறுப்பு) நீதிபதியாக இருந்த நீதியரசர் ஆர்.மகாதேவன் மற்றும் உயர்நீதிமன்ற நீதியரசர் ஜி.ஆர்.சுவாமிநாதன் வெளியிட்டனர்.




தீர்ப்பில், "நூலகங்கள் கற்பனையைத் தூண்டும் ஆற்றலைக் கொண்டுள்ளன. அவை உலகத்தை நமக்குத் திறந்து காட்டி ஆராய்வதற்கும் சாதிப்பதற்கும் ஊக்கம் தருகின்றன. நமது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றன' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மக்களின் அறிவுசார் திறன்கள், இயல்பு, நடத்தை இவற்றை வடிவமைப்பதில் நூலகத்தின் பங்கு முக்கியமானது. எனவே நூலகத்திற்கு வாங்கப்படும் நூல்களில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம் என்ற அடிப்படையில் சில தீர்வுகளை இந்தத் தீர்ப்பு தருகிறது.

தமிழகத்தில் நல்ல புத்தகங்களை வெளியிடும் பல சிறந்த பதிப்பகங்கள் இருக்கின்றன. அவை ஊக்குவிக்கப்பட வேண்டும். அவை வெளியிடும் புத்தகங்களை நூலகங்களுக்கு வாங்க வேண்டும். பொதுமக்கள் நூலகங்களில் நேரத்தைச் செலவிட ஊக்கமளித்து வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற ஆலோசனையும் வழங்கப்பட்டுள்ளது.

புகழ்மிக்க பதிப்பகங்கள் வெளியிடும் நூல்கள் மற்றும் சிறந்த எழுத்தாளர்களின் நூல்களை வியாபார நோக்கத்தில் வெவ்வேறு பெயர்களில் மாறுபட்ட அட்டைப் படத்துடன் வெளியிட்டு நூலகங்களுக்குத் தருவோரை அடையாளம் கண்டு கட்டுப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் நூலகத் துறைக்கு சில தீர்வுகளை நீதிமன்றம் தந்துள்ளது.

அதன்படி, நூலகங்களுக்கு நூல்களை வாங்குவதில் வெளிப்படைத்தன்மை இருக்க வேண்டும். அதை உறுதி செய்ய பொதுநூலக இயக்ககம் மக்கள் எளிதாகப் பயன்படுத்தக்கூடிய வகையில் வலைதளத்தை உருவாக்க வேண்டும். அப்படியோர் வலைதளம் இருப்பதை மக்கள் தெரிந்துகொள்ளும் வகையில் சமூக ஊடகங்கள் வாயிலாக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

புத்தகங்கள் வாங்குவதற்கான முன்மொழிவுகள் இந்த வலைதளத்தில் அறிவிப்புகளாக வெளியிடப்பட வேண்டும். 200 புத்தகங்களுக்குக் குறையாமல் பதிப்பித்துள்ள தமிழகத்தில் செயல்படும் பதிப்பகங்களுக்கு இந்த அறிவிப்புகளை மின்னஞ்சல் மூலம் தெரியப்படுத்த வேண்டும். இத்தகைய பதிப்பகங்களின் பட்டியலை ஏற்படுத்திப் பராமரிக்க வேண்டும்.

நாட்டுடைமை ஆக்கப்பட்ட புத்தகங்கள் மீண்டும் அச்சிடப்பட்டு வெவ்வேறு தலைப்புகளிலும் ஆசிரியர்களின் பெயர்களிலும் வெளியிடப்பட்டு ஒவ்வோர் ஆண்டும் வாங்கப்படுகின்றன. பதிப்புரிமை நாட்டுடைமை ஆக்கப்படும்போது, அரசே அதன் பாதுகாவலராகிறது. இலக்கியப் படைப்பின், படைப்பாளரின் தார்மிக உரிமையைப் பாதுகாக்க அரசு கடமைப்பட்டுள்ளது. எனவே,நாட்டுடைமை ஆக்கப்பட்ட எழுத்தாளர்களின் எழுத்துகள் வெவ்வேறு பெயர்களில் வெளியிடப்படுவதைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.




பொதுவெளியில் விற்பனைக்கு வராமல் பொதுநூலகங்களுக்காக மட்டுமே நூல்களைப் பதிப்பிக்கும் பதிப்பகங்களை இனம் கண்டு ஒதுக்க வேண்டும். ஒருமுறை வாங்கப்பட்ட புத்தகங்கள் ஐந்து ஆண்டுகளுக்கு மீண்டும் வாங்கப்படக் கூடாது என்ற விதிமுறை பின்பற்றப்பட வேண்டும். அப்படிப் பின்பற்றாத அதிகாரிகளின் மீது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்படி அரசுக்கு வழிகாட்டும் தீர்ப்பில் நூலகத்தின் பெருமைகள் மற்றும் அவசியம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. “”நூல்களை சேகரிப்பவை நல்ல நூலகங்களல்ல. நல்ல நூலகங்கள் சேவைகளை உருவாக்குகின்றன, சிறந்த நூலகங்கள் சமூகங்களை உருவாக்குகின்றன.” உறுப்பினர்கள் தங்கள் வட்டாரத்தில் உள்ள நூலகத்தைப் பயன்படுத்துவதில் முனைப்புடன் பங்கேற்பது, ஒட்டுமொத்த சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தையும், சமூகத்தில் உள்ள மக்களின் நல்லிணக்கத்தையும் மேம்படுத்தும்.

ஒரு நூலகம் என்பது பலருக்கும் பல விதமாக அமையலாம். நூலகங்கள் அறிவுக்கான நுழைவாயில்கள். அவை தனிநபர்கள் மற்றும் சமூகங்களுக்கு விலைமதிப்பற்ற ஆதாரங்களாகச் செயல்படுகின்றன. வெறும் புத்தகங்களின் களஞ் சியமாக மட்டும் நூலகங்கள் இருப்பதில்லை. கருத்துப் பரிமாற்றத்தை ஊக்குவிக்கும் கலாசார, அறிவுசார் மையங்களாக இருக்கின்றன. இதையெல்லாம் உணர்ந்தே நூலகங்களுக்கான சட்டம் இயற்றப்பட்டு நூலகங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

நூலகங்களின் பெருமையை எடுத்துச் சொல்லும் இந்தத் தீர்ப்பின் மிக முக்கிய அம்சம், நூலகத்திற்கு வருகை தருவதைப் பள்ளிப் பாடத்திட்டத்தில் கொண்டுவர பள்ளிக்கூடத்தின் தலைவர்களுக்கு அரசு சுற்றறிக்கை அனுப்ப வேண்டும் என்று தீர்ப்பின் இறுதியில் கூறியுள்ளதே ஆகும்.

மாணவர்களும், நூலகமும் உற்ற நண்பர்கள் ஆகும்போது, மாணவர்களுக்கு அறிவுப் பஞ்சமே இருக்காது. பாடப் புத்தகங்களைத் தாண்டி பிற நல்ல புத்தகங்களையும் அவர்கள் படிக்கும்பொழுது சிந்தனைத் திறன் விரிவடைகிறது. புரிந்துகொள்ளும் ஆற்றல் பெருகுகிறது. உடற்பயிற்சியால் உடல் உறுதி பெறுவது போல வாசிப்பு மனதிற்கு வலிமை தருகிறது.




சிறந்த, தெளிந்த மனநிலையை உருவாக்கவும் நன்மை தீமைகளைக் கண்டறியவும் வாசிப்பு அவசியம். ஒரு சாதாரண கல் உளியால் செதுக்கச் செதுக்க அழகிய சிற்பமாவது போல, புத்தகங்கள் வாசிக்க வாசிக்க அவை நம்மைப் பண்புள்ள மனிதர்களாக்குகின்றன.

வாசிப்பு மனிதனை முழுமையடையச் செய்யும். வாசிப்பு அறத்தினை மனதில் ஏற்றும். ஞாபக சக்தியைப் பெருக்கும். பார்த்து, கேட்டுத் தெரிந்து கொள்வதைவிட, புத்தகத்தில் படித்துத் தெரிந்து கொள்ளும் செய்திகள் நினைவில் நிற்கும். மாணவனின் பார்வையும் உலகமும் விரிவடையும்.

மாணவர்களிடத்தில் நூலகப் பயன்பாட்டுப் பழக்கத்தை ஏற்படுத்தி, அகண்ட, ஆழமான வாசிப்பில் ஆர்வத்தை உண்டாக்கும்போது, வேறுபாடுகள் மறைந்து அமைதியும் புரிதலும் மிகுந்த சமத்துவ சமூகம் உருவாகும்.

# பறவைக்காரனின் வாழ்க்கைப்பட்டியல்

கடந்த இலையுதிர்க் காலத்தில்
பருந்துமலையின் பாறைகளில்
மணிக்கணக்கில் அமர்ந்திருந்தோம்
கரும்பாறைக் குன்றுகளிலிருந்து
மேலெழும்பும் குறும்பருந்துக்
கூட்டத்தின் அகன்றுவிரிந்த
இறக்கைகளைப் பார்ப்பதற்காக.

ஆக்சிபிட்டர்ஸ் புட்டியோஸ்
இராப்டர்ஸ் எனப் பருந்துகளை
இனம் பார்த்து அறிந்தோம்.
கைகளைத் தொடுவதே
இறக்கையின் தொடுதலாய்
உணர்ந்தோம்.

நீயும் சென்றுவிட்டாய்.
இதயம் இடம் பெயர்ந்தது.
அனைத்து உள்ளுணர்வுகளுக்கும்
எதிராக நான்குவழிச்சாலையில்
வடக்குநோக்கி வண்டியை ஓட்டினேன்.

இதோ இங்கே இந்த இறக்கும் ஆண்டில்
இழப்புகளை அளப்பதற்காய்
நான் விடப்பட்டிருக்கின்றேன்.
இழப்பின் வலியுறுத்தல் அது.
தொலைவிலிருந்து நான்
பார்த்துக் கொண்டிருக்கிறேன்
பருந்துகளுக்காக.

**பார்பரா குருக்கர்**

**தமிழில்:**
**அ.பிரபா தேவி**


இனிய
தீபாவளி
நல்வாழ்த்துகள்
VARSHA
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
VARSHA



சிறப்புச் சிறுகதை

# என் மகள்

எஸ். கண்ணன்

அது ஒரு பின்னிரவு.

எங்கள் படுக்கை அறையில் என் மனைவியின் செல்போன் அடித்துக்கொண்டே இருந்தது. அதை எடுத்துப் பேசாமல் அவள் தவிர்த்துக்கொண்டே இருந்தாள்.

எங்கள் மகள் தூங்கிக் கொண்டிருந்தாள். செல்போனை எடுத்துப் பேசும்படி பலமுறை கூறியும், அவள் அதைத் தவிர்த்துவிட்டாள். மீண்டும் அது அடித்தது. எனவே நானே அதைக் கையில் எடுத்துப் பேசப்போனேன்.

திடுக்கிட்ட என் மனைவி திடீரென குளியலறைக்குள் சென்று கதவைத் தாழிட்டுக்கொண்டாள். நான் எழுந்துசென்று கதவைத் தட்டினேன். அவள் திறக்கவில்லை.

பயந்துபோன நான் கதவை பலத்துடன் மோதித் திறந்தேன். அங்கே அவள் வேறொரு மொபைலில் மெசேஜ் டைப் செய்து அனுப்பிக் கொண்டிருந்தாள். அதைப் பிடுங்கிப் பார்த்தபோது, 'எனக்குப் போன் செய்ய வேண்டாம். என் போன் தற்போது என் அண்ணனிடம் இருக்கிறது' என்ற குறுந்தகவல், திரும்பத் திரும்ப அழைத்துக் கொண்டிருந்த அந்த நபருக்கு சென்றிருந்தது.




இதைப் பார்த்த நான் அதிர்ந்து போனேன். ஆனால் வாயைத் திறக்கவில்லை. நான் ஏதாவது சொல்லப்போய் அவள் மீண்டும் கதவைத் தாழிட்டுக் கொண்டாலோ, அல்லது வேறு ஏதாவது செய்துகொண்டாலோ என்ன செய்வது என்று அமைதியாக இருந்துவிட்டேன்.

மறுநாள் காலை என்னுடைய அழைப்பின் பேரில் என் நண்பர் வீட்டிற்கு வந்தார். அவர் என்னுடைய அண்ணன் போன்றவர். ஏற்கனவே எங்களுக்குள் சண்டை வந்து பிரிந்திருந்தபோது எங்களிடையே சமாதானம் பேசி எங்களை மீண்டும் சேர்த்து வைத்தவர்.

என்னோடு நல்லவிதமாக சேர்ந்து வாழும்படியும், சிறிதுநாள் சென்றால் எல்லாம் சரியாகிவிடும் என்றும் என் மனைவியிடம் எடுத்துச் சொன்னார். ஆனால் இந்தமுறை என் மனைவி பிடிவாதமாக இருந்தாள். 'இந்த' வாழ்க்கையை இனி வாழமுடியாது என்று சொல்லிவிட்டார்.

ஆனால் முன்புபோல் அல்லாமல் இந்தமுறை என் மூன்று வயது மகளை என்னிடமே விட்டுச் சென்றார். பிறகு விவாகரத்துக்கு விண்ணப்பித்து

விவாகரத்தும் பெற்றார். நீதிமன்றத்தில் கூட “குழந்தையை அவளது தந்தை நன்கு கவனித்துக்கொள்வார். எனவே அவரிடமே அவள் இருக்கட்டும்” என்று நீதிபதி முன்பு சொன்னாள்.

என் மனம் உடைந்து போனது. ஆனால் ஒரேயொரு மகிழ்ச்சி எங்கள் செல்ல மகள் என்னோடு.

எங்களுடையது காதல் திருமணம். கல்லூரியில் ஒன்றாகப் படித்துக் மொண்டிருந்தபோது காதலித்தோம். அலைபாயுதே படத்தில் வருவதைப்போன்று யாருக்கும் தெரியாமல் பதிவுத் திருமணம் செய்துகொண்டு அமைதியாக இருந்தோம். கடைசியாக இருவரின் வீட்டிலும் சொன்னபோது பூகம்பம் வெடித்தது. கடைசியாக இருவீட்டிலும் ஒப்புக்கொண்டு கோயிலில் திருமணம் செய்துவைத்தனர்.

சிறிதுகாலம் என் பெற்றோருடன் சொந்த வீட்டில் வாழ்ந்தோம். எனக்கும் அப்பாவுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு வீட்டைவிட்டு வெளியே வந்து வாடகை வீட்டில் தனிக்குடித்தனம் செய்தோம். சொந்தமாக வீடுகட்டிக் கொண்ட பிறகே குழந்தை என்றாள் மனைவி. சரி என்றேன்.

அவள் ஐடி துறையில் பட்ட மேற்படிப்பு படித்திருந்தாள். எனவே நாங்கள் இருவரும் சென்னையில் குடியேறவேண்டும் என்று என்னை வற்புறுத்தினாள். அதில் எனக்கு உடன்பாடு இல்லை. வேண்டாம் என்றேன். உடனே கோபித்துக்கொண்டு அம்மா வீட்டுக்குச்சென்று சிலகாலம் இருந்தாள். பிறகு பிரச்சினையை பேசித் தீர்த்தோம். அவள் மீண்டும் வீட்டுக்கு வந்தாள்.

குழந்தை இல்லாததால் எங்களுக்குள் பிரச்சினை வருவதாக நினைத்தோம். எனவே குழந்தை பெற்றுக்கொண்டோம்.

குழந்தை பிறந்து மூன்று மாதங்கள் ஆனபோது, அவளுக்கு மீண்டும் சென்னைக்கு குடிபெயரும் ஆசை மூண்டது. அதையே என்னிடம் திருப்பித் திருப்பி வலியுறுத்தினாள். நான் மறுத்தேன். இந்தமுறை அவள் தனியாக குழந்தையை தூக்கிக்கொண்டு சென்னை சென்றுவிட்டாள். நான் குழந்தையைப் பார்க்கச் சென்றதையும் அவள்





விரும்பவில்லை. தம் விருப்பத்தை மீறி குழந்தையைப் பார்க்க வருவதாக போலீஸில் என்மீது புகார் கொடுத்தாள்.

நான் அவளோடு சென்னைக்கு வரவில்லை என்ற கோபம் என்று நினைத்தேன். அதனால் அவளைப் பார்ப்பதைத் தவிர்த்தேன். ஆனால் சென்னையில் அவள் எதிர்பார்த்ததுபோல நல்ல வேலை கிடைக்கவில்லை. திரும்பி ஊருக்கு வந்தும் தனியாகவே இருந்தாள். ஒரு கம்ப்யூட்டர் சென்டர் தொடங்கினாள். குழந்தை அங்கேயே ஒரு பள்ளியில் படித்தாள். ஆனால் நான் குழந்தையைப் பார்க்கப்போவது அவளைக் கோபப்படுத்தி மீண்டும் ஒன்றுசேரும் வாய்ப்பைக் கெடுத்துவிடும் என்று பயந்து நான் குழந்தையைக்கூட போய்ப் பார்க்கவில்லை. இப்படி ஒன்றரை ஆண்டுகள் பிரிந்திருந்தோம்.

இந்நிலையில், அண்ணனைப் போன்ற என் நண்பர் அவளிடம் தூது சென்று எங்களைச் சேர்த்து வைத்தார். மீண்டும் வாழ்க்கை நன்றாகப் போவதாகவே தெரிந்தது. அப்போது என் மனைவிக்கு வேறொரு ஆணிடமிருந்து மொபைல் வந்தது. என்னவென்று விசாரித்தேன்.






நாங்கள் பிரிந்திருந்த காலத்தில் அவனது அறிமுகம் ஏற்பட்டது என்றும் சட்டென துண்டித்தால் பிரச்சினையாகும், எனவே மெதுவாக அவனைத் துண்டித்துவிடுவதாகவும் என்னிடம் சொன்னாள். அது உண்மையாகவே இருக்கலாம். ஆனால் எனக்கு அது சரியாகப்படவில்லை.

ஒரு மாலைப்பொழுதில் கடற்கரை மணலில் அமர்ந்து பேசினோம். “கடந்த காலத்தில் எது நடந்திருந்தாலும் பரவாயில்லை. பிரிந்திருந்த காலத்தில் ஏற்பட்ட சம்பவங்களால் எந்தப் பிரச்சினை என்றாலும் அதை நான் பார்த்துக்கொள்கிறேன். நீ அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம் அவனுடைய தொடர்பை உடனே துண்டித்துவிடு” என்று சொன்னேன். அவள் ஏற்றுக்கொண்டாள்.

ஆனால் அதன் பிறகும் அதே நபரிடமிருந்து மொபைல் அழைப்பு வந்தது. ஆத்திரத்தில் நான் நிதானமிழந்து மனைவியின் மொபலைப் பறித்து வீசியெறிந்து அதை உடைத்துவிட்டேன். அதை அவள் நிதானமாக வாரி எடுத்து ஒன்றுசேர்த்து வைத்துக்கொண்டாள். அதன் பிறகும் இரவில் அவனிடமிருந்து போன் வந்து கொண்டேயிருந்தது. அவளையே அதை எடுத்துப் பேசச்சொன்னேன். அவள் பேசாததால் நான் எடுத்துப் பேசப்போனேன். பிறகுதான் என்னென்னவோ நடந்துவிட்டது.

இப்போது எல்லாம் முடிந்துவிட்டது...

அவள் பிரிந்துசென்று விவாகரத்தும் பெற்று, அந்த நபரை திருமணமும் செய்து கொண்டுவிட்டாள். நாங்கள் பிரிந்திருந்த காலத்தில் எல்லாம், மீண்டும் மனைவியுடனும் குழந்தையுடனும் சேர்ந்து வாழவேண்டும் என்று ஆசைப்பட்டேன். இப்போது அதில் ஒன்றுமட்டும் நடந்துவிட்டது. குழந்தையோடு மட்டும் வாழ்கிறேன். மற்றொன்று நடக்கவில்லை.

எங்கள் வீட்டில் நான், அப்பா, அம்மா, தங்கை, தங்கையின் கணவர் என்று அனைவரும் என் செல்ல மகளைப் பார்த்துக் கொள்கிறோம்.

விவாகரத்துப் பெற்ற காலத்தில் நான் மிகவும்

உடைந்து போயிருந்தேன். அதிலிருந்து மீண்டுவர அதிககாலம் பிடித்தது. அந்த நேரங்களில் என் மகள்தான் எனக்கு ஒரே ஆறுதல்.

பிறகு எனக்கு ஒரு பெரிய விபத்து ஏற்பட்டு, உயிர்தப்பி மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றேன். அப்போதும் அருகில் இருந்து பார்த்துக்கொண்டது என் மகள்தான்ஞ் என் அம்மாவுக்கு சர்க்கரை நோய். அவருக்கு இன்சுலின் போடுவதும், மாத்திரைகள் எடுத்துத் தருவதும் பன்னிரண்டு வயதான என் மகள்தான். அவளுக்கு நான் ஆறுதலாக இருப்பதைவிட, எங்களுக்கு அவள் ஆறுதலாக இருப்பதுதான் அதிகம்.

யாராவது என்னை விமர்சித்தாலும், எனக்காக பரிந்து பேசுவதும் என் மகள்தான். இதுவரை ஒருமுறை கூட அம்மாவைப் பற்றி அவள் கேட்டதும் இல்லை அதுபற்றிப் பேசியதும் இல்லை.

அவளிடம் அதிக ஈடுபாட்டுடன் ஒரு ‘தாயுமானவனாக’ நான் நடந்து கொள்கிறேன். பிக்னிக் மற்றும் ஹிஸ்டாரிகல் ப்ளேசஸ் அழைத்துச் செல்வேன். அதுபோன்ற பயணங்களின்போது யாராவது அவளிடம் அம்மாவைப் பற்றிக் கேட்டால், அமைதியாக இருந்துவிடுவாள். ஒன்று, கேட்டவர் அந்தக் கேள்வியை கடந்து செல்லவேண்டும் அல்லது நான் தலையிட்டுச் சமாளிக்க வேண்டும்.

அம்மாவைப் பற்றி அவள் ஏதும் சொல்லாவிட்டாலும் அந்த மௌனம் புரிந்துகொள்ள முடியாததுதான். என் மனைவி உடன் இருந்திருந்தால் நன்றாகத்தான் இருந்திருக்கும்...

என்னை மீண்டும் திருமணம் செய்து கொள்ளும்படி சொல் கிறார்கள். இப்போது என் மகளுக்கு பதின்மூன்று வயது. அவள் என்னோடு தனியாக அடிக்கடி பயணிப்பது என்னுடைய பெற்றோருக்கு சங்கடமாக இருக்கிறது. அவ்விதம் பயணிக்கும்போது அவள் பூப்பெய்திவிட்டால் என்னால் சமாளிக்க முடியாது என்று நினைக்கிறார்கள்.

என் மகளுக்கு கல்பனா சாவ்லா போல ஒரு விண்வெளி வீராங்கனையாக வேண்டும் என்கிற ஆசை.






நன்றாகவும் படிக்கிறாள்.நான் மீண்டும் திருமணம் செய்துகொண்டால் இப்போதுபோல என் மகளுடன் அதிக நேரம் செலவிடமுடியாது என்கிற அச்சம் எனக்கு.

வேறொரு பெண் என் வாழ்க்கையில் இனிமேல் வந்தால் மேலும் பிரச்சினைகள் வரலாம். தவறான புரிதல்கள் ஏற்படலாம்ஞ் வருகிற பெண் சரியாகவே என் பெண்ணைக் கண்டித்தாலும் எனக்கு அது வேறுவிதமாகத் தோன்றலாம். ஏற்கனவே எனக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் போதும். அதனால்தான் திருமணமே செய்துகொள்ளாமல் நான் தனியாகவே இருக்க முடிவெடுத்தேன்.

இப்போது என் வாழ்க்கையின் மையப்புள்ளி என் செல்ல மகள் மட்டுமே.

# ‘வா வாத்தியார்’ அடுத்த ஆண்டு வருகிறார்!




## ‘வந்தாச்சு வாத்தியார்’ எனும் சேதி வந்தால் சரி!

நலன் குமாரசாமி இயக்கத்தில் கார்த்தி, சத்யராஜ், ராஜ்கிரண், கீர்த்தி ஷெட்டி உள்ளிட்ட பலர் நடிப்பில் உருவாகி வரும் படம் ‘வா வாத்தியார்.’ ஸ்டூடியோ க்ரீன் நிறுவனம் தயாரித்து வரும் இந்தப் படத்துக்கு சந்தோஷ் நாராயணன் இசையமைத்து வருகிறார். ‘வா வாத்தியார்’ படத்துக்குப் பிறகு தொடங்கப்பட்ட ‘மெய்யழகன்’ படமே வெளியானது குறிப்பிடத்தக்கது. கார்த்தியின் திரையுலக வாழ்வில் அதிகப் பொருட்செலவில் உருவாகியுள்ள இந்தப் படத்தினை அடுத்த ஆண்டு வெளியிட திட்டமிட்டு இறுதிப்பணிகளை துரிதப்படுத்தி வருகிறார்கள். விரைவில் படத்தின் டீஸரை வெளியிட படக்குழு முடிவு செய்திருக்கிறது.



# சினிமாவுக்கு சிறு இடைவெளி விடும் அஜித்!






## திட்டம் தீட்டி வாழும் முறை அழகன்!

அஜித் நடிப்பில் ‘விடாமுயற்சி’ மற்றும் ‘குட் பேட் அக்லி’ ஆகிய படங்கள் உருவாகி வருகின்றன. இதில் ‘விடாமுயற்சி’ படத்துக்கு ஒரே ஒரு பாடல் மட்டும் மீதமிருக்கிறது. ‘குட் பேட் அக்லி’ படத்தின் படப்பிடிப்பு ஸ்பெயின் நாட்டில் நடைபெற்று வருகிறது. இந்த இரண்டு படங்களையும் முடித்துவிட்டு சுமார் ஒரு ஆண்டு சினிமாவுக்கு இடைவெளி விடுகிறார் அஜித். இந்த ஓர் இடைவெளியில் கார் பந்தயத்தில் கலந்துக் கொள்ள முன் தயாரிப்பு, திட்டமிடல், பந்தயம் என 6 மாதங்கள் முடித்தவுடன் குடும்பத்துடன் சுற்றுலா 6 மாதங்கள் செல்லவுள்ளார். ஓராண்டு கழித்து சன் பிக்சர்ஸ் தயாரிக்க, சிவா இயக்கவுள்ள மீண்டும் படத்தின் படப்பிடிப்பில் கலந்துக் கொள்ளவுள்ளார்.

# மீண்டும் வரும் ‘பூல் புலையா 3’




## ‘புலையா’வுக்கு எல்லையே இல்லைய்யா?

இந்தியில் தீபாவளி ஸ்பெஷல் படமாக ‘பூல் புலையா 3’ படம் ரிலீஸ் ஆக உள்ளது. இப்படத்தின் முதல் இரண்டு பாகங்கள் சக்கைப்போடு போட்ட நிலையில், அதன் மூன்றாம் பாகம் தீபாவளி வெளியீடாக நவம்பர் மாதம் 1ஆம் தேதி திரைக்கு வருகிறது. கார்த்தி ஆர்யன் ஹீரோவாக நடித்துள்ள இப்படத்தில், தீப்தி டிமிட்ரி, வித்யா பாலன் உள்ளிட்ட பலர் நடித்திருக்கின்றனர். அனீஸ் பஸ்மீ இயக்கி உள்ளார்.



# மீண்டும் சிலிர்த்தெழும் சிங்கம்!




## மீண்டும் கொட்டட்டும் வசூல் மழை!

தமிழில் ஹரி இயக்கத்தில் சூர்யா நடிப்பில் வெளியான 'சிங்கம்' படம் மிகப்பெரிய வெற்றியை பெற்றதைத் தொடர்ந்து அந்தப்படம் ஹிந்தியில் அஜய் தேவ்கன் நடிப்பில் சிங்கம் என்கிற பெயரில், இயக்குனர் ரோஹித் ஷெட்டி இயக்க, ரீமேக் செய்யப்பட்டு அங்கேயும் மிகப்பெரிய வெற்றி பெற்றது. இதில், கதாநாயகியாக காஜல் அகர்வால் நடித்ததன் மூலம் இந்தி பார்வையாளர்களிடமிருந்து அவர், அதிக அன்பைப் பெற்றார். அதனைத் தொடர்ந்து, தற்போது 'சிங்கம் அகெய்ன்' என்கிற பெயரில் இதன் மூன்றாம் பாகம் படத்தில் அஜய் தேவ்கனே கதாநாயகனாக நடிக்க கரீனா கபூர், தீபிகா படுகோன், அக்சய் குமார், ரன்வீர் சிங், ஜாக்கி ஷெராப், அர்ஜுன் கபூர், ஸ்வேதா திவாரி உள்ளிட்டோர் நடித்துள்ளனர். நவம்பர் 1—ம் தேதி வெளியாக உள்ள இப்படத்தின் டிரெய்லர் சமீபத்தில் வெளியாகி வைரலானது

துல்கர் சல்மான் நடிப்பில் பான் இந்தியா படமாக ரிலீஸ் ஆகும் திரைப்படம் ‘லக்கி பாஸ்கர்.’ சித்தாரா நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்திற்கு ஜி.வி பிரகாஷ் இசையமைத்துள்ளார். இப்படத்தில் துல்கர் சல்மானுக்கு ஜோடியாக மீனாட்சி சௌத்ரி நடித்துள்ளார். வெங்கி அட்லூரி இயக்கியிருக்கிறார். தமிழ், தெலுங்கு, கன்னடம் என தென்னிந்தியாவைக் குறிவைத்து வருகிற இப்படம் தீபாவளிக்கு வாண வேடிக்கை காட்டவிருக்கிறது.

# துல்கர் நடிப்பில் லக்கி பாஸ்கர்



# ‘புஷ்பா 2’ சிலாகிக்கும் தேவிஸ்ரீ

‘புஷ்பா’ படத்தின் பிரம்மாண்ட வெற்றிக்குப் பிறகு, ‘புஷ்பா 2’ படத்துக்கு பெரும் எதிர்பார்ப்பு உருவாகி இருக்கிறது. சுகுமார் இயக்கத்தில் அல்லு அர்ஜுன், ஃபகத் பாசில், ராஷ்மிகா மந்தனா உள்ளிட்ட பலர் நடித்து வருகிறார்கள். மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தயாரித்து வரும் இந்தப் படம் டிசம்பர் 6—ம் தேதி வெளியாகவுள்ளது. இப்படத்துக்கு இசையமைக்கும் தேவி ஸ்ரீபிரசாத், இதற்கான பத்திரிகையாளர் சந்திப்பில் ‘புஷ்பா 2’ படம் குறித்து, ‘புஷ்பா 2’ படம், முதல் பாகத்தினை விட இது 10 மடங்கு பெரிதாக உருவாகி இருக்கிறது. சுகுமார் இயக்கமும், அல்லு அர்ஜுன் நடிப்பும், அனைவரையும் ஆச்சரியமடைய செய்யும்” என்று தெரிவித்துள்ளார்.



## பாட்டை வைத்து இப்படமும் ஓட்டுவார்களா?

பிருத்விராஜ் நடிக்கும் 'விலயாத் புத்தா' படம் டிசம்பரில் திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இப்படத்தில் கடத்தல்காரராக நடிக்கும் பிருத்விக்கு, ப்ரியம்வதா கிருஷ்ணன் ஜோடியாக நடிக்கிறார். ஜி.ஆர்.இந்துகோபன் எழுதிய அதே பெயரில் நன்கு அறியப்பட்ட நாவலையே ஊர்வசி தியேட்டர்ஸ் திரைப்படமாகத் தயாரிக்கிறது. நீண்ட காலத் தயாரிப்பில் இருந்த இப்படம் வேகமெடுத்திருப்பது தேசிய விருது வென்ற பிருத்விராஜுக்கு, மீண்டும் ஒரு மகிழ்ச்சியான தொடக்கத்தை புத்தாண்டில் கொண்டுவரும் என அவரது ரசிக வட்டம் திளைக்கிறது.

## புத்தாண்டின் மகிழ்ச்சியான தொடக்கம்!



## ப்ருத்வி எடுக்கும் அவதார விளையாட்டு!

# ‘லூசிபர்’ இனி ‘எல் 2 எம்புரான்’ ஆகிறார்



## ‘எம்புரான்’ இரண்டாம் பாகமாக எம்புறான்?

மலையாள நடிகர் பிரித்விராஜ் இயக்கத்தில் கடந்த 2019—ம் ஆண்டு வெளியான திரைப்படம் ‘லூசிபர்.’ மோகன்லால் கதாநாயகனாக நடித்திருந்த இப்படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது. தற்போது தயாராகி வரும் இதன் 2—ம் பாகத்துக்கு ‘எல் 2 எம்புரான்’ எனப் பெயரிடப்பட்டுள்ளது. இப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர், ஹாலிவுட் தரத்தில் இருப்பதாக சமூக வலைத்தளங்களில் ரசிகர்கள் கருத்து தெரிவித்திருந்தனர். லைகா புரொடக்ஷன்ஸ் மற்றும் ஆசீர்வாத் சினிமாஸ் இணைந்து தயாரிக்கும் இப்படத்தில் மோகன்லாலுடன், டோவினோ தாமஸ், இந்திரஜித், மஞ்சு வாரியர், சானியா ஐயப்பன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.



சிறப்புச் சிறுகதை

# வரிசையில் ஒரு சிநேகம்

## லிந்தோய் சானு

### தமிழாக்கம்: எம் ஏ சுசீலா

சகி, தேநீரை மெள்ளப் பருகிக் கொண்டிருந்தபோது எல்லோரும் அதிகம் எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஒரு முக்கியமான செய்தியுடன் அவளது தங்கை மகன் அவளிடம் ஓடிவந்தான்.

“மபோக்’(பெரியம்மா)! என்.ஆர்.எல். பெட்ரோல் பம்பிலே இன்னிக்கு பெட்ரோல் சப்ளை பண்ணப் போறாங்கங்கிற நியூஸ் உண்மைதான். தயவு செய்து சீக்கிரமாப் போங்க” மூச்சிரைத்தபடியே பேசினான் தினேஷ்.

“நிஜமாவா? நம்ம பிரார்த்தனை கடவுளை எட்டியிருக்கும் போலஞ்.” என்றபடி சுவையான தேநீர்க் கோப்பையை அப்படியே தரையில் வைத்து விட்டுத் தன் அறைக்குள் ஓடினாள் சகி. வினாடி நேரத்தில் மெல்லிய சந்தன வண்ண ‘எனாஃபி’யும் (பாவாடை போன்ற வடிவில் உள்ள ஒரு மணிப்புரி ஆடை) ஆலிவ் பச்சை வண்ணத்தில் பருத்தி ‘ஃபனே’க்கும் (துப்பட்டா) அணிந்தபடி வெளியே வந்தாள். அவள் வருவதற்குள் அவளது ‘ஆக்டிவா’ வண்டியை சுத்தம் செய்து வைப்பதில் மும்முரமாக முனைந்திருந்தான் தினேஷ்.





“பையா! இப்ப போய் அதை சுத்தம் செய்யணும்னு அவசியம் இல்லை. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் நான் வேகமாப் போறதுதான் நல்லது” சகி தன் ‘ஆக்டிவா’வில் குதித்தேறியபடி அதை ஓட்டிச் சென்றாள்.

சற்று முன் தன் பெரியம்மா ஓய்வாக அமர்ந்திருந்த நாற்காலியில் உட்கார்ந்தபடி அவள் ஏமாற்றத்தோடு திரும்பி வந்து விடக்கூடாதே என்று மனதுக்குள் தன்னிச்சையாக வேண்டிக்கொண்டிருந்தான் தினேஷ். இப்போது சில நாட்களாகவே அவள் நம்பிக்கை இழந்தவளாகத்தான் இருந்தாள். அவனது பெரியம்மாவின் மகள் அந்த அதிகாலை நேரத்தில் இன்னும் எழுந்திருக்கவில்லை. தொந்தரவான ஏதாவது ஒரு செய்தி வந்தால் அவள் கத்துவாள் என்பது அவனுக்குத் தெரியும் இறுதித் தேர்வுகள் நெருங்கிக் கொண்டிருந்ததால் பதட்டத்தோடு இருந்த அவள் இப்போது எதற்கெடுத்தாலும் எரிச்சல்பட்டுக்கொண்டிருந்தாள்.

தொலைக்காட்சியில் தான் பார்த்திருக்கும் பந்தயக்காரர்கள் விரைவது போலவே தானும் வேகமாகச் சென்று கொண்டிருந்தாள் சகி. சாகச நாயகர்களின் மேலாடையைப் போல அவளது ‘எனாஃபி’யும் அவளுக்குப் பின்னால் காற்றில் படபடத்துக் கொண்டிருந்தது. அவள் ‘கியூ’வைப் பார்த்தாள். மிகமிக நீளமான வரிசை அது. ஆனால் அவள் வைத்திருந்த நம்பிக்கை, அந்தக்

காட்சியைக் கூட மதிப்புக்குரியதாய் ஆக்கியிருந்தது.

இன்றோடு எரிபொருள் தீர்ந்து இரண்டு வாரங்களாகிவிட்டிருந்தது. நீண்ட வரிசை கட்டி நின்றிருந்த வாகனங்களுக்குப் பின்னால் தனது 'ஆக்டிவா'வையும் நிறுத்தி வைத்து விட்டு சுற்று முற்றும் பார்த்தாள் அவள். வாகனங்களின் வரிசை எல்லையற்று நீண்டு கிடப்பது போல அவளுக்குத் தோன்றியது. உண்மையில் எரிபொருள் வாயு நிரப்பும் ஒரு 'பம்'புக்கு முன்னால் உள்ள வரிசையில்தான் அவள் நிற்க வேண்டும். ஆனால் இப்போது அவள் இருக்கும் இடத்திலிருந்து பத்து நிமிடப் பயணத்தில் அது இருந்தது. இப்போதைக்கு சற்றுத் தள்ளி இருந்த ஒரு இராணுவ முகாமும், அதற்கும் அப்பால் சாலையில் இருந்த ஒரு மருத்துவமனையுமே அவள் கண்ணில் பட்டன.



ஆனால் அவற்றை ஊடுருவிக் கொண்டு செல்லும் இந்த வரிசை கண்ணுக்கெட்டாத ஏதோ ஒரு இலக்கு வரை நீண்டு கிடந்தது. சற்றுத் தாமதமாகத் துயிலெழுபவர்களைப் பொறுத்த வரை அது என்னவோ சற்று அதிகாலை வேளைதான். சாலையில் கூட்டம் அதிகமில்லை. நடைப்பயிற்சி முடித்துத் திரும்பும் சிலர் கையில் சிறுசிறு மளிகைச் சாமான் பொட்டலங்களோடு சென்று கொண்டிருந்தார்கள். வரிசையில் நின்றிருந்தவர்களைப் போல அவர்கள் பதட்டமாகவோ, கவலையாகவோ காணப்படவில்லை. சகி, தன் 'ஆக்டிவா'வின் மேல் உட்கார்ந்தபடி சுற்றுப்புறத்தை இலக்கின்றி வெறித்துக் கொண்டிருந்தாள். சட்டென்று பின் பக்கம் ஏற்பட்ட ஒரு சிறிய குலுக்கலால் விழிப்புற்றவளாகத் திரும்பிப் பார்த்தாள்.

"ஐயோ! 'சாரி' இச்சே!(அக்கா) உண்மையாவே 'சாரி'. என்னோட வண்டியை இங்கே நிறுத்தி வைக்கிறது கொஞ்சம் கஷ்டமா இருந்தது. அதுதான்" என்று ஒல்லியான ஒரு பெண்மணி அவளிடம் மன்னிப்புக் கோரினாள். சகியின் வாகனத்துக்குப் பின்னால் இருந்த தன் துருப்பிடித்த 'மொபெ'டைத் தள்ளியபடி போராடிக் கொண்டிருந்தாள் அவள்.

"பரவாயில்லை" என்றபடி அந்தப் பெண்ணை நோக்கிப் புன்னகை செய்தாள் சகி.

"இன்னும் ரொம்ப தூரம் போக வேண்டியிருக்கும், இல்லியா" என்று கேட்டபடி




களைப்போடு தன் வண்டியில் ஏறி அமர்ந்து கொண்ட அந்தப் பெண் தங்களுக்கு முன்னால் முடிவற்று நீண்டு செல்லும் அந்த வரிசையையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"ஆமாம்! ஆனா ஏதோ கொஞ் சமாவது கொடுக்கிறாங்க இல்லே" என்றபடி திரும்பிப் பார்த்து அவளுடன் பேச்சைத் தொடர்ந்தாள் சகி.

"அது சரிதான்! இன்னிக்கு டீசல் கொடுக்கிறாங்கன்னு கேள்விப்பட்டு நான் காஞ்சிப்பூரிலே இருந்து இவ்வளவு தூரம் வந்திருக்கேன். வீட்டிலே என் பசங்க தூங்கிக்கிட்டிருக்காங்க" என்று கவலையோடு பேசினாள் அந்தப் பெண்.

"காஞ்சிப்பூரா? ஆமாம், அது ரொம்ப தூரத்திலேதான் இருக்கு. அங்கேயிருந்து இதை ஓட்டிக்கிட்டா நீங்க வந்தீங்க?"

"இல்லைஞ். ஏற்கனவே இது காலி. தள்ளிக்கிட்டேதான் வந்தேன்"

"நிஜமாவா?" என்று ஆச்சரியத்துடன் வாயைப்பிளந்தாள் சகி.

"எவ்வளவு நேரம் ஆச்சு" என்று மெதுவாகக் கேட்டாள்.

"காலையிலே மூணு மணிக்கு வீட்டை விட்டு வெளியே வந்தேன். என்னோட பெரிய பொண்ணு கிட்டே சின்னக் குழந்தைங்களைப் பார்த்துக்கச் சொல்லிட்டு வந்தேன்"

"ஓஞ் உங்களுக்கு எத்தனை குழந்தைங்க?"

"மூணு. இரண்டு பொண்ணு. ஒரு குட்டிப்பையன்" என்று சொல்லிவிட்டு சிநேகத்தோடு புன்னகை செய்தாள் அந்தப் பெண்.

"ஓஞ் எனக்கு ஒரே ஒரு பொண்ணுதான். இப்ப பத்தாவது பெரிய பரீட்சைக்குத் தயார் செய்துக்கிட்டிருக்கா"

"சரிதான், உண்மையை சொல்லணும்னா, இத்தனை குழப்பங்களுக்கும் நடுவிலே பரீட்சை வேற நெருங்கிக்கிட்டிருக்கு" என்றபடி அந்த நீண்ட வரிசையின் மீது மீண்டும் பார்வையை செலுத்தினாள் அந்தப் பெண்.

"நிஜம்தான்! ஒரு சுதந்திர தேசத்திலே அடிமைகளா வாழற மாதிரி.?"

"அது இருக்கட்டும், ஆமாம் உங்க பேர் என்ன இச்சே" என்று திடீரென்று கேட்டாள் அந்தப் பெண்.

"சகி. உங்கபேரு.?"

"தபலேய். நீங்க எங்கே இருக்கீங்க இச்சே?"

"நௌவ்ரெம் தாங்க் மமாங்க் லெய்காய்லே இருக்கோம். உங்களுக்கு 'குட் ஹார்ட்' பள்ளிக்கூடம் தெரியுமா?"




"தெரியுமே, அதுக்குப் பக்கத்திலேயா?"

"ஆமாம், அந்த ஸ்கூல் கட்டிடத்தை ஒட்டி அடுத்ததா இருக்கிற தெருவிலேதான் நாங்க இருக்கோம்"

''தாமோ'(கணவர்) என்ன வேலை பார்க்கிறார்?" என்று தபலேய் இயல்பாகக் கேட்டாள்.

"ஓஞ். என்னோட வீட்டுக்காரரைப் பத்திக்கேக்கிறீங்களா? அவர் ஒரு தனியார் பள்ளிக் கூடத்திலே ஆசிரியரா இருந்தார். மூணு வருஷம் முன்னாடி இறந்து போயிட்டார்" என்று சர்வசாதாரணமாகப் பதிலளித்தாள் சகி.



"ஐயையோஞ் ஏன் என்ன ஆச்சு?" என்று வருத்தமாகக் கேட்டாள் தபலேய்.

"அந்த நாட்களிலே என்ன செய்யறதுன்னே தெரியாம நான் தவிச்சிக்கிட்டிருந்தேன். சுவாசிக்கிறது கஷ்டமா இருக்குன்னு முதல்லே சொன்னார். பள்ளிக் கூடத்திலே சாக்பீஸோடயே வேலை செய்யறதாலே இருக்கலாம்னு நான் நினைச்சுக்கிட்டிருந்தேன். அப்புறம் சில மாசங்களிலே அவரோட உடம்பு முழுசாவே பாதிக்கப்பட ஆரம்பிச்சிடுச்சு. ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோனோம். மூணே நாள் ஐசியூஞ். அப்புறம் இறந்திட்டார்னு சொல்லிட்டாங்க. எல்லாம் ரொம்ப வேகமா நடந்து முடிஞ்ச



விஷயம்" தன் வாழ்க்கையின் வலிமிகுந்த தருணங்களை விரிவாக சொல்லிக் கொண்டிருந்தாள் சசி. அவளது இறந்த கால சோகத்தோடு ஒப்பிடும்போது இந்த நீண்ட வரிசையில் காத்துக்கொண்டு நிற்பது கூடச் அற்பமானதாகத் தோன்றியது. அவள் பேசுவதை கவனமாகக் கேட்டுக் கொண்டே இருபது முப்பது நிமிடங்களுக்கு ஒரு தரம் வாகனத்தை ஒரு அங்குலம் நகர்த்தி வைத்துக் கொண்டிருந்தாள் தபலேய். தன் கதையை சுருக்கமாக சொல்லி முடித்த சகி,

"ஆமாம். உங்க வீட்டுக்காரர் என்ன செய்யறார்" என்று கேட்டாள்.

"என்னோட வீட்டுக்காரர் டிரைவர் வேலை பார்க்கிறார் இச்சே. இப்ப ஹைவேஸ்லே எல்லா வண்டியும் தடைப்பட்டு 'ப்ளாக்' ஆகி நிக்குது இல்லே? அதிலே ஏதாவது ஒரு வண்டியிலே அவரும் இருப்பார். அந்தப் பிரச்சினைகளையெல்லாம் எப்பதான் தீர்க்கப் போறாங்களோ" என்றாள் தபலேய்.

அவர்கள் இருவரும் தங்கள் வண்டிகளை மறுபடியும் சிறிது தூரம் முன்னகர்த்தி வைத்தார்கள்.

"நீ சொல்றது சரிதான்! பதவி நாற்காலிகளிலே உட்கார்ந்திருக்கிற முட்டாள் பசங்களுக்கு நம்மளை மாதிரி உழைக்கிற ஜனங்களோட சிக்கல்கள் எப்பவுமே ஏற்பட்டதில்லையே, அவங்க இதெல்லாம் பார்த்து அனுபவிச்சிருந்தால்தானே" என்றவள் சாலையில் வைக்கப்பட்டிருந்த மிகப் பெரிய விளம்பரத்தட்டி ஒன்றைக் கோபத்தோடு பார்த்தாள் சகி.

"நகரோல் கி தெங்பேங்' திட்டம். நம் எதிர்கால இளைஞர்களுக்காக' மிகவும் சுத்தமான — விலையுயர்ந்த குர்த்தாக்களை அணிந்திருந்த சந்தோஷமான மனிதர்கள் அந்த விளம்பரத்தட்டியை நிறைந்திருந்தார்கள். குறிப்பிட்ட திட்டத்தை விட அந்தப் படங்களே அதில் மிகப்பெரிதாகப் பளிச்சிட்டுக் கொண்டிருந்தன.

வெயில் சற்று முதிர ஆரம்பித்திருந்தது. சாலையில் கூட்டமும் அதிகரித்திருந்தது.

"நான் என்ன செய்யப்போறேனோ தெரியலை இச்சே! எனக்கு மூணு குழந்தைங்க. கடைசிப் பையன் இன்னும் கூட பச்சைக்குழந்தை. என் நிலைமை ரொம்பக் கஷ்டமா இருக்கு. நாத்தனார் மாமியார்னு யாராவது இருந்தால் நல்லா இருக்குமேன்னு நினைச்சுப்பேன். ஆனா, எனக்கு யாருமே இல்லை"

உள்ளங்கைகளில் தன் முகத்தைத் தாங்கிப் பிடித்தபடி இவ்வாறு எதையோ சொல்லிக் கொண்டே போனாள் தபலேய்.

"சரி உன் வீட்டுக்காரர் செய்யற வேலையைத் தவிர வேற வருமானம் எதுவும் இருக்கா உங்களுக்கு? நீ எதுவும் வேலை பார்க்கிறியா?" என்று உள்ளார்ந்த அக்கறையோடு கேட்டாள் சசி.

"ம். ஊறுகாய் விக்கிறேன். ஆனா இந்த ரோட்பிளாக் இருக்கிறதாலே போன சில வாரங்களா என்னாலே அந்த வேலையை செய்ய முடியலை. ஊறுகாய் போடறதுக்கான சாமான்களும் பற்றாக்குறையா இருக்கு. அப்பப்ப நான் 'ஃபேனக்' தைப்பேன். என்னோட கடைசிக் குழந்தை மட்டும் இன்னும் கொஞ்சம் பெரிசா இருந்திருந்தா ஏதாவது ஒழுங்கான ஒரு வேலையைத் தேடிக்கிட்டு இருந்திருப்பேன்"




"அது சரிதான், உங்க வீட்டுக்காரர் வேற வராததாலே உங்களுக்கு இப்ப கஷ்டமான சமயமாத்தான் இருக்கும்"

தன் வாழ்க்கையைப் பற்றி இன்னும் கூட ஏதோ சொல்லிக் கொண்டே போனாள் தபலேய். இருவரும் தங்களுக்குள் ஏதேதோ பேசிப் பகிர்ந்து கொண்டிருந்தனர். பின்னால் நீண்டு தொடர்ந்து போய்க் கொண்டிருந்த வாகன வரிசையின் மீதும் ஒரு கண் வைத்தபடியேதான் இருந்தாள் சகி. இன்னும் நிறையப் பேர் தொடர்ந்து வந்து கொண்டிருக்கக் கூடும் என்றே அவளுக்குத் தோன்றியது.

தபலேய் அவளது கதையைப் பேசிக்கொண்டே போக இடையே குறுக்கிட்டாள் சகி.

"ஆமாம். காலைச் சாப்பாடு சாப்பிட்டியா.?"

"இன்னும் சாப்பிடலே இச்சே! நீங்க?"

"நான் ஒரு கப் டீ சாப்பிட்டேன். அது எப்பவோ

ஜீரணமாகியிருக்கணும். இப்ப எனக்கு ஏதாவது சாப்பிடணும் போல இருக்கு” என்று ஏதாவது உணவுவிடுதி தென்படுகிறதா என்று சுற்று முற்றும் பார்த்தாள் சகி.

“இச்சே! ஆஸ்பத்திரிக்குப் பக்கத்திலே ஏதாவது ஹோட்டல்கள் இருக்கும். நீங்க போங்க. நான் நம்ம ரெண்டு பேரோட வண்டிகளையும் பார்த்துக்கிறேன்.”

“ஆமாம்.. நீ சாப்பிடவேண்டாமா?” என்றாள் சகி.

“எனக்கு நிஜமாவே பசியில்லை. நல்லா இருக்கேன். வண்டியைப் பார்த்துக்கவும் ஆள் வேணுமில்லையா? நான் பார்த்துக்கறேன். நீங்க போய் ஏதாவது கொறிச்சிட்டு வாங்க” என்று பணிவுடன் சொல்லியபடி அவளைப் போகச் சொல்லி வற்புறுத்தினாள் தபலேய்.

“அதனாலே பரவாயில்லையா?” என்றபடி தன் ஆக்டிவாவை விட்டு வெளியே வந்தாள் சகி.

“ஒண்ணும் இல்லை. நீங்க போய் நல்லா சாப்பிட்டு வாங்க. நாம இந்த இடத்திலேயே தான் இருக்கப்போறோம்” என்று சிரித்துக் கொண்டே சொன்னாள் தபலேய்.

“சரி, அப்படீன்னா நான் வேகமாப் போயிட்டு வந்திடறேன்” என்று சிறிது தூரத்தில் தெரிந்த ஆஸ்பத்திரியை நோக்கி வேகமாக நடக்க ஆரம்பித்தாள் சகி. தனக்கு முன்னாலிருந்த வாகன வரிசைகளைத் தாண்டிக் கொண்டு போகும்போது இவ்வளவு பேருக்குப் பின்னால் தான் நிற்க வேண்டியிருக்கிறதே என்று நொந்து கொண்டாள்.

இறுதியாக ஒரு ஹோட்டலுக்குச் சென்று பலமான சிற்றுண்டியை வரவழைத்தாள். இரண்டு பூரி மசாலாக்களையும் பால் கலந்த சூடான தேநீரையும் விரைவாகக் காலி செய்துவிட்டுக் காசுகொடுக்கப் போன போதுதான் அவளுக்கு தபலேயின் நினைவு வந்தது, உடனே அவளுக்கும் ஒரு பொட்டலம் வாங்கிக் கொண்டாள்.

கையில் சூடான பார்சலுடன் திரும்பி வந்த சகி, அதை தபலேயிடம் தந்தபோது அவள் சற்று கூச்சத்தோடு புன்னகை செய்தாள்.

“என்ன இச்சே இதுஞ்? உங்களுக்குக் கஷ்டம் கொடுத்திட்டேனோ? ஆனா.. ஒருவகையிலே சந்தோஷம்தான். ஆமாம், இது எவ்வளவு?”




“ஐயோ அதைப்பத்தியெல்லாம் கவலைப்படாதே, இதே மாதிரி இன்னும் கொஞ்சநேரம் கழிச்சு மதிய சாப்பாட்டைப் பத்தியும் நாம யோசிக்க வேண்டியதா இருக்கும். பாருஞ் நாம இன்னும் பாதிவழி கூடத் தாண்டலை”

“ஆமாம் இச்சே” என்று சொன்னபடி இச்சே வாங்கி வந்த சிற்றுண்டியை வாயில் திணித்துக் கொண்டாள் தபலேய். பிறகு அந்த இரண்டு பெண்களும் தங்கள் பேச்சைத் தொடர ஆரம்பித்து



விட்டனர். இடையிடையே தாங்கள் சொல்லும் நகைச்சுவைகளுக்குத் தாங்களே சிரித்துக் கொண்டார்கள்.

சூரியன் உச்சிக்குப் போனபடி அந்த நீண்ட சாலையை இரக்கமேயின்றி அனல் பறக்கச் செய்து கொண்டிருந்தான். அதுவரை தங்கள் வாகனங்களில் அமர்ந்து கொண்டிருந்த பலரும் அருகிலிருந்த கட்டிட நிழல்களைத் தஞ்சமடைய ஓடிக்கொண்டிருந்தனர். சகியும் தபலேயும் தங்கள் வாகனங்களை விட்டுவிட்டு — வாகன வரிசைக்குப் பின்னால் இருந்த விளம்பரத் தட்டி ஒன்றின் நிழலில் போய் நின்று கொண்டனர். அங்கே நின்றபடி அவர்களின் பேச்சு தொடர்ந்தது. சகிக்குப் பகிர்ந்து கொள்ள நிறையக் கவலைகள் இருந்தன; வீட்டில் அவற்றைக் கேட்க எவருமில்லை. இப்போதோ ஒருத்தி அவற்றை ஆர்வமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறாள். இதுவரை இப்படிப்பட்ட நெஞ்சை உருக்கும் கதைகளைக் கேட்க தபலேய்க்குப் பொழுதே இருந்ததில்லை. இப்போதோ அவளிடம் அதற்கான நேரம் எக்கச்சக்கமாக இருக்கிறது. கொஞ்சம் முன்னால்

நகர்ந்தாக வேண்டுமென்றால் அவ்வப்போதாவது அவர்கள் வரிசையில் வந்து நிற்க வேண்டியதாக இருந்தது. தாங்கள் சென்று அடைய வேண்டிய இடத்துக்குச் சற்றுப் பக்கத்தில் வந்து விட்டதால் ஒருவருக்கொருவர் தங்கள் கதைகளைப் பரிமாறிக் கொள்வது அவர்களுக்கு சற்று தெம்பாக— ஆறுதலளிப்பதாக இருந்தது.

சகி, அங்கிருந்த மற்றவர்களை அதிகம் கவனிக்கவில்லை.

மதியச் சாப்பாட்டுக்குரிய நேரம் வந்துவிட்டதால் வரிசையில் நின்று கொண்டிருந்தவர்கள் சற்று பதட்டப்படத் தொடங்கியிருந்தனர். சகி தன் சின்னஞ்சிறு கைபேசியை வெளியில் எடுத்தபடி

“தபலேய்! நாம ரெண்டு பேரும் பேச்சில் மூழ்கிப் போய் இரண்டு பேரும் மறந்துட்டோம். நான் இப்ப என்னோட தங்கச்சி பையனைக் கூப்பிட்டு சாப்பாடு கொண்டுவரச் சொல்லப்போறேன். உனக்கும் அவனையே கொண்டு வரச்சொல்லிடறேன்.”

“ஐயையோ இச்சேஞ். வேண்டாம்! நான் பணம் கொண்டு வந்திருக்கேன். தெருவிலே விக்கிற எதையாவது வாங்கி சாப்பிட்டுக்குவேன். ஏற்கனவே நீங்க எனக்கு காலை டிஃப்பன் வேற வாங்கிக் கொடுத்திருக்கீங்க”

“இதோ பாரு! எனக்கு இங்கே தனியா சாப்பிடப் பிடிக்கலை. வரிசையைப் பாரு!ஞ் நிக்கிற ஒவ்வொருத்தரும் வீட்டுக்குப் போய்ட்டுத் தங்களுக்குப் பதிலா வேற ஆளை வரச் சொல்லி நிறுத்தி வைக்கிறாங்க. எனக்கு அப்படி நிறுத்தி வைக்க யாரும் இல்லை. ஆனா வீட்டிலே இருந்து சாப்பாடு எடுத்துக்கிட்டு வர என்னோட தங்கச்சி பையன் கட்டாயம் ஒத்துக்குவான். இன்னிக்கு ஒரு வேளை அவ வீட்டுக்கு வருவாளோன்னு நினைச்சு சோறு கொஞ்சம் கூடவே வச்சிட்டு வந்திருக்கேன் நான். அதனாலே எந்தப் பிரச்சினையுமே இல்லை. நாம இப்படி சந்திச்சுக்கிட்டது விதியாலே முடிவு செய்யப்பட்ட மாதிரி இருக்கு எனக்கு”

“சரி இச்சேஞ்.! நீங்க ரொம்பப் பாசமா இருக்கீங்க. இன்னிக்கு நான் ரொம்ப கொடுத்து வச்சிருக்கணும்” என்றபடி புன்னகைத்தாள் தபலேய்.

“ஆமாம்! இப்படி வெயில்லே வறுபடணும்னு நாம ரெண்டுபேரும் இன்னிக்குக் கொடுத்து வச்சிருக்கோம்” என்று சிரித்துக் கொண்டே சொன்னபடி கைபேசியில் தன் மருமகனை அழைத்தாள் சகி.

இரண்டு முறை அழைத்தபின் “என்ன மாபோக்” என்ற பதில் வந்தது.

“பையா, பேமா படிக்கிறாளா இல்லையா” என்று கவலையோடு அவனிடம் கேட்டாள் சகி.

“ஆமாம்! இன்னிக்குக் காலையிலே முழுசும் படிச்சா மதியம் சாப்பிட்ட பின்னாலே ஒரு தூக்கம் போடப் போயிட்டா. ஆமாம்ஞ்.. நீங்க பெட்ரோல் பம்ப் பக்கத்திலே போயிட்டீங்களா இல்லையா?” என்று பரபரப்போடு கேட்டான் தினேஷ்.

“ம்ஹூம். இல்லவே இல்லை. எனக்கு முன்னாலே இன்னும் அம்பது வண்டி நிக்குது” என்று அலுப்போடு சொன்ன சகி, பிறகு அன்போடு புன்னகைத்தபடி அவனிடம் பேசினாள்.

“அது எப்படியோஞ். போகட்டும் போ. நீ உன் பெரியம்மா பொண்ணை இன்னிக்கு நல்லா கவனிச்சிக்கிறேங்கிறதே நிஜத்திலே எனக்கு சந்தோஷமா இருக்கு. நீ ஆசைப்பட்ட அந்தச் சின்ன மியூசிக் சாமானைக் கட்டாயம் உனக்கு நான் வாங்கித் தருவேன். அப்புறம்ஞ் இப்ப நான் உன்னைக் கூப்பிட்டது வேறொரு உதவிக்காகஞ்”

“வரிசையிலே ஆள் மாத்தி நிக்கிறதுக்காகவாஞ்.?”




“இல்லே இல்லேஞ்.. எனக்கு இங்கே பொழுது நல்லாதான் போயிக்கிட்டிருக்கு. எனக்கு சாப்பாடு மட்டும் கொண்டு வந்து கொடு போதும்! இரண்டு பேருக்கு வேணும்”

“ரெண்டு பேரா? இன்னொண்ணு யாரு மாபோக்?”

“நீ கொண்டு வா சொல்றேன்ஞ். சாப்பாடு அந்த அளவுக்கு இருக்கும்னுதான் நினைக்கிறேன்.”

“ம்! நிறையவே இருக்கு. ராத்திரிக்கும் சேர்த்து நீங்க சமைச்சுட்டீங்கன்னு நினைக்கிறேன். ஆமாம்ஞ் அங்கே அப்படி என்ன சந்தோஷமான பொழுதுபோக்கு உங்களுக்கு இப்ப?” என்று சாதாரணமாகக்கேட்டான் தினேஷ்.

“இதோபாருஞ். நான் சும்மா ஏதோ ஜோக்கடிச்சேன், இப்ப நான் சொன்னதை செய். ரொம்ப நேரம் ஆக்கிடாதே சீக்கிரம் வா” என்று சிரித்துக் கொண்டே சொன்னாள் சகி.

மருமகன் தன்னிடம் கேட்டதை தபலேயுடன் அவள் பகிர்ந்து கொள்ள இருவரும் மனம் விட்டுச் சிரித்தார்கள். சகியின் குடும்பம், அவளது வக்கீல் சகோதரி, சகோதரியின் மகள், மகன் தினேஷ் என்று அவர்களது பேச்சு அந்தத் திசையில் செய்ய ஆரம்பித்திருந்தது.

பத்து நிமிடம் கழித்து சாப்பாடும் தண்ணீரும் எடுத்துக்கொண்டு தன் 'ஸ்போர்ட்ஸ்' சைக்கிளில் அங்கே வந்து சேர்ந்தான் தினேஷ்.

"மாபோக்! பேமா எழுந்தாச்சுஞ் நீங்க சீக்கரம் வந்திடுவீங்கன்னு அவகிட்டே நான் சொன்னேன்" என்றபடியே அங்கே நின்ற நீண்ட வரிசையைப் பார்த்தபடி புன்னகைத்தான் தினேஷ்.

"நான் நினைச்சது தப்பு போல இருக்கு"

"ஆனாஞ். இன்னிக்கு சாயங்காலம் இருட்டறதுக்குள்ளே எங்களாலே அங்கே போக முடிஞ்சிடும்னு நினைக்கிறேன். அவளைக் கஷாயத்தை சாப்பிட்டுட்டு கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கச் சொல்லு. ரொம்பப் படிச்சா பைத்தியம் பிடிச்சுப் போயிடுவா"



— இவ்வாறு பேசியபடியே அவன் கொண்டு வந்திருந்த உணவுப் பொட்டலத்தை வாங்கிக்கொண்ட சகி, அதிலிருந்த ஒவ்வொன்றையும் பிரிக்க ஆரம்பித்தாள்.

"ஐயோ சூடா இருந்திருந்தா குழம்பு இன்னும் கூட நல்லா இருக்கும். எப்படியோ நான் செஞ்சிருக்கிற வறுவல் பிரமாதமா இருக்கும் பாரு" என்றபடி தன்னைப் பார்த்துப் புன்னகைத்தபடி இருந்த தபலேயிடம் பாத்திரத்தைத் தந்தாள். தினேஷ் அப்போதுதான் முன்பின் அறிமுகமில்லாத அந்த நபரைப் பார்த்தான். அது தன் பெரியம்மாவின் நெருங்கிய தோழியாக இருக்கக் கூடுமென்று அவனாகவே நினைத்துக் கொண்டான். சள்ளை பிடித்த அந்த வேலையையும் கூட பொறுத்துக்கொண்டபடி அவள் சந்தோஷமாக இருப்பது அவனுக்கும் மகிழ்ச்சியாக இருந்தது.

"மாபோக்.. அப்ப நான் வீட்டுக்குக் கிளம்பறேன். அம்மா அஞ்சுமணிக்கு வீட்டுக்குத் திரும்பி வந்திடறேன்னு சொல்லியிருக்காங்க. அது வரைக்கும் நீங்க இங்கேயே மாட்டிக்கிட்டிருந்தா நான் வேணும்னா உங்களுக்குப் பதிலா வந்து நின்னுக்கறேன்" என்றான் தினேஷ்ஞ்




"நல்லதுஞ். ரொம்ப சந்தோஷம் பையாஞ் பத்திரமா பார்த்துப்போ" இணக்கமான சுபாவம் கொண்ட தன் மருமகனை அனுப்பி வைத்துவிட்டு தபலேயின் பக்கம் கவனத்தை மீண்டும் திருப்பினாள் சகி. அந்தப் பெண்மணி சாப்பாட்டை ரசித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

"உங்க குழம்பு அவ்வளவு நல்லா இருக்கு இச்சே. வறுவலுமே நல்லாதான் இருக்கு. 'கோலம்னி'யைப் (மணிப்பூர் பகுதியில் கிடைக்கும் மருத்துவ குணமுள்ள ஒரு கீரை வகை) பொரியல் செஞ்சா இவ்வளவு நல்லா இருக்கும்னு எனக்கு இது வரைக்கும் தெரியவே தெரியாது"

"ம்ஞ்.! அது நானா யோசிச்சு சொந்தமா செஞ்சதாக்கும்" என்று மனம் விட்டுச் சிரித்துக்கொண்டே சொன்னாள் சகி. "ம்.., நானே என்னைப் பத்திப் பெருமை அடிச்சுக்கறேன்"

தபலேயும் அதைக் கேட்டு சிரித்தாள். ஒவ்வொரு வாய் சாப்பிடும் போதும் எவர்சில்வர் ஸ்பூன்கள் ஓசையிட்டுக்கொண்டிருக்க, இருவரும் தங்கள் தங்கள் பாத்திரங்களிலிருந்து உணவைச் சாப்பிட்டபடி இருந்தனர். நேரம் கழித்து சாப்பிட்டதால், சத்தமும் சந்தடியும் நிறைந்திருந்த அந்தச் சாலையிலும் கூட சகிக்குத் தூக்கம் செருகிக் கொண்டு வந்தது. தனக்கும் அவ்வாறே இருப்பதாகச் சொன்னாள் தபலேய். தற்செயலாக நடந்த அவர்களது சந்திப்பு — ஏதோ வெகுநாள் கழித்து ஒருவரையொருவர் மீண்டும் சந்தித்துக் கொண்டது போலத் தோன்றியதால் வரிசையில் நின்றிருந்த மற்றவர்களுக்கு அவர்கள் இருவர் மீதும் பொறாமை கூட ஏற்பட்டிருக்கலாம். அவர்களிடையே நிலவிய சகோதரபாவம் அப்படி இருந்தது. ஒவ்வொருவரும் அடுத்தவரிடம் தாங்கள் கதையைப் பகிர்ந்து கொண்டார்கள். மற்றவர்கள் பேசுவதைக் கவனமாகக் கேட்டு உள் வாங்கிக் கொண்டார்கள். தாங்கள் சொல்லிக் கொள்ளும் சின்னச்சின்ன ஜோக்குகளுக்கெல்லாம் மனம் விட்டுச்சிரித்தார்கள்.

வானம் இலேசாக இருட்டிக் கொண்டு வந்தபோது அவர்களுக்கு முன்னால் ஏழு வகானங்கள் மட்டுமே பாக்கி இருந்தன. பேராசையோடு தன் ஆக்டிவாவைப் பிடித்துத் தள்ளியபடியே தனக்குப் பின்னால், நின்றிருந்த தபலேயையும் திரும்பிப் பார்த்தாள் சகி. அவர்கள் தங்களுக்குள் ஒரு புன்னகைப் பரிமாற்றம் செய்து கொண்டனர்; இறுதியில் ஒரு வழியாக அவர்கள் தங்கள்


தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
தீபாவளி
வாழ்த்துக்கள்
தீபாவளி
ஆண்டுதோறும் வரும்
ஒளிவெள்ளத்தில்...
துன்பம் தூரபோகட்டும்,
சூழ்ச்சி சூறாவளியாய் விலகட்டும்,
தீமை தீண்டாமல் போகட்டும்...
நன்மைகள் பல பெற....
கொண்டாடுவோம் தீபாவளியை

இலக்கை எட்டி விடும் நிலையில் இருந்தார்கள். தெரு விளக்குகள் ஒன்றன் பின் ஒன்றாக எரியத் தொடங்கியிருந்தன. வீடுகளிலும் கடைகளிலும் இருந்த விளக்குகளும் மின்ன ஆரம்பித்தன. கையில் ‘ஹோஸ்’ஸைப் பிடித்தபடி வியர்க்க விறுவிறுக்க பெட்ரோல் பம்பில் நின்றபடி தாகம் கொண்ட வாகனங்களுக்கெல்லாம் எரிபொருளை நிரப்பிக் கொண்டிருந்த பணியாளை நேருக்கு நேராகப் பார்த்தாள் சசி. இருவர் செல்லக் கூடிய தன் வாகனத்தின் இருக்கையை மேலே தூக்கி பெட்ரோல் டேங்கின் மூடியைத் திறந்தாள். அது காலியாக வெறிச்சோடிக் கிடப்பதை அவளால் பார்க்க முடிந்தது.



இப்போது அவளால் அதில் கொஞ்சம் எரிபொருள் நிரப்ப முடிந்துவிடும்; அதன் பிறகு அவள் உலகம் முன்பு போல சுழல ஆரம்பித்து விடும். அவள் தன் வாகனத்தை முன்னோக்கித் தள்ளினாள். வண்டியின் பெட்ரோல் டேங்கிற்குள் ‘ஹோஸ்’ஸின் முனை செருகப்பட்டபோது அவளிடமிருந்து ஒரு சந்தோஷப் பெருமூச்சு எழுந்தது. உள்ளே எரிபொருள் சுழன்று விழும் ‘விர்’ரென்ற சத்தம், பெட்ரோலின் மணம், அதை ஊற்றியபடியே மீட்டரைப் பார்த்துக் கொண்டிருந்த வியர்வை படிந்த பணியாளனின் முகம் என்று எல்லாமே அவளுக்கு சந்தோஷமளிப்பதாக இருந்தன.

பணத்தைக் கொடுத்துவிட்டு வாகனத்தைக் கிளப்பினாள் அவள். அதுவும் உற்சாகமாக உறுமியது.

தபலேய் தன் வண்டியில் பெட்ரோல் நிரப்பிக் கொள்வதற்கு வசதியாக — எதிர்முனையில் தன் வண்டியை நிறுத்தியபடி மலர்ந்த முகத்தோடு அவளைத் திரும்பிப் பார்த்தாள் சசி. ஆனால் தபலேயிடமிருந்து அவளுக்கு எந்த எதிர்வினையும் கிடைக்கவில்லை. கண்ணீர் நிரம்பிய கண்களோடு துருப்பிடித்த தன் வண்டிக்குப் பக்கத்தில் அவள் நின்றுகொண்டிருந்தாள்; அவளை ஒட்டி மற்றவர்களும் கூட்டமாகச் சூழ்ந்து நின்று கொண்டிருந்தனர்.





“பெட்ரோல் அவ்வளவுதான், தீர்ந்து போச்சு, இனிமே,அடுத்த தரம் வரும்போதுதான்‘சாரி’ “என்றான் பெட்ரோல் பம்ப் பணியாள்.

சசி, தன் வாகனத்தை ஒட்டியபடி தபலேயின் அருகே செல்ல முயன்றாள். ஆனால் அதற்குள் பெட்ரோல் பம்பில் பயங்கரமான கூச்சலும், குழப்பமும் நிலவ ஆரம்பித்திருந்தது. முழுநாளும் அங்கே காத்து நின்றிருந்துவிட்டு வெறுங்கையோடு வீட்டுக்குச் செல்ல நேர்ந்ததில் மக்கள் எரிச்சல் அடைந்திருந்தனர். கோபாவேசத்தோடு கூடியிருந்த அந்த மக்கள் திரளுக்கு நடுவே தபலேயை அவளால் பார்க்க முடியவில்லை. எங்கும் ஒரே குழப்பம். நேரமும் ஆகிவிட்டிருந்தது.

சசி, வீட்டை நோக்கித் தன் வண்டியை ஓட்ட ஆரம்பித்தாள். தபலேயை மறுபடி ஒரு முறை சந்திப்பது இனிமேல் தனக்கு சாத்தியமாகப் போவதில்லை என்பது அவளுக்குத் தெரிந்திருந்தது.

அடிக்குறிப்பு

முழுக்க முழுக்க நிலத்தால் மட்டுமே சூழப்பட்டிருக்கும் மணிப்பூருக்கு தேசிய நெடுஞ் சாலைகள் வழியே டிரக்குகள் மூலம்தான் அத்தியாவசியப் பொருட்கள் வந்து சேர்வது பழக்கம். ‘ப்ளாக்கேட்’ எனப்படும் சாலை மறியல், அங்கே வழக்கமாக நடந்தேறும் ஒன்று. வெவ்வேறு அமைப்புக்களும் தங்கள் அரசியல் நிலைப்பாடுகளுக்காக மாநிலம் தழுவிய முற்றுகைப் போராட்டம் நடத்தும்போது தேசிய நெடுஞ்சாலையில் செல்லும் வாகனங்களும் தடுத்து நிறுத்தப்பட்டு விடும். சில வேளைகளில் இத்தகைய தடைகள் மூன்று நான்கு மாதங்கள் வரையிலும் கூட நீளுவதுண்டு. இப்படிப்பட்ட வழித்தடைகள் நேரும்போது கடைகளிலும், சந்தைப் பகுதிகளிலும் இருக்கும் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதால் அவற்றின் விலை கறுப்புச் சந்தையில் மிக மிகக் கூடுதலாக இருக்கும். இத்தகைய சாலைத் தடுப்பின்போது நூற்றுக்கணக்கான வாகனங்கள் ஏதாவது ஒரு பெட்ரோல் பம்பின் முன்னால் வரிசை கட்டி நின்று கொண்டிருப்பதும், வரிசையில் முந்த வேண்டும் என்பதற்காக மனிதர்கள் இரவெல்லாம் கண் விழித்துக் காத்துக் கிடப்பதும் மணிப்பூரில் வாடிக்கை. அத்தகைய ஒரு காட்சியே இந்தச் சிறுகதையின் பின்புலம்.


VARSHA™
IDLI/DOSA BATTER
Eat Fresh!
Eat the Best!!!
VARSHA
1Kg
Traditional taste that Lingers
VARSHA
VARSHA



# தல வலம்

## திருச்சோபுரம் (தியாகவல்லி)

புவனகிரி செயபாலன்

‘விடை அமர்ந்து வெண்மழு ஒன்று
ஏந்தி விரிந்து இலங்கு
சடை ஒடுங்கத் தண் புனலைத்
தாங்கியது என்னைக் கொலாம்
கடை உயர்ந்த மும்மதிலும்
காய்ந்து அனலுள்ள ழுந்தத்
தொடை நெகிழ்ந்த வெஞ்சிலையாய்
சோபுர மேயவனே’ —திருஞானசம்பந்தர்.

மூலவர் —மங்களபுரீஸ்வரர்

உற்சவர் —சோபுரநாதர்

அம்பாள் —தியாகவல்லியம்மை, சத்யாயதாட்சி, வேல் நெடுங்கண்ணி.

தலவிருட்சம் —கொன்றை

தீர்த்தம் —கோயிலுள் உள்ள கிணற்றுத் தீர்த்தம், கோயில் பின்புறம் உள்ள குளத்து தீர்த்தம்.

புராணப் பெயர் —திருச்சோபுரம், தியாகவல்லி.

தொன்மம் (காலம்) —கி.பி. 6—ம் நூற்றாண்டுக்கு முந்தையது.




பதிகம் பாடியவர் —திருஞானசம்பந்தர். 11 பதிகங்கள்.

தேவாரப் பாடல் பெற்ற 274 சிவாலயங்களில் 217—ஆவதும், நடுநாட்டுத் தலங்களில் 6—வது தலமும் ஆகும்.

தலப் பெயர்

திருமுறைப் பெயர் சோபுரம். சோழபுரம் என்பது மருவி சோபுரம் என்றாயிற்று என்றும், திரிபுவனச் சக்கரவர்த்தியின் மனைவியான தியாகவல்லி அம்மையார் 11—ஆம் நூற்றாண்டில் இங்கு திருப்பணி செய்த காரணத்தால் தியாகவல்லி








என்று பெயர் பெற்றதாகத் தலபுராணம் கூறுகிறது.

கோயில் உள்ள பகுதி திருச்சோபுரம் என்றும், பக்கத்தில் உள்ள பகுதி தியாகவல்லி என்றும் சொல்லப்படுகிறது.

கோயில்

இப்பகுதி ஒரு காலத்தில் மணல்மேடாக இருந்ததாம். மதுரை ஆதீன ராமலிங்க சிவயோகி தம்பிரான், நடுநாட்டுத் தலங்களைத் தரிசிக்கும் பொருட்டு இவ்வூருக்கு வந்து, இங்கிருந்த மக்களிடம் சோமநாதர் ஆலயம் எங்கு இருக்கிறது என்று வினவ, அவர்கள் மணல்மேடு பகுதிக்கு அழைத்துச் சென்று, அந்த இடத்தைத் தான் கோவில்மேடு என்று அழைக்கிறோம் என்றனர்.

அவர்களிடம் இவ்வாலயத்தின் வரலாற்றைச் சொல்லிக்கொண்டு இருந்தபோது, வீசிய பலத்த காற்றால் கோவிலின் உச்சி தெரிந்தது. இதை கண்ட மக்கள் மணலை அப்புறப்படுத்தினர். கோவில் தெரிந்தது. கருவறையில் தீபம் அணையாமல் இருந்து கொண்டிருந்ததாம். சிறிது நேரத்துக்கு முன்தான் பூஜை நடந்ததற்கான அடையாளம் தெரிந்தனவாம்.

மதுரை ராமலிங்க சிவயோகி தம்பிரான் இத்தலத்துக்கு வந்து இம்மணல்மேட்டைக் காண, மணலில் புதைந்திருந்த கோயிலின் விமானக் கலசம் மட்டும் மேலே தெரிய, அவர் உடனே அப்போது கடலூரில் இருந்த சேஷாசல நாயுடு, ராமானுஜல நாயுடு, ஆயிரம் காத்த முதலியார், நஞ் சலிங்க செட்டியார் ஆகியோரை அணுகித் தகவலைச் சொல்லி, அவர்களின் ஆதரவோடு மணல்மேட்டைத் தோண்டி கோயிலைக் கண்டுபிடித்து கட்டுவித்தார் என்ற ஒரு செய்தியும் சொல்லப்படுகிறது.

இதனால் இத்தலத்தைத் தம்பிரான் கண்ட கோயில் என்று மக்கள் அழைக்கின்றனர். கோயிலுக்கு பின்னால் கடல் உள்ளது. இத்தலம் மணற்பாங்கான பகுதியில் விசாலமான இடப்பரப்பில் உள்ளது.

தல வரலாறு

கைலாயத்தில் சிவன் — அம்பாள் திருமணம் நடந்தபோது, பூமியை சமப்படுத்த தென் திசை நோக்கி வந்தார் அகத்திய முனிவர். அவர் வரும் வழியில் பல இடங்களில் சிவலிங்க பிரதிஷ்டை செய்து வழிபட்டார். கடற்கரை வழியாக வரும்போது அவருக்கு வயிற்று வலி ஏற்பட்டது. ஈசனிடம் தன் வலி தீர்க்க வேண்டும் என முறையிட விரும்பி, கடல் மணலால் லிங்கம் அமைக்க முயன்றார். எவ்வளவு முயன்றும் லிங்கத்தை சரியாக அமைக்க முடியவில்லை. சிவன் தன்னைச் சோதிப்பதை உணர்ந்த அகத்தியர், அருகில் இருந்த மூலிகைச் செடிகளைப் பறித்து

அதன் சாற்றை மணலில் சேர்த்து, அக்கலவையால் லிங்கத்தை அமைத்து வணங்க, அவருக்கு வயிற்று வலி நீங்கியது. அகத்தியர் லிங்கத்தை பிரதிஷ்டை செய்தபோது ஏற்பட்ட கைத்தடம் லிங்கத்தின் மேல் இருக்கிறது. இந்த இடத்தில்தான் பிற்காலத்தில் கோயில் கட்டப்பட்டது.

மூலவர்



சோபுரநாதர் சதுர வடிவ பீடத்தின் மீது மணல் லிங்கமாக காட்சி தருகிறார். லிங்கத்தின் மேல் பகுதியில் உள்ள சிறிய உருண்டை போன்ற அமைப்பு கங்காதேவியின் வடிவம் என்கிறார்கள்.




அகத்தியர் லிங்கத்தை அமைத்த லிங்கத்திலேயே அம்பாள் ஐக்கியமாகி விட்டதாகவும், அதன் காரணமாக சிவலிங்கத்துக்கு மஞ்சள் குங்குமம் வழிபாடு நடப்பதாகவும் ஐதீகம். அதனால் இவருக்கு மங்களபுரீஸ்வரர் என்ற பெயரும் உண்டு. மூலவரின் இருபக்கமும் துவாரக பாலகர். கருவறையில் ஈசன் மேல் நோக்கி காட்சி அளிக்கிறார்.

கோயில்

நந்தவனங்களோடு உள்ள இவ்வாலயம் விசாலமான பிரகாரங்களைக் கொண்டது. இரண்டாம் பிரகாரத்தில் நந்தி, கொடி மரத்தைக் கடந்தால் முதல் பிரகாரத்து தென்மேற்கு மூலையில் வாகனம் இல்லாத விநாயகர். இதே பிரகாரத்தில் தேவியருடன் வாகனமில்லா முருகன். கஜவல்லி, வீராட்டேஸ்வர லிங்கம், கண்ணப்பர், நாயன்மார்கள், தொகையடியார்கள், நவக்கிரகங்கள் உள்ளன.

அம்பாள்

முதல் பிரகாரத்தில் இருந்து மூலவர் செல்லும் வழியில் மகா மண்டபத்துக்கு வடக்கில் அம்பிகை வேல் நெடுங்கண்ணி, தனிச் சன்னதியில் தெற்கு நோக்கியுள்ளார். மேலிரு கரங்களில் ஜெபமாலையும் கபாலமும், கீழ் இரு கரங்களில் அபய வரத முத்திரையுடன் அருள் புரிகிறாள்.

திரிபுரச் சக்கரவர்த்தியும் அவர் மனைவியும் வழிபட்ட லிங்கங்கள் கோயிலுக்குள் உள்ளன.

கோஷ்டம்

கோஷ்ட மூர்த்தத்தில் லிங்கோற்பவருக்கு இருபுறமும் திருமாலும், பிரம்மாவும் நின்ற கோலத்தில் தரிசிக்கின்றனர். மும்மூர்த்திகளின் தரிசனம் விசேஷமானது.

தட்சிணாமூர்த்தி

சிவத் தலங்களில் கையில் வீணை ஏந்தியபடி இசைக்கு அதிபதியாக காட்சி தரும் தட்சிணாமூர்த்தி, இத்தலத்தில் இசையின் வடிவமாகவே அருளுகிறார். இவரது சிலையைத் தட்டிப் பார்த்தால் சப்தஸ்வர ஓசை எழுகிறது. வழக்கமாக வலக்கையில் நாகமும், இடக்கையில் அக்னியும் ஏந்தி இருப்பார். ஆனால் இங்கு இடது கையில் நாகமும் வலது கையில் அக்னியும் மாற்றி வைத்துள்ளார்.

இவருக்கு மஞ்சள் வஸ்திரம் அணிவிக்காமல் வெள்ளை வஸ்திரம் சார்த்தி வழிபடுவது மற்றுமொரு சிறப்பு.

கல்வெட்டுகள்

இத்தலத்தில் ஐந்து கல்வெட்டுகள் உள்ளன. பாண்டியர் காலக் கல்வெட்டு ஒன்றில் தியாகவல்லி உடையார், திருச்சோபுரம் உடைய

நாயனார் என்று இவ்வூர் ஈசனைக் குறிக்கப்பட்டுள்ளது. இவருக்கு மங்களபுரீஸ்வரார், திருசோபுர நாதர் என்ற பெயர் வழங்கப்படுவதுபோல் அம்பிகைக்கு சத்தியாய தாட்சி, மங்களநாயகி, வேல் நெடுங்கண்ணி, சோபுர நாயகி என்ற பெயர்கள் உண்டு.



இங்குள்ள நர்த்தன கணபதி கோயிலுக்கு சுந்தரபாண்டியயன் நிலம் அளித்ததாக உள்ளது. இங்குள்ள கல்வெட்டில் ராஜராஜ தேவர், சாரிபுத்த பண்டிதர், மாறவர்மன் சுந்தரபாண்டியன், கோநேரின்மை கண்டான், சுந்தரபாண்டிய தேவர் பெயர்கள் உள்ளன.

பாண்டியர் காலத்தில் இத்தலம் சீரமைக்கப்பட்டது என்பது கல்வெட்டு மூலம் தெரிய வருகிறது. சோழர், பாண்டியர் கல்வெட்டுகளில் இக்கோவிலுக்கு நிலம் கொடுத்த செய்தியையும், தொண்டைநல்லூரை தானமாக அளித்த தகவலையும் தெரிவிக்கின்றன.






கடலுக்கு மேற்கில், தொண்டை மாநகரத்துக்கு கிழக்கில், பெண்ணை ஆற்றுக்கு தெற்கில், வெள்ளாற்று வடக்கில் உள்ள நிலங்கள் கோயிலுக்குரிய பட்டா நிலங்களாக இருந்தனவென்றும் அவைகளை அரசு எடுத்துக் கொண்டு அதற்குரியதாக ஆண்டுதோறும் கோவிலுக்கு 600 ரூபாய் தருவதாகவும் தெரிகிறது.

பிற்காலத்தில் தொண்டை மாநகரத்தை சேர்ந்த முதுரைசாமி ரெட்டியார் கோயிலின் ஆராதனைக்காக வீடுகளை வாடகைக்கு விட்டு அதன் வருமானத்தில் ஆராதனை நடத்துமாறு உயில் சாசனம் எழுதி அதை 26.8.1912—ல் ஆவணக் காப்பகத்தில் பதிவு செய்துள்ள கல்வெட்டு ஒன்று இங்கு உள்ளது.

வழிபட்டோர்

திருஞானசம்பந்தர், சுந்தரர், சேக்கிழார், அகத்தியர்.

இத்தலத்திற்கு பக்கத்தில் உள்ள ஆலப்பாக்கம் ஊரிலிருந்து காகபுஜண்ட ரிஷி என்ற முனிவர் இங்கு வந்து ஈசனை வழிபட்டதாக சொல்லப்படுகிறது.

சூரிய ஒளி

ஒவ்வொரு வருடமும் புரட்டாசி மாதம் 15 ஆம் தேதி முதல் 25 ஆம் தேதிக்குள்ளும், மாசி மாதம் ஐந்தாம் தேதி முதல் 10ஆம் தேதிக்குள் ஒருநாள் சூரிய அஸ்தமன ஒளி ஈசன் மேல் விழும்.

திருவிழா

பங்குனி உத்திர திருவிழா 10 நாள் சிறப்பாக நடக்கும். ஐப்பசி மாதத்தில் நடக்கும் அன்னாபிஷேகம் சிறப்பு வாய்ந்தது. அன்று மூலவர் மேல் சாத்தியப்படும் அன்னம் மருத்துவ குணம் கொண்டது என்றும், பிரசாதத்தை உண்டால் குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்பதும் நம்பிக்கை.

பரிகாரத்தலம்

இது கல்யாண பரிகாரத் தலம். திருமணத்தடை நீங்க இங்கு வந்து ஈசன், அம்பாளுக்கு மஞ் சள் குங்குமம் வைத்து பூஜை செய்ய வேண்டும். பிரசாதமாகத் தரப்படும் மஞ்சள் குங்குமத்தை தினமும் நெற்றியில் வைத்து வரவேண்டும். இந்த மஞ்சள் குங்குமம் தீர்ந்து விடுவதற்குள் திருமணம் கூடிவிடும் என்பது நம்பிக்கை.

கும்பாபிஷேகம் 2010—ல் கும்பாபிஷேகம் நடந்தது. விரைவில் கும்பாபிஷேகம் நடப்பதற்கான



ஆயத்தப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றது.

பிரார்த்தனை

இசைப் பயிற்சி மாணவர்கள் இங்கு விசேஷமாக பூஜை செய்து வேண்டிக் கொள்கிறார்கள்.



நேர்த்திக்கடன்

திருமணத் தடை உள்ளவர்களும், நோயால் அவதிப்படுபவர்களும் ஈசனுக்கு அபிஷேகம் செய்து மஞ்சள் குங்குமம் வைத்து நேர்த்திக்கடன் செய்கிறார்கள்.

கோயில் திறக்கும் நேரம்

தினமும் நான்கு கால பூஜை நடைபெறும். தினமும் காலை 8:30 மணி முதல் 11 மணி வரையிலும், மாலை 5:30 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் திறந்திருக்கும்.

இருப்பிடம்

கடலூர் — சிதம்பரம் நெடுஞ் சாலையில் ஆலப்பாக்கம் புகைவண்டி நிலையம் செல்ல உள்ள பாதையில், ரயில்வே கேட்டை கடந்து உப்பனாறு மேல் கட்டப்பட்டுள்ள பாலத்தின் வழியே சென்று கோவிலை அடையலாம். கடலூரில் இருந்து 5, 22, 32 என டவுன் பஸ்கள் உண்டு.

தொடர்புக்கு: குருக்கள் சோபுரநாதன் என்கிற மங்களபுரீஸ்வரர்

கைப்பேசி: 9790524054.


(தொடரும் வலம்.....)



# புத்தக விமர்சனம்

## நாவுக்கரசரும் நாவாய் நாயகரும்

**நூலாசிரியர்: ஆ.அறிவழகன்**




**விலை : ரூ. 150**

**வெளியீடு:**

**யாப்பு பதிப்பகம்**
**சென்னை – 76**

**தொடர்புக்கு:**
**www.yaappupublication.in**

ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த நாவுக்கரசரையும் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த வ.உ.சி.யையும் ஒப்பு நோக்கி எழுதப்பட்ட நூல். இருவரின் வாழ்க்கையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அதில் பல ஒற்றுமைகள் புலப்படும். சைவம் தழைக்கப் பாடுபட்ட சொல்லுறுதி கொண்ட உழவாரத் தொண்டர் திருநாவுக்கரசர் என்றால், அடிமை விலங்கை உடைத்தெறிய வீறுகொண்டு சுதேசி கப்பல் ஓட்டிய நெஞ்சுறுதி கொண்ட தீரர் வ.உ.சிதம்பரனார்.

உயிரை மாய்க்கின்ற துன்பங்கள் வந்தபோதும் ஒழுக்கத்தையும் வீரத்தையும் விடாதவர்கள் நாவுக்கரசரும், வ.உ.சி.யும். அதை இருவரின் வாழ்விலும் நடைபெற்ற நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டி நூலாசிரியர் விளக்கியிருப்பது மிகச் சிறப்பு. சைவத்தை பரப்பியதற்காக நாவுக்கரசருக்கும், சுதேசியத்தை வெள்ளையருக்கு எதிரான ஆயுதமாகப் பயன்படுத்திய வ.உ.சி.க்கும் அளிக்கப்பட்ட தண்டனைகள் மிகக் கொடூரமான ஒற்றுமை கொண்டவை என இருவரின் வாழ்வில் ஒற்றுமைகளைப் பட்டியலிடுகிறது நூல். இரு நாயகர்களை மேன்மேலும் அறியச் செய்யும் அடர்த்தியான ஒப்பீட்டு நூல் இது.

# அப்பா வீடு திரும்புகிறார்

என் அப்பா பின்மாலைப்
புகைவண்டியில் பயணிப்பார்
மஞ்சள் ஒளியில் அமைதியான
பயணிகளுக்கு நடுவே நின்றபடி
கவனிக்காத அவரது கண்களை
புறநகர்கள் நழுவிக் கடந்து செல்லும்
அவரது சட்டையும்
கால்சட்டையும் நனைந்திருக்க
அவரது கருப்பு மழை மேல்அங்கி
சேறினால் கறை படிந்திருக்க
புத்தகங்கள் திணிக்கப்பட்ட அவரது பை
சரிந்து தொங்கிக் கொண்டிருக்கும்.

வயதினால் மங்கிய அவரது கண்கள்
வீடு இருக்கும் திசையை நோக்குகின்றன
ஈரப்பதமான மழைக்கால இரவின் ஊடாக.
நீண்ட வாக்கியத்திலிருந்து கைவிடப்படும்
ஒரு வார்த்தையை போன்று
புகைவண்டியிலிருந்து இறங்கும் அவரை
இப்போது என்னால் பார்க்க முடிகிறது.
அவர் துரிதமாக கடக்கிறார்

நீண்ட சாம்பல் நிற நடைமேடையை,
அவரது செருப்புகள் சேறினால்
பிசுபிசுப்பாக இருக்க
இருப்புப் பாதையைக் கடந்து,
சந்தில் நுழைந்து, விரைகிறார். மீண்டும் வீடு,
நான் பார்க்கிறேன் அவர் நலிந்த தேநீரைப்
பருகுவதை,
பழைய சப்பாத்தியை உண்பதை,
புத்தகம் வாசிப்பதை.
கழிவறைக்குள் செல்கிறார்
மனிதரால் உருவாக்கப்பட்ட உலகிலிருந்து
மனிதர் விலகுவதைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்க.

வெளியில் வந்தவர் நடுங்குகிறார்
பீங்கான் தொட்டி அருகில்,
குளிர்ந்த நீர் ஓடுகிறது
அவரது பழுப்புநிறக் கைகளின் மேல்,
சில நீர்த்துளிகள் அவரது மணிக்கட்டுகளின்
நரைத்த ரோமங்களில் ஒட்டிக் கொள்கின்றன.
அவரது பாராமுகப் பிள்ளைகள் எப்போதுமே
அவருடன் பகிர்ந்திட மறுத்து விடுகிறார்கள்.
வேடிக்கைப் பேச்சுகளையோ
இரகசியங்களையோ.

இப்போது அவர் தூங்கப் போகிறார்
கரகரக்கும் வானொலியைக் கேட்டபடி,
தன் முன்னோர்களையும்,
பேரக் குழந்தைகளையும் பற்றிக் கனவு கண்டபடி,
குறுகலான கணவாய்களின் வழியாக
துணைக் கண்டங்களுள் நுழையும்
நாடோடிகளை நினைத்தபடி.

மூலம்:

## திலீப் புருஷோத்தம் சித்ரே

**தமிழாக்கம்: ராமலக்ஷ்மி**




***திலீப் புருஷோத்தம் சித்ரே (1938 - 2009) இந்தியா விடுதலை பெற்ற பின் தோன்றிய மிக முக்கிய எழுத்தாளர். மராத்தி மற்றும் ஆங்கிலம் மொழிகளிலும் எழுதி வந்தவர். ஆசிரியர், சிறந்த ஓவியர், திரைப்படத் தயாரிப்பாளர் மற்றும் பத்திரிகைகளில் எழுத்தாளர்.***


தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
VARSHA™
தீபாவளி வாழ்த்துக்கள்



# மாறுபக்கம்

லாவண்யா பெருமாள்சாமி

**வீ**ட்டுக்கு வந்த பின்னரும் இன்று செயலாளர் கூட்டத்தில் எழுப்பிய ஒரு பிரச்னையைப் பற்றிய சிந்தனையில்தான் என் மனம் உழன்று கொண்டிருந்தது. இருபது வீடுகள் அடங்கிய எங்கள் அடுக்குமாடிக் குடியிருப்பின் செயலாளர் நான்தான்.

அதனால் இந்தப் பிரச்னையை நான்தான் பேசிக் கையாள வேண்டும் என மற்ற உறுப்பினர்கள் ஒரு மனதாக முடிவெடுத்து விட்டனர். அதனால் தப்பிக்க முடியாது. அதை எப்படிச் செயல்படுத்தப் போகிறேன் என்று மலைப்பாக இருந்தது.

என் தியான நிலையைப் பார்த்த என் மனைவி, “எந்த கோட்டையைப் பிடிக்க இந்த பலமான யோசனை?” என்று என்னருகில் வந்து அமர்ந்தாள் செல்வி.

“கோட்டையைக் கூட எளிதாகப் பிடிச்சிடலாம் போல இருக்கு” என்று அவளைப் பார்த்தேன்.“நீங்ககோட்டையைப் பிடிச்சுட்டாலும்..” என நொடித்துக் கொண்டு, “”என்ன விஷயம்?” என்று மீண்டும் கேட்டாள். கூட்டத்தில் விவாதித்ததைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தேன்.




“நம்ம பக்கத்து வீட்டுக்குப் புதுசா வந்திருக்காரே ரகுநந்தன்.. அவர் மனைவியோட செயல் மத்தவங்களுக்குப் பிடிக்கலைங்கிறதைப் பத்தி அவர்கிட்ட நான் பேசணுமாம்”

“அட.. நான் கூட உங்ககிட்ட சொல்லணும்னு இருந்தேன். இங்க இருக்கறவங்களும் அப்படித்தான் நினைக்கறாங்களா?” என செல்வி சொன்னதை நான் நம்பவில்லை.

இங்கே வளாகத்தில் குடியிருக்கும் பெண்களில் பலர் என் மனைவி உள்பட, அடுத்தவரைப் பற்றிப் புறணி பேசுவது எனக்குத் தெரியும். இது எனக்குப் பிடிக்காது என்பது செல்விக்குத் தெரியும் என்பதால் என் காதுகளுக்கு எந்த விஷயத்தையும் எடுத்துக்கொண்டு வரமாட்டாள்.

“புதுசா வந்திருக்காங்க அப்படிங்கற அக்கறையில அந்த வீட்டுகாரம்மாகிட்டப் போய் பேசப் போனா, அவங்களுக்கு என்னுடன் பேச நேரமில்லையாம் ஆனா, சனிக்கிழமையானா, நல்லா மினுக்கிகிட்டு தனியா வெளில போயிட்டு நேரம் தாழ்த்தி வர்றதும், பளபளன்னு உடுத்திக்கிட்டு அவங்க வீட்டுக்கு நாலஞ்சு பொண்ணுங்க வர்றதும் ஒண்ணும் சொல்லிக்க முடியலை” எனக் கிடைத்த



வாய்ப்பை விடாமல் பிடித்துக்கொண்டு பேச ஆரம்பித்தாள்.

ஊர்க் கதையையும், வம்பு வளர்ப்பதையும் பற்றி செல்வி பேசி இருப்பாள் என்று எனக்குத் தெரியும். அதனால் அந்தப் பெண் அதைத் தடுக்க நினைத்து என் மனைவியிடம் அவ்வாறு சொல்லி இருக்கலாம். அந்தத் தைரியத்தைப் பார்த்துத்தான் இங்கிருப்பவர்கள் குமுறுகிறார்களோ? அதை இவளிடம் சொல்லி வாங்கிக் கட்டிக்கொள்ள விருப்பமில்லாததால், மனைவி சொன்ன கடைசி விஷயத்திற்கு மட்டும் பதில் சொன்னேன்.

“ஏம்மா, அவங்க வீட்டுக்கு வேண்டியவங்க வருவாங்க போவாங்க அதுல நமக்கு எதுவும் தொந்தரவு இல்லையே” எனக் கூட்டத்தில் எடுபடாத அதே பேச்சை என் மனைவியிடமும் சொன்னேன். கூட்டத்திலேயே எடுபடவில்லை.. மனைவியிடம் மட்டும் எளிதாக வெற்றி பெறுமா என்ன?

நானும் அந்தப் பெண்ணைப் பார்த்திருக்கிறேன். மிகவும் அழகாக, செதுக்கி வைத்த சிற்பம்போல் இருப்பாள். இரு பெண்களுக்கு அம்மா என்று அவளைப் பற்றித் தெரியாதவர்களிடம்

சொன்னால் யாரும் நம்ப மாட்டார்கள். அதைப் பார்த்துத்தான் எங்கள் குடியிருப்புப் பெண்கள் பொறாமை கொண்டார்களோ?

அத்தோடு, என் மனைவி சொல்வதைப்போல் எல்லாம் பக்கத்து வீட்டுப் பெண் கவிதா மினுக்கிகிட்டு உடையணிவது இல்லை.



எப்பொழுதும்போல் அல்லாமல் சனிக்கிழமைகளில் மட்டும் சற்று நேர்த்தியாக, இளவயதுப் பெண்கள் உடுத்துவதைப்போல் உடுத்தி, சிறிதளவு ஒப்பனையுடன் வெளியில் செல்வாள்.




“நேரடியாச் செஞ்சாதான் கெடுதலா? இத்தனை வயசாகியும் இப்படி நாகரிகமில்லாமல் உடுத்திட்டு, தலையை விரிச்சுப் போட்டுட்டு, கண்ட நேரத்துக்கு வீட்டுக்கு வந்தா அதைப் பார்த்து நம்ம குழந்தைகளுக்கும் அந்த எண்ணம் வராதா?” என்றாள்.

“எத்தனை வயசாகி?' என வாய் வரை வந்த கேள்வியை விழுங்கிக்கொண்டேன். என் மனைவி சொன்னது எனக்கு ஏற்புடையதாக இல்லை. இதையேதான் கூட்டத்திலும் சொன்னார்கள். எத்தனை வயதானால் என்ன? உடை அணிவதும், சிகை அலங்காரமும் அவர்கள் விருப்பம். சற்று வயதாகிவிட்டது என்பதால் விட்டுவிட வேண்டும் என்று எண்ணுவது எந்த விதத்தில் நியாயம்?

அத்தோடு நேரம் என்பது அவரவர் வசதியைப் பொறுத்தது. அதில் தலையிடுவதற்கு நமக்கு என்ன உரிமை இருக்கிறது? இதையெல்லாம் சொன்னால் என்னை விரோதியாகப் பார்ப்பார்கள் என்று சிந்தனை ஓடிக்கொண்டிருக்கையில், “”அவங்க வீட்ல இருந்து பாட்டுச் சத்தமும், பேச்சுச் சத்தமும் அதிகமாகக் கேட்கறதுனால பிள்ளைகளோட படிப்புக் கெடுது எனச் சொல்லி இதை முடிவுக்குக் கொண்டு வாங்க” என எப்படிப் பேசுவது என எனக்குச் சொல்லித் தந்தாள் செல்வி.

என் மனைவி சொன்ன காரணத்தைக் கேட்டு எனக்கே சிரிப்பு வந்தது கேட்கிறவங்களுக்கு வராதா? என் மகன் இரண்டாம் வகுப்பும், மகள் யூ.கே.ஜியும் படித்துக் கொண்டிருக்கிறார்கள். இதில் அவர்கள் படிப்புக் கெடுகிறதாம். அமைதியாகக் கேட்டுக் கொண்டேன்.

ஆனாலும் அவள் விடவில்லை. “”அவங்க பொண்ணுங்கதான் படிக்கலைன்னா நம்ம பசங்க அப்படியா?” எனத் தொடர்ந்தாள்.

ரகுநந்தனின் இரட்டைப் பெண்களும் ஒன்பதாம் வகுப்பு படிக்கிறார்கள். அது எப்படி அவர்கள் படிப்பில் அக்கறை இல்லாமல் இருப்பார்கள்? இவள் என்ன பள்ளியில் போய்ப் பார்த்தாளா? இதுதான் ஒரு விஷயத்திற்கு கண், காது, மூக்கு, வாய் வைப்பதா?

ரகுநந்தனைப் பலமுறை பார்த்திருக்கிறேன். பார்க்கும்பொழுது பொதுப்படையாக நலம் விசாரித்துப் பேசிக் கொண்டதோடு சரி. ஆனால் இனியும் அப்படி விடமுடியாதே? எப்படியும் பேசித்தானே ஆகவேண்டும். அதனால், “”சீக்கிரம்



தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
தீபாவளி
வாழ்த்துக்கள்
தீபாவளி
ஆண்டுதோறும் வரும்
ஒளிவெள்ளத்தில்...
துன்பம் தூரபோகட்டும்,
சூழ்ச்சி சூறாவளியாய் விலகட்டும்,
தீமை தீண்டாமல் போகட்டும்...
நன்மைகள் பல பெற....
கொண்டாடுவோம் தீபாவளியை

பேசுகிறேன்” என்று மனைவியிடம் சொன்னேன்.

ஒருத்தரின் அந்தரங்கத்தில் நுழைவது என்பது அநாகரிகம் என்ற கொள்கையுடையவன் நான். ஆனால் செயலாளர் என்ற காரணத்தினால் எனக்கு வந்த சோதனையைப் பார்த்தீர்களா? செவ்வாய் கிரகத்திற்குக் கூட சென்றுவிடலாம். ஆனால் பக்கத்து வீட்டில் இருப்பவரிடம் பேச்சு வார்த்தை நடத்த எப்படிப் போவது? விர்ரென்று நானும் போனேன் மின்தூக்கியில்.

அந்த வாரக் கடைசியில் ரகுநந்தனை மின்தூக்கியில் எதேச்சையாகச் சந்திப்பதைப்போல் சந்தித்து, “”பக்கத்து வீட்ல இருக்கோம் ஆனா, பாருங்க பார்க்கறதே அபூர்வமா இருக்கு” என்றேன்.

“ம்ம்ம்.” என அவன் சொன்னாலும், “நேத்துத்தானே பார்த்தோம்’ என்று கண்களால் கேட்டான்.

“நீங்க வந்து எவ்வளவு நாளாச்சு ஆனா உங்களைப் பத்தி எதுவும் தெரியலை பாருங்க” எனச் சொல்லி, “ஹி..ஹி.ஹி..’ என்று அசடு வழிந்தேன். கல்லூரியில் கூட இப்படி வழிந்ததில்லை!

பின்னர் இருவரும் படிப்பு, வேலை எனப் பொதுவான விஷயங்களைப் பகிர்ந்தவாறே மின்தூக்கியில் இருந்து இறங்கி வண்டி இருக்கும் இடம் வரையில் நடந்தோம்.

“நாளைக்கு நீங்க ஃப்ரீயா இருந்தா வாங்க அப்படியே போய் காபி சாப்பிட்டு வரலாம் ரகு” என எங்களுக்குள் நெருக்கம் வந்துவிட்டதைக் காட்டுவதற்கு அவர் பெயரையும் சுருக்கி அழைத்து, வெற்றிகரமாக நான் பேசுவதற்கு ஓர் நேரத்தையும், இடத்தையும் குறித்துக் கொண்டேன்.

ரகுநந்தனிடம் எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது, என்ன பேசுவது, அவர் மனம் புண்படாமல் எப்படி விஷயத்தைச் சொல்வது என்று பலமுறை ஒத்திகை பார்த்துவிட்டேன். பரீட்சைக்கு, ஏன் நேர்முகத் தேர்வுக்குக் கூட, நான் இந்தளவுக்கு என்னைத் தயார் செய்ததில்லை.

ஆனால் பரீட்சையில் வினாத்தாளைப் பார்த்ததும், படித்தது எதுவும் எப்படி நினைவுக்கு வருவதில்லையோ அதேபோன்றுதான் என் நிலைமையும் ஆனது. ரகுநந்தனைப் பார்த்ததும் ஒத்திகை செய்ததெல்லாம் மறந்துபோக, என் மனைவி தந்த காபி சகிக்கவில்லை என்பதைப்போல் வாங்கிய காபியை அவ்வளவு அழுத்தமாக உறிஞ்சி ருசித்துக் கொண்டிருந்தேன்.




சற்று நேரம் பொதுப்படையாகப் பேசிய ரகுநந்தன், “”விக்கி, என்கிட்டே என்ன சொல்லணும்ன்னு நினைக்கறீங்க?” எனக் கேட்டான். விக்னேஷ் என்ற எனது பெயரைச் சுருக்கி, நமக்குள் நெருக்கம் இருக்கிறது என்று காட்டுவது அவன் முறையாகிப் போனது.

“வந்து தப்பா நினைச்சுக்காதீங்க உங்க மனைவியோட செயல் அவ்வளவு திருப்திகரமானதாக இல்லை என அக்கம்பக்கத்தில நினைக்கறாங்க” என ஒருவாறாகச் சொல்லிவிட்டேன்.

“எதைச் சொல்லறீங்க?” என ரகு கேட்கவும், “”சனிக்கிழமையானா தனியா வெளில போயிட்டு நேரம் கழிச்சு வர்றதும் உங்க வீட்ல மற்ற பெண்கள் கூடுவதும்” என நிறுத்தினேன்.

இதைக் கேட்டதும் அவனுக்கு என் மேல் கோபம் வரும் என்று பார்த்தால் புன்னகைத்துக் கொண்டே, “”உங்களுக்குக் கல்யாணமாகி எத்தனை நாளாச்சு விக்கி?” என்றான் சாதாரணமாக.

இதற்கும் நான் சொன்னதற்கும் என்ன சம்மந்தம் எனக் குழம்பியவாறே, “ஏழு வருஷம்” என்றேன்.

“உங்க மனைவிக்கு என்ன வயசு?” என ரகு கேட்கவும் எனக்கு சுறுசுறுவென்று கோபம் வந்தது. அவன் மனைவியைப் பற்றிச் சொன்னதால் வேண்டுமென்றே என் செல்வியை வம்புக்கு இழுக்கிறானா? என்ற எரிச்சலில் பதில் சொல்லாமல் அவனை முறைத்தேன்.


“தப்பான எண்ணத்துல கேட்கலை” என அதே புன்னகையுடன், தன்மையாகச் சொன்னதும், “”முப்பத்திரண்டு” என்றேன். அவன் மனைவியைப் பற்றிப் பேசும்பொழுது அபத்தமாகப் படாதது என் மனைவியைப் பற்றிக் கேட்டதும் அபத்தமாக ஏன் தோன்றுகிறது?

“கவிதாவுக்கும் அதே வயசுதான்” என்றதும் திகைத்தேன். பார்க்கச் சிறு பெண்போல் இருந்தாலும் இரு பெண்களின் தாய் என்பதால் குறைந்தது நாற்பதாவது இருக்கும் என நினைத்திருந்தேன்.

“உங்க மனைவிக்குக் கல்யாணம் ஆனப்போ அவங்களுக்கு எத்தனை வயசு?” எனக் கேட்டான்.

அவன் பேச்சில் எனக்கு சுவாரசியம் பிறக்க, அவன் கேள்வி இப்பொழுது எனக்குத் தப்பாகத் தெரியவில்லை. “”இருபத்தஞ்சு” என்றேன்.

“கவிதாவை நான் கல்யாணம் பண்ணும்போது அவளுக்கு வயசு பதினெட்டு.பனிரெண்டாவதுதான் முடிச்சிருந்தா அப்பா குடிச்சிட்டு தன்னையே அழிச்சுக்கிட்டார் வேலைக்குப்போன அம்மாவும் விபத்துல போயிட்டாங்க. அதனால அவசரமா



தூரத்து சொந்தமான எனக்குக் கல்யாணம் செஞ்சு வச்சுட்டாங்க. அப்போ கவிதா தேர்வு செய்து முடிவு பண்ணற நிலைமைல இல்லை அவளை அப்படியேவிட எனக்கு மனமில்லைஞ்” என்றான்.

“அப்புறம் எப்படி நல்ல வேலைக்குப் போறாங்க?” என என் சந்தேகத்தைக் கேட்டேன்.

“கல்யாணம் ஆனதும் உடனே எங்களுக்குக் குழந்தைகளும் பிறந்துட்டாங்க அப்புறம்தான் கவிதா பட்டப்படிப்பை தபால் வழியா முடிச்சா அதுவும் ரெண்டு பேரும் சம்பாதிச்சா பொருளாதார விஷயத்துல கஷ்டப்படாம இருக்கலாம் என்ற சுயநலத்தினால் அவளைப் படிக்கச் சொன்னேன்” என்றான் ரகு.

அந்தப் பெண்ணின் தன்னம்பிக்கையை நினைத்து ஆச்சரியப்பட்டேன். “என் பள்ளி மற்றும் கல்லூரிக் காலத்து கலாட்டாக்களைப் பற்றி கேட்க என் பொண்ணுங்க ரெண்டு பேருக்கும் ரொம்ப பிடிக்கும். எனக்கும்




சொல்லறதுக்கு ஆயிரம் விஷயம் இருந்தது. ஆனா கவிதாவுக்குச் சொல்ல ஒரு விஷயமும் இருக்காது. ஏன்னா, பள்ளிப் பருவத்துல, குடும்ப வறுமை காரணமாக வேறு எதிலும் அவள் கவனம் போகவில்லை. அப்புறம் நல்லாப் படிச்சிருந்தும் கல்லூரிப் பருவமே இல்லாமல் போனது அப்படி இருக்கறப்போ நல்ல அனுபவத்திற்குக் கண்டிப்பா பஞ்சம் இருக்குமே”

“உண்மைதான் ரகு அந்த இளமைப் பருவம் ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையில் எத்தனை முக்கியம்! எத்தனை விதமான அனுபவங்கள் எத்தனை நண்பர்கள் எத்தனை நிகழ்வுகள்”.

“ம்ம்ம்ம் கல்லூரிப் படிப்பில் இருந்து வேலை, அப்புறம் கல்யாணம் என்று அடுத்த கட்டத்திற்கு

போகும்வரை கொஞ்சம் சுதந்திரம், கொஞ்சம் கவலை, கொஞ்சம் கலகலப்பு என்று வாழ்க்கையை சிறகை விரித்து அனுபவிக்கும் பருவம். அது என் கவிதாவுக்கு இல்லாமலேயே போயிடுச்சு”

பாவம் அந்தப் பெண் என்று நினைத்துக் கொண்டேன்.

“ஆனா பாருங்க, கவிதா நிறைய வாசிப்பா ஓவியம் வரைவாஞ் அவளுக்கு வெட்டியா அரட்டை அடிக்கறது பிடிக்காது. அவள் என் பெண்கள்கிட்ட அதைப் பற்றி உற்சாகமா பேசறதைக் கேட்டு அதிசயப்பட்டுப் போனேன்.

எனக்கு இலக்கியம் பத்தியும், ஓவியக்கலைப் பத்தியும் எதுவும் தெரியாது. என் பெண்களுக்கு ஓரளவுக்குத்தான் நேரம் கிடைக்கும். ஆனால் இவளைப்போல் ஒத்த சிந்தனையுள்ளவர்களிடம் இவள் பேசினால் எப்படி உணர்வாள் என்று யோசித்தேன்.

வார நாட்களில் வேலையில் மெனக்கெடுவா. வாரக்கடைசியில குடும்பத்திற்கு உழைப்பா. அவளுக்கென்று ஓர் அந்தரங்கம், தனிமை என எதுவும் இல்லாமேலேயே போயிடுச்சு. அதனால்தான் அவள் தவறவிட்ட அந்தக் காலத்தை அவள் வாழணும் அப்படின்னு முடிவு பண்ணி நானும் என் பெண்களும் அவளுக்கு இந்த ஐடியாவைச் சொன்னோம்” என்றான் ரகு.

வேலையில் இருந்து தாமதமாக வந்தாலே “எங்க போய் சுத்திட்டு வர்ற?’ என்று கேட்கும் கணவன்மார்களுக்கு மத்தியில் இப்படியும் ஒருவனா? என்று அவன் மேல் மதிப்பும், மரியாதையும் கூடியது.

“அதனால்தான் அவளுக்குப் பிடிச்ச மாதிரி உடையணிந்து, வாரம் ஒரு தோழியோட வீட்ல சந்திப்பாங்க. இலக்கியம் பேசுவாங்க, விவாதிப்பாங்கஞ் ஆக்கபூர்வமான சிந்தனைகளைப் பகிர்ந்துகிட்டு மனம் விட்டுச் சிரிப்பாங்க”

தடையேதும் இல்லாததால் தன்னம்பிக்கையோடு வலம் வர்றா. அவளுக்கென்று தனித்தன்மை இருக்கறதுனால எப்போதும் உற்சாகத்தோடு இருக்கறா. அரட்டையிலேயே நேரத்தை விரயம் செய்யாம பார்வையற்றவர்களுக்காக பரீட்சை எழுத உதவுவாங்க சொல்லுங்க, இதில் கவிதா மேல் என்ன தப்பைக் கண்டுபிடிச்சாங்க?” என்று கேட்டு என் முகம் பார்த்தான்.




அதானே? என்னால் என்ன சொல்ல முடியும்? இதில் எவ்விதத் தப்பும் இருப்பதாக எனக்குப் படவேயில்லை. கூடவே எங்கள் வளாகத்தில் இருக்கும் பெண்களில் சிலர் வேலை முடித்து, கல்லூரி முடித்து தாமதமாக வருவதும் உண்டு. அதெல்லாம் தப்பாகத் தோன்றாத மனிதர்களுக்கு கவிதா செய்வது மட்டும் எப்படி தப்பு என்று தோன்றுகிறது?

அவள் வயதினாலா? அல்லது வயது பெண்களின் தாய் என்பதாலா? அவள் அழகினாலா அல்லது அவளின் தன்னம்பிக்கையினாலா? என் மனைவிகூட அப்படித்தானே தவறாகப் பேசினாள்.

“ரகு, நாணயத்திற்கு எப்போதும் ரெண்டு பக்கம் இருக்கும் என்பதை இன்று முழுமையாகப் புரிந்துகொண்டேன். எந்த ஒரு விஷயத்திற்கும் மறுபக்கம் என்று ஒன்று இருக்கும். உங்கள் மேல் எனக்கு இப்போ நிறைய மரியாதை வந்துடுச்சு. என்னை மன்னிச்சுடுங்க” என்று முதல்முறையாக அவனிடம் இயல்பாகப் பேசினேன். அவனும் அவன் முகஇறுக்கத்தைத் தளர்த்தினான்.

வீட்டுக்குச் சென்று செல்வியிடம் விஷயத்தைச் சொன்னதும், “உடனே நம்பிட்டீங்க உங்களுக்கு இளகின மனசுங்க” என நான் சொன்னதை ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்ளவில்லை.

எனக்கு கோபம் எட்டிப் பார்க்க, “”வேண்டாம் செல்வி.. இதுக்கு மேலேயும் பேசி என்னைக் கோபக்காரனாக்கி விடாதே” என்று அவளிடம் சீறினேன்.

“எனக்கு ஒண்ணும் இல்லை இங்க இருக்கறவங்களுக்கு என்ன பதில் சொல்லப் போறீங்க?”

“அது என் பிரச்னை சொல்லிப் புரிய வைக்க முயற்சிப்பேன்.. முடியலையா, சூரியனைப் பார்த்து நாய் குரைச்சா யாருக்கு நட்டம்? என விட்டுவிடுவேன்” என்றேன். அதன் பிறகு தமிழ்செல்வி பேசவில்லை.

பின்னே இதற்கு மேல் அவள் என்னிடம் அதைப்பற்றி விவாதித்தால் அவள் நாயாகிப் போவாளே என்னிடம் பேசவில்லை என்றாலும் இங்கிருக்கும் மற்ற பெண்களிடம் இதைப்பற்றி வாய் கிழியப் பேசப் போகிறாள் என்பது மட்டும் உறுதி.

ஒவ்வொரு மனிதனின் செயலுக்கும் மறுபக்கம் என்று ஒன்று இருக்கிறது என்பதை எப்பொழுதுதான் இவர்கள் உணர்வார்களோ?

கவிதை

# அவர்கள் செய்தது இதுவே

அவர்கள் என் அத்தையின் வீட்டைத்
தீ மூட்டினார்கள்
தொலைக்காட்சியில் வரும் பெண்கள்
செய்யும் வகையில்
ஒரு ஐந்து பவுண்ட் தாள் போல
குறுக்கே மடிந்து நான் அழுதேன்.
என்னை நேசிப்பதை வழக்கமாயுள்ள
பையனை அழைத்தேன்
என் குரலைச் 'சரி செய்ய' முயன்றேன்

நான் ஹலோ என்றேன்
அவன் சொன்னான்,
என்ன பிரச்சனை, என்ன நடந்தது?
நான் பிரார்த்தித்துக் கொண்டே
இருக்கிறேன்
என் பிரார்த்தனைகள்
இப்படித்தான் தோற்றமளிக்கின்றன
பிரிய கடவுளே!
நான் இரு நாடுகளிலிருந்து வருகிறேன்
ஒன்று தாகத்தோடு இருக்கிறது
இன்னொன்று தீ பற்றி எரிகிறது
இரண்டுக்கும் நீர் தேவை.

பின்னர் அந்த இரவில்
ஒரு நிலப் பட ஏடொன்றை
நான் என் மடியிலிருத்தி
முழு உலகையும் என் விரல்களால்
வருடியபடி எங்கே வலிக்கிறது
எனக் கிசுகிசுத்தேன்.

அது பதிலளித்தது
எல்லா இடங்களிலும்...
எல்லா இடங்களிலும்...
எல்லா இடங்களிலும்...




**வார்சன் ஷையர்**


**தமிழாக்கம்: மிருணா**




*காலம் தந்த கருணைப் பெருவள்ளல்*

பொருளை வாரி வழங்கிய புகழ்மிகு வள்ளல்கள் தோன்றிய தமிழ் மண்ணில், அருளை உலகிற்கு அருளிய கருணைப் பெருவள்ளலாய் அவதரித்தவர், திருவருட்பிரகாச வள்ளலார்

கொடைப் பலனாய்ப் புகழின் அளவு வளர்ந்தாலும், பெறுவோரைச் சேரும் பொருளின் அளவுக்குக்கேற்ப, தருவோரின் பொருள் அளவு குறையவே செய்யும்; ஆனால் அருளோ, கொடுக்கக் கொடுக்க வளர்வது; பெற்றிடப் பெற்றிடப் பெருகுவது.



அருளின் தாய் அன்பு. அது இரக்கத்தின் இருப்பிடம். தன்னுயிர் போல, மன்னுயிர் அனைத்தையும் தாங்கிப் பேணும் தாய்மையின் புலப்பாடு.

அந்த வகையில், துன்மார்க்கம் போக்கி, நன்மார்க்கமாகும் சன்மார்க்கம் தந்த வள்ளற்பெருமான், தன்னிச்சையால் வந்து இத் தரணியில் பிறந்தவர் அல்லர் பெண் இச்சையும், மண் இச்சையும், பொன் இச்சையும் மிகுத்து மனித குலம் தடுமாறித் தடம் மாறி அல்லலுறும் காலத்தில், அந்த அவலம் போக்கிட, இம் மண்ணுலகிற்கு, இறைவனால் வருவிக்க உற்றவர்




ஓதாது உணர்ந்த பெருஞானியாய் வந்த அவருக்கு, 'ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்' எனச் சொல்லிக் கொடுத்த பள்ளிப் பாடத்தில், உடன்பாடில்லை; மாறாக, 'வேண்டாம் என விலக்க வேண்டாம்; வேண்டுவதே வேண்டும்' எனப் பாடிக் கொடுத்த அருட்பாடல், 'ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும்' எனத் தொடங்குகிறது. ஓர்ந்து கவனித்தால், அதன் உள்ளேயும், 'வேண்டாமை'யை, வேண்டும் விருப்பமும் இருக்கிறது. அடுத்த அடி, பாருங்கள்: 'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்.'

இப்படி, அடிதோறும் முதலடியில், வேண்டுகிற வேண்டுதலும், அடுத்து வரும் அடிதோறும் வேண்டாதென விலக்கும் வேண்டுதலும்




# பெருமை

## கிருங்கை சேதுபதி


தமிழ்ச் சமய ஆன்மிகவுலகில், திருஞானசம்பந்தருக்குத் தேவி பராசக்தி, பால் நினைந்து ஊட்டினாள்; அது, அவர்தம் வாக்கினில் பிறந்த பாக்களில், ஞானமாய்ச் சொரிந்தது. இது ஏழாம் நூற்றாண்டு.

பத்தொன்பதாம் நூற்றாண்டில், பசித்து அயர்ந்து, திண்ணையில் தூங்கிய 'இராமலிங்க' பிள்ளையை எழுப்பி, திருவொற்றியூர் அம்பிகை அமுது ஊட்டினாள். அது அருளாய்ப் பெருகி, உலகத்தார் பசிபோக்கும்




நிறைந்த ஞானப் பெரு வேட்கை, அவர்தம் பால பருவத்திலேயே புலப்படக் காணலாம். ஓதி உணர்ந்து உலகறிய உணர்த்தி, அவர் கூறிய பேரறம், 'உயிர் இரக்கம்' என்னும் ஜீவகாருண்யம். வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய நிலையில் நின்றுவிடாது, அவ் வாட்டம் போக்குவதில், நாட்டம் கொண்டு இயங்குவது. 'ஆருயிர்க்கெல்லாம் அன்பு செய வேண்டி' த் தூண்டுவது; துணைநிற்பது. அதனால்தான், "வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்" என்று பாடினார் அத்துடனா நிறுத்தினார்?

“பசியினால் இளைத்தே வீடுதோறு இரந்தும் பசிஅறாது அயர்ந்த வெற்றரைக் கண்டுஉளம் பதைத்தேன்” என்று துடிக்கிறார் இந்தத் துடிப்புத்தான் பசிப்பிணி போக்கும் மருத்துவராய் அவரை ஆக்கியது.



உன்னத அறத்தை இன்னமும் வளர்க்கிறது.

அது அறங்களில் எல்லாம் தலையாய பேரறம். பசியின் கொடுமையை இன்று உணர்ந்தோர் குறைவு. பசிக்கு மருந்து உண்கிற அளவிற்குக் காலம் மாறியிருக்கிறது. ஆனால், அப்பெருமான் அவதரித்த காலத்தில் அது எத்தகு பிணியாய் மனித குலத்தைத் துயருறுத்தி மரணத்தில் சேர்த்திருக்கிறது என்பது பலருக்குத் தெரியாது. உணவு தேடி அலையும் ஒரு வேட்கை என்ற நிலையில் மட்டுமே பலர் அதனை நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது எத்துணை பெரிய வேதனை என்பதைச் சோகச் சித்திரம் வடித்துத் துடித்துத் துயர்ப்படுகிறது அக்கருணைமலி பேருள்ளம்.



'ஜீவர்களுக்கு பசி அதிகரித்த காலத்தில் ஜீவ அறிவு விளக்கமில்லாமல் மயங்குகின்றது. அது மயங்கவே அறிவுக்கறிவாகிய கடவுள் விளக்கம்

மறைபடுகின்றது. அது மறையவே புருடதத்துவம் சோர்ந்துவிடுகிறது. அது சோரவே பிரகிருதி தத்துவம் மழுங்குகின்றது. அது மழுங்கவே குணங்களெல்லாம் பேதப்படுகின்றன. மனம் தடுமாறிச் சிதறுகின்றது. புத்தி

கெடுகின்றது. சித்தம் கலங்குகின்றது. அகங்காரம் அழிகின்றது. பிராணன் சுழல்கின்றது. பூதங்களெல்லாம் புழுங்குகின்றன. வாதபித்த சிலேட்டுமங்கள் நிலை மாறுகின்றது. கண் பஞ் சடைந்து குழிந்து போகின்றது. காது

கும்மென்று செவிபடுகின்றது. நா உலர்ந்து வரளுகின்றது. நாசி குழைந்து அழல்கின்றது. தோல் மெலிந்து ஸ்மரணை கெடுகின்றது. கை கால் சோர்ந்து துவளுகின்றன. மல சல வழி வெதும்புகின்றது, மேனி கருக்கின்றது.ரோமம் வெறிக்கின்றது. நரம்புகள் குழைந்து நைகின்றன. நாடிகள் கட்டுவிட்டுக் குழைகின்றன. எலும்புகள் கருகிப் பூட்டுகள் நெக்குவிடுகின்றன. இருதயம் வேகின்றது. மூளை சுருங்குகின்றது. சுக்கிலம் மாமிசம் குழைந்து தன்மை கெடுகின்றது — வயிறு பகீரென்று எரிகின்றது .தாப கோபங்கள் மேன்மேலும் உண்டாகின்றன. உயிரிழந்து விடுவதற்கு மிகவும் சமீபத்த அடையாளங்களும்

அநுபவங்களும் மேன்மேலும் தோன்றுகின்றன. பசியினால் இவ்வளவு அவத்தைகளுந் தோன்றுவது ஜீவர்களுக்கெல்லாம் பொதுவாகவே இருக்கின்றது. இவ்வளவு அவத்தைகளும் — ஆகாரம் கிடைத்தபோது

உண்டு — பசிநீங்க நீங்குகின்றன. அப்பொழுது தத்துவங்களெல்லாம் தழைத்து —உள்ளம் குளிர்ந்து, அறிவு விளங்கி, அகத்திலும் முகத்திலும் ஜீவகளையும் கடவுள் களையும் துளம்பி ஒப்பில்லாத திருப்தி இன்பம் உண்டாகின்றன. இப்படிப்பட்ட இன்பத்தை உண்டு பண்ணுகின்ற புண்ணியத்துக்கு

எந்தப் புண்ணியத்தை இணையென்று சொல்லலாம்?"

என்றுகேட்கும்போதுஏற்படும்சிலிர்ப்பு,பசிப்பிணி போக்கிப் பார்க்கும் புண்ணியவான்களுக்கே வாய்க்கும் என்பது சத்தியமான உண்மை.

"எல்லாத் தெய்வங்களுக்கும் மேலாகிய கடவுள் அம்சமென்றே சத்தியமாக அறியவேண்டும். இதனால், ரகவேதனை, சனனவேதனை, மரணவேதனை என்கின்ற மூன்று வேதனைகளுள் கூடி முடிந்த வேதனையே பசிவேதனை என்றும், அகம், புறம், நடு, கீழ், மேல், பக்கம் என்கின்ற எவ்விடத்தும் நிறைந்து எக்காலத்தும் வேறுபடாத மோட்ச இன்பமே ஆகாரத்தினால் உண்டாகும்





திருப்தி இன்பம் என்றும் அறியப்படும்."

இன்பம் என்பது ஈத்துவக்கும் பேரின்பம் என்று பொதுவாய்ச் சொல்வதை விட, பசிப்பிணி நீக்கும் நல்லின்பம் என்று உணர்த்திக் காட்டியவர் அவர் ஏற்றி வைத்த அடுப்பின் நெருப்பு அணையவில்லை என்பதற்குச் சான்றினை வடலூரில் மட்டும் காண்பது ஒரு சடங்கு. வள்ளலார் பெருநெறியில் நின்று செயல்படுபவர்களின் இல்லங்களில் எல்லாம் அது இருக்கிறது என்பதை விடவும், இந்த நல்லறத்தினைச் செயல்படுத்த வேண்டும் என்று உணர்கிற உள்ளங்களில் எல்லாம் சுடர்கிறது என்று உணர்ந்து கொள்வதே சிறப்பு.

அதனால்தான், அற்புதங்கள் என்று சொல்லும் இயற்கை இறந்த செயல்களைச் செய்வதில் அவர் ஆசை கொள்ளவில்லை. தனக்கு வேண்டியது இது என்று வேண்டுகிற தனி ஆசை அவர்க்கு இல்லை.

'இறக்கவும் ஆசை இல்லை இப்படி நான்
இருக்கவும் ஆசை இன்றி இனி நான்
பிறக்கவும் ஆசை இலை உலகெல்லாம்
பெரியவர் பெரியவர் எனவே
சிறக்கவும் ஆசை இலை விசித்திரங்கள்
செய்யவும் ஆசை ஒன்றில்லை
துறக்கவும் ஆசை இலை துயர் அடைந்து
தூங்கவும் ஆசை ஒன்றிலையே!
என்று பாடும் வள்ளலார்,
சற்சபைக் குரியார் தம்மொடும் கூடித்
தனித்த பேரன்பு மெய் அறிவும்
நற்சபைக் குரிய ஒழுக்கமும் அழியா
நல்ல மெய் வாழ்க்கையும் பெற்றே
சிற்சபை நடமும் பொற்சபை நடமும்
தினந்தொறும் பாடி நின்றாடித்
தெற்சபை உலகத்துயிர்க்கெலாம் இன்பம்
செய்வதென் இச்சையாம் எந்தாய்'




என்று அறிவிக்கிறார் இப்படி, உலகத்து உயிரெலாம் துன்பம் ஒழிந்து இன்ப நல்வாழ்வு பெற்றிட அவர் அருளிய விழைந்ததன் புலப்பாடே, ஆன்மநேய ஒருமைப்பாடு.

வள்ளற்பெருமான், "எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்உயிர்போல் எண்ணி உள்ளே ஒத்துஉரிமை உடையவராய் உவக்கின்றார் யாவர்?" எனக் கேள்வி கேட்டு, "அவர் உளந்தான் சுத்த சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும் இடம்எனநான் தெரிந்தேன்" என்று அறிவிக்கிறார் அதற்கு மேலும், "அந்த வித்தகர்தம் அடிக்கு ஏவல் புரிந்திடஎன் சிந்தைமிக விழைந்தது" என்று சொல்லி முடிக்கிற பாங்கில் நம்மையும் உளப்படுத்தி, ஆட்கொள்கிறார் பணி செயப் பணிக்கிறார் இது ஒருவரில் தொடங்கி, பலரில் நிறைகிறபோது பலனாய், மண்ணுலகம் உயிர்க்கிறது. சன்மார்க்கம் தழைக்கிறது.

இதற்கு, காலம் தந்த கருணாமூர்த்தி, வள்ளலார்

மரணமிலாப் பெருவாழ்வு கொண்ட மகானின் பணி தொடர்வோம்.

# உதிரும் சிறகுகள்

மழை ஓய்ந்த
முன்னிரவில்
சாளரத்தின் வழியே
அறையில் புகுந்து
மின் விளக்கை மொய்த்து
முட்டி மோதி
சிறகுகள் உதிர்த்து விழும்
ஈசல் கூட்டம்

காலையில்
திட்டியபடியே
செத்த உடல்களோடு
சிறகுகள் கூட்டிக்
குப்பையில் எறிந்து —

ஏதோ இருளை
மோகித்து
ஏதோ சாளர வழியே
நுழைந்து சிறகுகள்
உதிர்க்கப் போவோம்
நாம்.

கவிக்கோ அப்துல் ரகுமான்




படைப்பாளிகளுக்கு...
* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!
*இதழில் வெளியாகிற
கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள்
யாவும் படைப்பாளிகளின்
பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!
தொடர்புகளுக்கு
editor@ithamil.com

புதினம்

# சிவகாமியின்



## மூன்றாம் பாகம் : பிக்ஷுவின் காதல்

## பிக்ஷுவின் காதல் 42

புலிகேசியின் உள்ளத்தில் அசூயையென்னும் பாம்பு படமெடுத்து ஆடுவதை அறியாதவராய் நாகநந்தி பிக்ஷு தமது இருதயத்தைத் திறந்து சொல்லத் தொடங்கினார்:

"தம்பி! குழந்தைப் பிராயம் முதற்கொண்டு — எனக்கு அறிவு தெளிந்த நாளிலிருந்து, நான் அஜந்தா மலைக் குகைகளில் வளர்ந்து வந்தேன். அஜந்தா சங்கிராமத்தில் பிக்ஷுக்களும் அவர்களுடைய சிஷ்யர்களும் இருந்தார்கள். என் இருபதாவது பிராயம் வரையில் உயிருள்ள பெண்ணை நான் பார்த்ததில்லை. அதாவது, சதை, இரத்தம், எலும்பு, நகம் ஆகியவற்றால் ஆன மானிடப் பெண்ணைப் பார்த்ததில்லை. ஆனால், ஜீவனுள்ள பெண்களைப் பார்த்திருக்கிறேன். ஒருவனுடைய இருதய அந்தரங்கம் வரைக்கும் சென்று ஊடுருவிப் பார்க்கும் சக்தி வாய்ந்த விசால நயனங்களுடைய பெண்களைப் பார்த்திருக்கிறேன்.மானிடக் குலத்துக்கு எட்டாத தெய்வீக சௌந்தரியம் வாய்ந்த மடமங்கையர்களைப் பார்த்திருக்கிறேன். அழகுக்கு அழகு செய்யும் திவ்விய ஆபரணங்களை அணிந்த அணங்குகளைப் பார்த்திருக்கிறேன். தங்கள் கூந்தலில் மலர் அணிந்ததனால் அம்மலருக்கு அழகைத் தந்த பெண்களைப் பார்த்திருக்கிறேன். சாந்தம் குடிகொண்ட பெண்களையும், கருணை வடிவான பெண்களையும்,மினுக்கி மயக்கும் மோகினி ரூபம் கொண்ட மாயப் பெண்களையும் பார்த்திருக்கிறேன். இவர்களையெல்லாம் அஜந்தா விஹாரங்களில் உள்ள சுவர்களிலே பார்த்தேன். மகா சைத்திரிகர்களான பிக்ஷுக்கள் தீட்டிய அற்புத சித்திர வடிவங்களிலே பார்த்தேன். அந்த சித்திர வடிவங்கள் எல்லாம் என்னைப் பொறுத்தவரையில் உயிர் உள்ள ஸ்திரீ புருஷர்கள்தான். நான் அவர்கள் அருகில் சென்றதும் என்னை அவர்கள் வரவேற்பார்கள்; முகமன் கூறுவார்கள்; க்ஷேமம் விசாரிப்பார்கள். அவர்களுடன் நானும் மனம் விட்டுப் பேசுவேன்; அவர்களுடைய க்ஷேம லாபங்களை விசாரிப்பேன்; வெளி உலகத்து விஷயங்களைப் பற்றியெல்லாம் அவர்களிடம் கேட்பேன். மௌன பாஷையில் அவர்கள் மறுமொழி சொல்வார்கள்.



இப்படி நான் தினந்தோறும் பார்த்துப் பேசிப் பழகிய சித்திர வடிவங்களுக்குள்ளே முக்கியமாக ஒரு பெண்ணின் வடிவம் என் சிந்தையைக் கவர்ந்திருந்தது. அவளுடைய பொன்னிற மேனியின் சோபையை அவள் இடையில் உடுத்தியிருந்த நீல நிறப் பட்டாடையும், மாந்தளிர் நிறத்து உத்தரீயமும் அதிகமாக்கிக் காட்டின. புன்னகை பூத்த அவளுடைய இதழ்களின் செந்நிறமும், அவளுடைய கருங்கூந்தலில் குடியிருந்த செவ்வாம்பல் மலரின் சிவப்பு நிறமும்






ஒன்றையொன்று தூக்கியடித்தன. தாமரை இதழ் போல வடிவம் அமைந்த அவளுடைய கண்களின் கருவிழிகள் என் இருதயத்தை ஊடுருவி நோக்கிய போது என் இருதயத்தில் நான் அதுகாறும் அறிந்திராத வேதனையும் இன்பமும் உண்டாயின. அந்தச் சித்திர உருவம் தீட்டப்பட்டிருந்த விஹாரத்தின் எந்தப் பக்கத்தில், எந்த மூலையில் நின்று பார்த்தாலும், அந்தப் பத்மலோசனியின் கண்கள் என்னையே நோக்குவது போல் இருந்தன. அவ்வளவு அற்புத வேலைத் திறமையுடன் யாரோ ஒரு சைத்திரிகப் பிரம்மா அவ்வுருவத்தைத் தீட்டியிருந்தார். அந்தச் சித்திரத்தை வரைந்து முந்நூறு வருஷங்களுக்கு மேல் ஆகியிருந்த போதிலும் வர்ணங்கள் சிறிதும் மங்காமல் நேற்று எழுதியவை போல் விளங்கின. அந்தச் சித்திரப் பெண்ணின் உருவத்தில் இன்னொரு விசேஷம் இருந்தது; அவள் இடை வளைந்து நின்ற நிலையும், அவளுடைய கரங்களும் கழுத்தும் அமைந்திருந்த தோற்றத்தில் காணப்பட்ட நெளிவும், அவள் ஏதோ ஒரு விசித்திரமான காரியத்தில் ஈடுபட்டிருக்கிறாள் என்பதைப் புலப்படுத்தின. ஆனால், அவள் என்ன செய்து கொண்டிருக்கிறாள் என்பது எனக்குப் புலப்படவில்லை. என் மனத்திற்குள் எவ்வளவோ யோசனை செய்தும் அதை என்னால் அறிய முடியவில்லை.






கடைசியில் சைத்திரிக பிக்ஷு ஒருவரைக் கேட்டேன். அவர் ‘அந்தப் பெண் பரதநாட்டியம் ஆடுகிறாள்’ என்று சொன்னார். பிறகு பரதநாட்டியம் என்றால் என்னவென்று தெரிந்து கொள்ள விரும்பினேன். பரத சாஸ்திரம் என்னும் ஒரு நூல் இருப்பதாகத் தெரிந்து கொண்டு அந்த நூலைச் சம்பாதித்துப் படித்தேன். பரதநாட்டியக் கலையின் பல அம்சங்களையும் நன்கு தெரிந்து கொண்டேன்.

இதற்குப் பிறகு, அந்த ஓவியக் கன்னி என் உள்ளக் காட்சியில் பரத நாட்டியம் ஆடத் தொடங்கினாள். பரதநாட்டியக் கலைக்குரிய பலவிதத் தோற்றங்களிலும் அவள் காட்சியளித்தாள். பற்பல முத்திரைகள், ஹஸ்தங்கள், பலவித அபிநயத் தோற்றங்கள் — என் அகக்

கற்பனையில் தோன்றிக் கொண்டேயிருந்தன. பகலிலும் இரவிலும் சதா சர்வகாலமும் அந்தக் கற்பனைப் பெண் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டிருந்தாள். அப்போது தான் எனக்கு முதன் முதலில் வெளி உலகத்துக்குப் போக வேண்டும், நாடு நகரங்களில் வாழும் ஸ்திரீ புருஷர்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. ஒரு வேளை அந்த மாதிரி உண்மையாகவே ஒரு பெண் எங்கேனும் இருக்கலாமல்லவா என்ற சபலம் ஏற்பட்டது. இந்த ஆசை காரணமாகவே அஜந்தா நதி வழியைப் பிடித்துக் கொண்டு வெளியே வந்து மலையடிவாரத்துக் கானகங்களிலே நான் சுற்ற ஆரம்பித்தேன். அப்போதுதான் தம்பி, ஒருநாள் உன்னைப் பார்த்தேன். பேச்சு மூச்சற்றுக் கிடந்த உன் உடம்பில் பிராணனை ஊட்டினேன். அது முதல் என் மனப்போக்கில் ஒரு மாறுதல் உண்டாயிற்று. சித்திரத்தில் பார்த்துக் கற்பனையில் நான் வளர்த்து வந்த பெண் சிறிது சிறிதாக என் உள்ளத்திலிருந்து மறையலானாள். அவள் இருந்த இடத்தில் நீ வந்து சேர்ந்தாய். நீ என் சொந்த உடன்பிறந்த சகோதரன், என்னுடன் இரத்தத் தொடர்புடையவன், என்பதை அறிந்த பிறகு என் இருதயத்தில் அந்தச் சித்திர நாட்டியக்காரிக்குச் சிறிதும் இடமில்லாமல் போய் விட்டது.

தம்பி! சிறிது காலத்துக்கெல்லாம் நீயும் நானும் அஜந்தா மலைக் குகையை விட்டு வெளியேறினோம். நீ வாதாபிச் சிம்மாசனம் ஏறினாய். நீயும் நானுமாக எத்தனையோ யுத்தங்கள் நடத்தி ஜயித்தோம். எத்தனையோ இராஜ தந்திரங்களையும் இராணுவ தந்திரங்களையும் கையாண்டு வெற்றி பெற்றோம். துங்கபத்திரையிலிருந்து நர்மதை நதி வரையில் சளுக்க சாம்ராஜ்யம் படர்ந்து தழைத்தது. உத்தராபத ஹர்ஷவர்த்தன சக்கரவர்த்தியும் வராகக் கொடியைக் கண்டு அஞ்சலானார்.

இந்த நாட்களில் நான் ஏற்றுக் கொண்டிருந்த பிக்ஷு விரதத்தை நிறைவேற்றுவது எனக்குக் கொஞ்சமும் கஷ்டமாயில்லை. வாதாபி நகரத்திலும், மற்றும் நான் யாத்திரை செய்த பட்டணங்களிலும் கிராமங்களிலும் எத்தனையோ ஸ்திரீகளை நான் பார்த்தேன். அஜந்தா குகைச் சுவர்களில் நான் பார்த்த சித்திரப் பெண் வடிவங்களோடு ஒப்பிடும் போது, இந்த மானிடப் பெண்கள் அழகற்ற அவலட்சண வடிவங்களாகத் தோன்றினார்கள். அந்தச் சித்திரப் பெண்களைப் பார்த்து அவர்களுடைய அழகை வியந்த கண்களினால் இந்தச் சாதாரண மானிட ஸ்திரீகளைப் பார்க்கவே முடியவில்லை. உலகத்திலே மனிதர்கள் என்னத்திற்காக ஸ்திரீகள் மீது மோகம் கொண்டு பைத்தியம்






பிடித்து அலைகிறார்கள் என்று வியந்தேன். தம்பி! ஒருவர் பின் ஒருவராக நீ ஆறு பெண்களை மணந்த போது உன்னுடைய பரிதாப நிலையைக் குறித்து இரங்கினேன்!"

இத்தனை நேரம் மௌனமாயிருந்து கேட்டுக் கொண்டிருந்த புலிகேசி இப்போது குறுக்கிட்டுக் கூறினார்: "ஆம், அண்ணா! அதையெல்லாம் நினைத்தால் ஏன் அந்தப் பைத்தியக்காரத்தனங்களில் இறங்கினோம் என்று எனக்கும் ஆச்சரியமாய்த்தான் இருக்கிறது. என்ன செய்யலாம்? எங்களுக்கெல்லாம் அனுபவித்த பிறகுதான் புத்தி வருகிறது. நீயோ பெண் மோகம் என்பது எவ்வளவு அசட்டுத்தனம் என்பதை முன்னதாகவே கண்டு கொண்டு விட்டாய்!"

புலிகேசிச் சக்கரவர்த்தி இவ்விதம் கூறிய போது அவருடைய தொனியில் சிறிது பரிகாசம் கலந்திருப்பதாகத் தோன்றியது. ஆனால், அறிவுக் கூர்மை மிகப் படைத்த பிக்ஷுவுக்கு அச்சமயம் அது தெரியவில்லை, அவர் மேலும் கூறினார்:

"இல்லை, தம்பி இல்லை! உன்னுடைய புகழ்ச்சிக்கு நான் அருகனல்ல. நீங்கள் எல்லாரும் பட்டு அனுபவித்த பிறகு, உண்மையைக் கண்டுகொண்டீர்கள். ஆனால், நானோ எத்தனையோ காலம் துறவறத்தை அனுஷ்டித்த பிறகு, யௌவனப் பிராயத்தையெல்லாம் இழந்து விட்ட பிறகு, ஒரு பெண்ணின் காதலுக்கு வயமானேன். ஆனால், என்னுடைய காதல் மற்ற உலக மாந்தரின் காதலை ஒத்ததன்று. அதைப் பற்றிச்

சொல்வதற்கு முன்னால் நான் காதல் வயப்பட்ட வரலாற்றைச் சொல்லி விட வேண்டும்.



வடக்கே ஹர்ஷ மகா சக்கரவர்த்தியுடன் நாம் ஓர் உடன்படிக்கைக்கு வந்து நர்மதைக்குத் தெற்கே அவருடைய சைனியங்கள் வருவதில்லையென்று வாக்குறுதி பெற்ற பிறகு, தென்னாட்டுப் படையெடுப்புக்கு முன் ஆயத்தம் செய்வதற்காகச் சென்றேன். தென்னாடெங்கும் பௌத்த மடங்களும் ஜைன மடங்களும் ஏராளமாக இருந்தபடியால் என்னுடைய வேலை மிகவும் சுலபமாயிருந்தது. காஞ்சி இராஜ விஹாரத்திலே கூட நமக்காக வேலை செய்யும் பிக்ஷுக்கள் கிடைத்தார்கள். பிறகுதான், உனக்குச் சைனியத்துடன் கிளம்பும்படி ஓலை அனுப்பினேன். அனுப்பி விட்டு நான் மதுரைக்குப் பிரயாணப்படுவதற்கு முன்னால் என் வாழ்க்கையிலேயே முக்கியமான சம்பவம் நிகழ்ந்துவிட்டது.

தம்பி! சளுக்க சாம்ராஜ்யத்தின் விஸ்தரிப்புக்கான வேலைகளில் நான் பூரணமாய் ஈடுபட்டிருந்த போதிலும், இடையிடையே சிற்ப சித்திரக் கலைகளில் என் மனம் செல்லாமல் தடுக்க முடியவில்லை. காஞ்சியில் சில அற்புதமான சிற்பங்களைப் பார்த்தேன். மாமல்லபுரம் என்று புதிதாகப் பெயர் பெற்ற துறைமுகத்துக்கருகில் சில அதிசயமான சிற்ப வேலைகள் நடைபெறுவதாகக் கேள்விப்பட்டேன். மதுரைக்குப் போகுமுன் அவற்றைப் பார்க்க வேண்டும் என்று சென்றேன். மாமல்லபுரத்துச் சிற்பங்கள் உண்மையில் அதிசயமாகவே இருந்தன. அந்த வேலைகளை நடத்தி வைக்கும் பெரிய சிற்பி ஒருவர் அரண்யத்தின் நடுவில் வீடு கட்டிக் கொண்டு வசிப்பதாகக் கேள்விப்பட்டேன். அவரைப் பார்க்க வேண்டுமென்று விரும்பி அவருடைய சிற்ப வீட்டைத் தேடிக் கொண்டு போனேன்.

அந்த மகா சிற்பியின் வீட்டில் பல அற்புதங்களைக் கண்டேன். முக்கியமாக, ஆயனர் அப்போது செய்வதில் ஈடுபட்டிருந்த நடனச் சிலைகள் என் மனத்தைப் பெரிதும் கவர்ந்தன. அஜந்தாவின் புத்த விஹாரத்தின் சுவரில் நான் பார்த்த நடனப் பெண்ணின் உருவத்தை அவை எனக்கு நினைவூட்டின. அந்த நடனச் சிலைகளைப் பார்த்து வியந்து கொண்டிருந்த போது ஒரு மகா அற்புதம் நிகழ்ந்தது. வீட்டின் பின்கட்டிலிருந்து ஒரு பெண் உருவம் நாங்கள் இருந்த சிற்ப மண்டபத்துக்கு வந்தது. ஊனும் உடலும் உயிரும் உள்ள உருவந்தான். ஆனால், அஜந்தா சுவரில் நான் பார்த்த சித்திரத்துக்கும் இந்த உருவத்துக்கும் அணுவளவும் வேற்றுமை இல்லை. அதே பூரண சந்திரனையொத்த முகம்; பொன்னிற மேனி; அதே வர்ணமுள்ள உடைகள்; நெஞ்சை ஊடுருவிப் பார்க்கும் நீண்ட நயனங்கள்; கூந்தலை எடுத்துக் கட்டியிருந்த விதமும் அப்படியே. சற்று நேரம் நான் காண்பது உண்மையான தோற்றமா, அல்லது சித்த பிரமையா என்று பிரமித்திருந்தேன். அந்த உருவம் அதன் செவ்விதழ்களைச் சிறிது விரித்து, ‘அப்பா! இந்தச் சுவாமிகள் யார்?’ என்று கேட்ட பிறகு தான், இதெல்லாம் உண்மை என்று உணர்ந்தேன். ஆயனச் சிற்பி என்னைப் பார்த்து, ‘இவள் என்னுடைய மகள் சிவகாமி. இவளுடைய நடனத் தோற்றங்களைத்தான் நான் சிலை வடிவங்களாக அமைக்கிறேன்’ என்றார். சற்று நேரத்துக்கெல்லாம் சிவகாமி நடனம் ஆடினாள். தம்பி! அந்த நேரம் முதல் இந்த உலகமே எனக்குப் புதிய உலகமாக மாறி விட்டது. இவ்வுலகில் யுத்தத்தையும் இராஜ தந்திரத்தையும், இராஜ்ய பாரத்தையும் விட முக்கியமான காரியங்களும் இருக்கின்றன என்பதை உணர்ந்தேன். அஜந்தா அடிவாரத்தில் உன்னைச் சந்திப்பதற்கு முன்னால் சில காலம் அங்கே நான் கண்ட நடனச் சித்திரம் எப்படி என் உள்ளத்தைக் கவர்ந்ததோ, அல்லும் பகலும் அதே நினைவாக இருக்கச் செய்ததோ, அதே மாதிரி இப்போது சிவகாமியின் உருவம் என் உள்ளத்தைக் கவர்ந்தது. உள்ளத்தை மட்டுமா? ஊனையும் உயிரையும் உயிரின் ஒவ்வோர் அணுவையும் கவர்ந்து விட்டது.




ஆம், தம்பி! சிவகாமியிடம் நான் காதல் கொண்டேன்; பிரேமை கொண்டேன்; மோகம் கொண்டேன். இன்னும் உலகத்துப் பாஷைகளில் என்னென்ன வார்த்தைகள் அன்பையும், ஆசையையும் குறிப்பதற்கு இருக்கின்றனவோ அவ்வளவு வார்த்தைகளையும்

குறிப்பிட்ட போதிலும் காணாது என்று சொல்லக்கூடிய வண்ணம் அவள் மீது பிரியங்கொண்டேன். காதல், பிரேமை, மோகம் என்னும் வார்த்தைகளை இந்த உலகம் தோன்றிய நாள் முதல், கோடானு கோடி மக்கள் எத்தனையோ கோடி தடவை உபயோகித்திருக்கிறார்கள். ஆனால், அந்த வார்த்தைகளின் மூலம் நான் குறிப்பிடும் உணர்ச்சியை அவர்கள் அறிந்திருக்க மாட்டார்கள். என்னுடைய காதலில் தேக தத்துவம் என்பது சிறிதும் கிடையாது.



சிவகாமியின் உருவத்தைக் கண்டு நான் மோகித்து விடவில்லை. அவளுடைய உருவத்தைக் காட்டிலும் அழகிய சித்திர சிற்ப வடிவங்களை நான் கண்டிருக்கிறேன். சிவகாமியின் பசும்பொன் மேனி நிறத்துக்காக அவள் மீது நான் காதல் கொள்ளவில்லை. அந்த மேனி நிறத்தைக் காட்டிலும் பிரகாசமான பொன்னிறத்தை இதோ இந்தச் சந்திரனிடம் காணலாம். சிவகாமியின் கண்ணழகைக் கண்டு நான் மயங்கி விடவில்லை. அவள் வளர்த்த ரதி என்னும் மான் குட்டியின் மருண்ட கண்கள் சிவகாமியின் கண்களைக் காட்டிலும் அழகானவை.

சிவகாமியின் உடம்பின் மென்மைக்காக அவள் மீது நான் ஆசை கொள்ளவில்லை. அவளுடைய உடம்பைக் காட்டிலும் அதிக மென்மை பொருந்திய எத்தனையோ புஷ்பங்கள் உலகில் இருக்கின்றன. ஆம், தம்பி, சிவகாமியிடம் நான் கொண்டிருக்கும் காதலில் தேக தத்துவம் என்பதே கிடையாது. ஆகையால் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் உனக்காக நான் ஏற்றுக் கொண்ட பிக்ஷு விரதத்துக்குச் சிவகாமியினால் யாதொரு பங்கமும் நேரவில்லை.."

இவ்விதம் நாகநந்தி சொல்லி வந்த போது அவருடைய முகத்தில் அசாதாரணமான ஒரு கிளர்ச்சி காணப்பட்டது. புலிகேசி தம் மனத்தில், ‘இதென்ன' ஒருவகை விசித்திரமான பைத்தியம் போல இருக்கிறதே? மகேந்திரனுடைய சிறையில் வெகு காலம் கிடந்ததனால் புத்தி மாறாட்டமாகி விட்டதா?' என்று எண்ணமிட்டார்.




புலிகேசியின் முகபாவத்தைக் கொண்டு இதை ஊகித்து உணர்ந்த நாகநந்தி கூறினார்: “இல்லை தம்பி, இல்லை! எனக்குப் பைத்தியம் பிடித்து விடவில்லை. இவ்வளவு தெளிவாக என்னுடைய அறிவு இதற்கு முன் எப்போதும் இருந்ததில்லை. எனக்கு உண்மையில் சிவகாமியின் மீது ஆசையே கிடையாது. அவளை ஆட்கொண்டிருக்கும் கலைத் தெய்வத்தினிடந்தான் மோகம். சிவகாமி சுயப்பிரக்ஞையை இழந்து தன்னை மறந்து ஆனந்த வெளியில் மிதந்து நடனமாடும் போது, நானும் தன் வசமிழந்து விடுகிறேன். அப்போது எனக்கு உண்டாகும் ஆனந்தம் இந்த உலகில் வேறெந்தக் காரியத்திலும் ஏற்பட்டதில்லை. தம்பி! மகேந்திர பல்லவனை நான் எவ்வளவோ பகைக்கிறேன்; துவேஷிக்கிறேன்; ஆனால், ஒரே ஒரு விஷயத்தில் மகேந்திரனும் நானும் ஒரே அபிப்பிராயம் கொண்டவர்கள். சிவகாமி கேவலம் மனிதர்களுக்கு மனைவியாகப் பிறந்தவள் அல்லவென்றும் அவளுடைய அற்புதக் கலை தெய்வத்துக்கே அர்ப்பணமாக வேண்டிய கலையென்றும் ஒருநாள் ஆயனரிடம் மகேந்திர பல்லவன் சொன்னான்.

புத்தர் சிலையின் பின்னாலிருந்து அதை நான் கேட்டேன்; அவனுடைய கூற்றை மனத்திற்குள் பூரணமாக ஆமோதித்தேன். தம்பி! நீ நிச்சயமாக நம்பலாம், சிவகாமியிடம் நான் கொண்ட காதலினால் என்னுடைய பிக்ஷு விரதத்துக்கு யாதொரு பங்கமும் நேராது” என்று முடித்தார் நாகநந்தியடிகள்.

(சபதம் தொடரும்)

# நாய்கள் வெறுக்கும் கோடை வெயில்!

கோடை காலத்தின்
வெப்ப பிரளயத்தை ஜீரணிக்க
முடியாத நாய்கள்

கிணற்றடி மணலின் ஈரத்தைத்தேடி
உறங்கி உடலை குளிரூட்டி
ஆறுதலாகும் போது

வீட்டுக் குழந்தைகள் குறுக்கிற்று
தன் இளைப்பாறுகையை முறியடித்து
ஆத்திரத்தை ஊட்டும் தருணத்தில்
நாய்கள் முறைத்துப் பாயும்
குரைப்பு கடினமானதுதான்
இருப்பினும்




நாய்கள் வெறுக்கும் கோடை வெயிலின்
அகோரச் சூட்டை பொறுக்க முடியாமல்
இப்படித்தான் வளர்த்தவன் வீட்டு
எச்சச் சோற்றுக்குக்கூட நன்றி
செலுத்தாதபடி நடந்து விடுகிறது
நாய்கள்.

**ஜே.பிரோஸ்கான்**



# யோக

*யோகா, தியானம் ஆகியவை மூளையை வலுப்படுத்துமா?*

யோகா மன அழுத்தத்தை எவ்வாறு போக்குகிறது. மனஅழுத்தம் என்பது சிக்கலான சூழல்களில் உங்கள் உடலும் மனமும் எதிர்வினையாற்றும் முறையாகும். யோகாசனம் பயில்வதால் மனதில் அமைதி ஏற்படுகிறது. மன அழுத்தம், தன்மை, சூழல், அளவுக்கு ஏற்ப நேர்மறை மற்றும் எதிர்மறை விளைவுகளைத் தரக் கூடியது. மனிதன் தோன்றிய காலம் முதலே **stress** மனிதனில் இயல்பாக இருந்திருக்கும். வேட்டையாடி சமூகத்தின் சூழல் தரும் சவால்களில் மன அழுத்தம் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக இருந்திருக்கும். மனிதனின் பரிணாம வளர்ச்சியோடு மன அழுத்தத்தின் தன்மையும், விளைவுகளும் மாற்றம் அடைந்து வந்திருக்கிறது.

ஆனால், மன அழுத்தம் பல்வேறு எதிர்மறை பாதிப்புகளை அளிக்கக் கூடியதாக, சமூகத்தில் பரவலாக பலரையும் பாதிக்கக் கூடியதான ஒன்றாக ஆனது சமீபத்திய வருடங்களில்தான். 1950 மற்றும் 1960—களின் காலக்கட்டத்தில் மன அழுத்தத்தின் காரணமாக ஏற்படும் மனச்சோர்வு என்பது அபூர்வமனதாக இருந்தது போய் 21—ம் நூற்றாண்டிலே, மன அழுத்தம் மற்றும் மனச்சோர்வு, உடல் பாதிப்புகளை ஏற்படுத்தும் முக்கிய நோய்களின் பட்டியலில் இடம் பிடித்திருக்கிறது.




**Stress** என்பது சிக்கலான சூழல்களில் உங்கள் உடலும் மனமும் எதிர்வினையாற்றும் முறையாகும். ஒரு சிக்கலான சூழலில், **stress hormones** வெளிவருவதால் உங்களின் இருதயத் துடிப்பும் இரத்த அழுத்தமும் அதிகரிக்கிறது. இதன் விளைவாக உடலில் பிராணவாயு ஓட்டம் அதிகரிக்கிறது, உங்கள் நோய் எதிர்க்கும் திறன் தூண்டப்பட்டு உங்கள் உடலையும் மனதையும் சிக்கலை துணிவாக எதிர்கொள்ளவும் வெல்லவும் வைக்கிறது.

யோகாசனம் நரம்பு மண்டலத்தை அமைதிப்படுத்துகிறது. உணர்வுகளின் தாக்கத்தால் ஏற்படும் விளைவுகளைக் கட்டுக்குள் கொண்டு வருவதோடு உணர்வுகளைக் கையாளும் திறனை மேம்படுத்துகிறது.

யோகப்பயிற்சி செய்வதால் ஒருவர் தாம் செய்யும் வேலையில் மனதை ஈடுபடுத்துவதற்கு





# யாகம்

டி.கிருஷ்ணன்

மனதைப் பழக்க முடியும். இதை ஆங்கிலத்தில் **'being in the moment' - 'mindfulness'** என்று குறிப்பிடலாம். எப்பொழுது மனம், செய்யும் வேலையில் ஈடுபடுத்தப்படுகிறதோ, அப்பொழுதே மன அழுத்தத்தை உருவாக்கும் காரணங்களிலிருந்து மனம் விலகி விடுகிறது.

யோகாசனம் பயில்வதால் மனதில் அமைதி ஏற்படுகிறது. சிந்தனையில் தெளிவு பிறக்கிறது. யோகப்பயிற்சி தூக்கமின்மையைப் போக்குகிறது. உடல், மன நலத்துக்கு தூக்கத்தின் இன்றியமையாமையைப் பற்றி சொல்ல வேண்டியதே இல்லை. மன அழுத்தத்தின் விளைவுகளில் ஒன்றான தூக்கமின்மை, மன அழுத்தத்தை மேலும் அதிகப்படுத்துவதாகி விடும். தொடர்ந்து யோகாசன பயிற்சி செய்து வர





தூக்கமின்மை நீங்கும் என்று பல்வேறு ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

பிரணாயாமம் ஏன் செய்ய வேண்டும்?

யோகா மற்றும் பிராணாயாமப் பயிற்சிகள் மூச்சு விடும் முறைகளை செம்மையாக்குகிறது. தன்னிச்சையாக மூச்சு விடுவதைப் போல் அல்லாமல் பிராணாயாமத்தில் கவனத்தைக் குவித்து மூச்சை நிதானமாக இழுத்து விடும் சில பிராணாயாம வகைகள் உடலை ஓய்வு கொள்ள






உதவுகிறது. இது தூண்டப் பெறுவதன் மூலம் உடலும் மனமும் அமைதி நிலையை அடைகிறது.

பிராணாயாம முறைகளில் ஆழ்ந்த மூச்சு விடும் பொழுது சஞ்சாரி நரம்பு (**vagus nerve**) தூண்டப்பெறுகிறது. சஞ்சாரி நரம்பு தூண்டப்படுவதால் மனநிலை மாற்றங்கள் (**mood swings**) மற்றும் மன அழுத்தம் குணமடைகின்றன.

''அந்தக் காலத்தில் யோகாசனம் என்பது உடலுக்கும், மனதிற்கும் சம்பந்தப்பட்டதாக திகழ்ந்திருக்கிறது. அதனால்தான் முந்தைய காலங்களில், யோகாசனங்கள் மட்டும் நிகழ்த்தப்படாமல், தியான யோகாசன பயிற்சிகளும் செய்யப்பட்டிருக்கின்றன. தியான யோகாசனம் என்பது, யோகாசனத்துடன் கூடிய தியான முயற்சி. அதாவது, உடலை வளைப்பதுடன், கூடவே மனதை ஒருமுகப்படுத்தி தியானம் செய்திருக்கிறார்கள்.




யோகாசனத்துடன் கூடிய தியான பயிற்சியின் மூலம் யோகாசனத்தின் முழுப் பயனையும் அடைய முடியும் என்பது, நம் முன்னோர்களின் கருத்து. அதில் உறுதியாக இருந்து, தியான யோகாசனங்கள் மூலமாக உடலுக்கும், மனதிற்கும் நன்மை செய்திருக்கிறார்கள். தியான யோகாசனம் மூலமாகவே, நம் முன்னோர்கள் 100 வயதை கடந்த பிறகும், ஆரோக்கியமான வாழ்க்கை வாழ்ந்திருக்கின்றனர்'' என்றவர், யோகாசன முயற்சிகளை தியான பயிற்சிகள் மூலமாக வலுப்படுத்துகிறார். நீண்ட ஆராய்ச்சிக்கு பிறகு, நம் முன்னோர்களின் தியான யோகாசன முயற்சியை மீட்டெடுத்திருக்கிறார்.

''அது என்ன தியான யோகாசனம் என்கிறீர்களா...? ஒருமணி நேரம் யோகாசனம் செய்கிறீர்கள் என்றால், அதுமட்டுமே உங்களை புத்துணர்ச்சியாக்கி விடாது. ஒரு மணிநேர யோகாசன பயிற்சியுடன், கூடுதலாக அரை மணி நேர தியான பயிற்சியும் அவசியம். அப்போதுதான், நீங்கள் அரும்பாடுபட்டு செய்த யோகாசனத்திற்கு முழுமையான பயன் கிடைக்கும். உடலும் ஆரோக்கியமாக இருக்கும். தியான பயிற்சியின் மூலம் மனமும் அமைதியாகும்.

இந்த தியான யோகா பயிற்சிகள், மன அழுத்தத்திற்கு பலன் தருவதாக, பல ஆராய்ச்சிகளில் தெரிய வந்திருக்கிறது. ஏனெனில் புத்துணர்ச்சி ரத்த செல்கள் வழியே பாய்ச்சப்பட்டு, உடல் உறுப்புகளையும், எண்ண ஓட்டங்களையும் சீர்படுத்துகிறது'' மன அழுத்தத்தில் சிக்கி தவிக்கும் அரசு ஊழியர்களுக்கு, தியான யோகா பயிற்சிகளை பல ஆண்டுகளாக கற்றுக்கொடுத்து வருகிறார்.




குறிப்பாக, 2020—ம் ஆண்டுகளில், கொரோனா ஊரடங்கு சமயங்களில், கடும் மன அழுத்தத்துடன் பணியாற்றிய ஈரோடு பகுதி காவலர்களுக்கு, தொடர் பயிற்சியாக தியான யோகாசனம் கற்றுக்கொடுத்து, அவர்களது மன அழுத்தத்திற்கும், மன சோர்விற்கும் மருந்து போட்டிருக்கிறார்.

யோகாசனமும், தியானமும் நம் முன்னோர்களின் வாழ்க்கையில் மிக முக்கியமானவை. இவ்விரண்டும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை என்பதால் இதை பிரித்து பார்ப்பதில் எந்த பலனும் இல்லை. முன்னோர்களின் வாழ்க்கை முறையில் இருந்த தியான யோகா முறைகளையும், அதனால் கிடைக்கும் நன்மைகளையும் ஆராய்ந்து, அதை அறிவியல் ஆவணமாக்கும் முயற்சிகளை முன்னெடுத்திருக்கிறேன். அவை அறிவியல் ரீதியாக நிரூபணம் ஆகும்போது, தியான யோகாசனம் பற்றிய விழிப்புணர்வு அதிகரிக்கும். யோகாசனம் மட்டும் செய்து கொண்டிருப்பவர்கள், தியானத்தின் மூலமும் நன்மைகளை பெறுவார்கள். யோகாசனமும், அதன் பாரம்பரிய வடிவம் பெற்றுவிடும்".

தியான யோகா பயிற்சிகள், மன அழுத்தத்திற்கு பலன் தருவதாக, பல ஆராய்ச்சிகளில் தெரிய வந்திருக்கிறது. ஏனெனில் புத்துணர்ச்சி ரத்த செல்கள் வழியே பாய்ச்சப்பட்டு, உடல் உறுப்புகளையும், எண்ண ஓட்டங்களையும் சீர்ப்படுத்துகிறது

மன அழுத்தத்தில் இருந்து விடுபட உதவும் 5 முக்கிய யோகாசனங்கள்..


நீங்கள் ஒவ்வொரு இரவும் தூங்க முடியாமல் சிரமப்படுகிறீர்கள் என்றால், கீழே கொடுக்கப்பட்டுள்ள 5 யோகாசனத்தை முயற்சி செய்யுங்கள். தினமும் யோகா செய்வதால் மன அழுத்தத்தை நீக்குவது முதல் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துவது வரை பல்வேறு ஆரோக்கிய நண்மைகளை உள்ளடக்கியுள்ளது. குறிப்பாக மனநிலையை சரிசெய்து நன்கு தூங்க உதவுகிறது. வழக்கமான யோகா பயிற்சி நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து தொற்று நோய்கள் நம்மை அண்டாமல் பாதுகாக்கிறது. மேலும் இதய ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் யோகா உதவுகிறது. நீங்கள் ஒவ்வொரு இரவும் தூங்க முடியாமல் சிரமப்படுகிறீர்கள் என்றால், கீழே கொடுக்கப்பட்டுள்ள 5 யோகாசனத்தை முயற்சி செய்யுங்கள்.




விருக்ஷாசனம் செய்தால் மனதை ஒருநிலைப்படுத்த முடியும். விருக்ஷாசனம் என்றால், மரம் போன்ற தோற்றம் என்று பொருள். இந்த ஆசனத்தை செய்ய, முதலில் நேராக நிற்கவும். பின்னர் உங்கள் கைகளை மேலே நகர்த்தி உள்ளங்கைகளை ஒன்றாக இணைக்கவும். ஒரு காலில் சமநிலையை பராமரிக்கும் போது, மற்றொரு காலை எடுத்து நிற்கும் காலின் தொடைக்கு அருகில் கொண்டு வந்து நிற்கவும். சில விநாடிகள் இதே நிலையை பின்பற்றி நீராக நிற்க வேண்டும். இந்த ஆசனத்தின்போது, சாதாரணமாக மூச்சுவிட வேண்டும். இதனை காலை அல்லது மாலை நேரத்தில் செய்யலாம்.

இந்த ஆசனம் செய்வதால் மன அழுத்தம் குறையும். இது உங்கள் கால்களை வலிமையாக்குகிறது மற்றும் இடுப்பு பகுதியை வலுப்படுத்துகிறது. இந்த ஆசனம் செய்யும் போது முழு உடலின் எடையும் கால்களுக்கு மாற்றப்படுவதால் கால்களின் தசைநார்களை பலப்படுத்துகிறது. இதனால் இது தொடைகள் மற்றும் கணுக்கால்களை வலுவடைகிறது.

உஸ்ட்ராசனா :உஸ்ட்ராசனா மண்டியிட்டு பின்னர் பின்பக்கம் வழியாக கைகளால் பாதங்களை தொடுவதாகும். இந்த யோகாவை வெறும் வயிற்றில் செய்ய வேண்டும். இதனை ஒட்டக போஸ் யோகா என்றும் கூறுவர்.




புஜங்காசனம் : புஜங்காசனத்தில் உடலின் ஒவ்வொரு பகுதியும் வேலை செய்கிறது. இந்த ஆசனம் செய்யும் போது பாம்பு படமெடுப்பது போல உடல் வளைந்து நிமிர்ந்து முகம் நேராக நோக்குகிறது. அதனால் இது சர்ப்பாசனம் என்றும் அழைக்கப்படுகிறது. இந்த ஆசனம் செய்ய முதலில் குப்புறப்படுத்துக் கொள்ள வேண்டும். உள்ளங்கைகளை தலைக்கருகே, தரையில் படுமாறு வைக்க வேண்டும். கால்விரல்கள் தரையில் படவேண்டும். குதிகால்கள் வானம் பார்த்தபடி இருக்க வேண்டும். மனதை ரிலாக்ஸாக வைத்துக் கொள்ளுங்கள். மூச்சை ஆழ்ந்து விடுங்கள். இப்போது உள்ளங்கைகளை மெதுவாக ஊன்றி, தலையை மேலே உயர்த்துங்கள். எவ்வளவு முடியுமோ அவ்வளவு பின்னாடி வளையுங்கள். இப்போது மெதுவாய் மூச்சு விடுங்கள். 15 வினாடி அப்படியே இருக்க வேண்டும். அதன் பின் மெதுவாக மறுபடியும் பழைய நிலைக்கு வாருங்கள்.

புஜங்காசனா யோகா செய்வதால் முதுகெலும்பு, மார்பு, வயிறு, தோள்கள், நுரையீரல் ஆகியவற்றை பலப்படுத்துகிறது. மேலும் இரத்த ஓட்டத்தை மேம்படுத்துகிறது, அதே நேரத்தில் உடல் மற்றும் மன அழுத்தத்தை குறைக்க உதவுகிறது.





பாலசனம் :குழந்தை வயிற்றில் இருப்பது போன்ற நிலையில் இருப்பதால் இது குழந்தை போஸ் என அழைக்கப்படுகிறது. இதை செய்வதற்கு முதலில் உங்கள் குதிக்காலின் மீது உட்கார்ந்து கொள்ள வேண்டும். அப்படி குதிக்காலில் அமர்ந்திருக்கும்போது உங்கள் முழங்கால்களை கொஞ்ச தூரத்திற்கு பரப்பவும். இப்போது தலைக்கு மேலே உங்கள் கைகளை உயர்த்தவும். இப்போது உங்கள் மேல் உடலை வளைக்கும்போது உங்கள் கைகளை தரையில் வைக்கவும். இந்த நேரத்தில் உடல் குதிக்காலில் இருந்து விடுப்பட்டு இருக்கும். இந்த ஆசனம் செய்யும் போது கவனமாக இருக்க வேண்டும்.

இந்த யோகா செய்வதால் மார்பு, முதுகு மற்றும் தோள்கள் வலுவாகிறது. இதனை தினமும் செய்து வந்தால், மன அழுத்தம், பதட்டத்தை குறைக்க உதவுகிறது. தலைச்சுற்றல் அல்லது சோர்வு உள்ளிட்ட பிரச்சனைகளை சரி செய்யவும், முதுகு, இடுப்பு, தொடைகள் மற்றும் கணுக்கால், முதுகு வலியை குறைக்கவும் உதவும்.

நன்மைகள் :இந்த யோகா செய்வதால் மார்பு, முதுகு மற்றும் தோள்கள் வலுவாகிறது. இதனை தினமும் செய்து வந்தால், மன அழுத்தம், பதட்டத்தை குறைக்க உதவுகிறது. தலைச்சுற்றல் அல்லது சோர்வு உள்ளிட்ட பிரச்சனைகளை சரி செய்யவும், முதுகு, இடுப்பு, தொடைகள் மற்றும் கணுக்கால், முதுகு வலியை குறைக்கவும் உதவும்.

பரிவர்த்தாசனம் :முதலில் உங்கள் கால்களை அகலமாக வைத்து கொள்ளுங்கள். பாதங்கள் தரையில் உறுதியாக வைக்கப்பட்டிருக்க வேண்டும். இப்போது உங்கள் இரு உள்ளங்கைகளுக்கும் இடையில் உங்கள் வலது காலை முன்னோக்கி கொண்டு வாருங்கள். குதிகால் தூக்கும் போது உங்கள் இடது காலின் பின்புறத்தை நேராக வைத்து, உங்கள் கால்விரலை உள்ளே வைக்கவும். மூச்சை இழுத்து, உங்கள் இடுப்பை கீழே தள்ளி, உங்கள் வலது தொடையை தரையில் இணையாக எடுத்துக் கொள்ளுங்கள். பின்னர் உங்கள் வலது கையை விரல்களால் உச்சவரம்பை நோக்கி உயர்த்தவும். உங்கள் இரண்டு தோள்களும் நேர்கோட்டில் இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். உங்கள் இடது கை விரல்களை நன்கு நீட்டி அந்த விரல்களைப் பார்த்தபடி 15 வினாடிகள் இருங்கள். பின்னர் இயல்பு நிலைக்கு திரும்பவும்.

நன்மைகள் :இந்த யோகா செய்வதால் முழு முதுகெலும்பையும் புத்துணர்ச்சியூட்டி, தொடை எலும்புகளை நெகிழச் செய்கிறது. மேலும் முதுகு தசைகளை வலுவாக்குகிறது. இந்த ஆசனத்தை தினமும் செய்து வந்தால் மன அழுத்தம் குறைந்து உடல் ஆரோக்கியமாகும்.


தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
HAPPY
Diwali
FESTIVAL OF LIGHTS
VARSHA™

# இடர்மழை

நமக்கிடையே வான் தெளித்த
அடர்த்தியான மழையைத் தவிர்த்து
வேறெவருமிருக்கவில்லை!
தூறல் வலுத்த கணமது!
வீதியின் ஒரு புறத்தில் நீ!
இதுவரை கவிழ்ந்திருந்த தலையை
முக்காட்டுக்குள்ளிருந்து நிமிர்த்தி
எதிரே வருமென்னைப் பார்க்கிறாய்

காற்றடித்து வலுத்த மழைக்குத் தப்பியோட
நானிருக்கும்போது நீ முயற்சிக்கவில்லை!
உன் நாணத்தை முழுமையாக வழித்தெறியத்
தூறலுக்குத் தெரியவுமில்லை
உன்னிடமோ என்னிடமோ
அந்திவேளையின் மழையை எதிர்பார்த்த
குடைகள் இல்லை!
வானிலிருந்து பொழியும் நீர்த்துளிகளைத்
தடுக்க
மேனிகளுக்குத் தெரியவுமில்லை

இத்தனைகள் இல்லாதிருந்தும்
ஆண்மையென்ற பலமிருந்து நான்
அருகிலிருந்த என் வீட்டிற்கு ஓடுகிறேன்
காற்சட்டையில் சேறடித்திருக்கக்
கவலையேதுமில்லை!
தேய்த்துக் கழுவ அம்மா இருக்கிறாள்
நான் மறையும்வரை காத்திருந்து நீயும்
புத்தகங்களை நெஞ்சில் அணைத்து
பேருந்து நிறுத்தம் நோக்கி
ஓடத்துவங்குகிறாய்

**எம்.ரிஷான் ஷெரீப்**




தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
தீபாவளி
வாழ்த்துக்கள்
HAPPY
Diwali
FESTIVAL OF LIGHTS




## நலம் தரும் நல்லெண்ணெய்!

ஆயுர்வேதத்தில் நல்லெண்ணெய்க்கு தனி இடம் உண்டு. பொதுவாக நல்லெண்ணெய் உடம்பில் தேய்த்து குளியல் செய்வது உடல் வறட்சியைத் போக்கி நல்ல உறக்கத்தை கொடுக்க வல்லது.நல்லெண்ணெய் உட்கொள்ளுவதன் பலன் உள் உயவு. எள் எண்ணெய் குடலை உயவூட்டுவதற்கும் மற்றும் மலத்தை மென்மையாக்கவும் பயன்படுத்தப்படுகிறது. மலச்சிக்கல் இருப்பவர்கள் அளவோடு செய்யலாம். எண்ணெய்களில் நல்ல எண்ணெய் எள்ளிலிருந்து எடுக்கப்படும் நல்லெண்ணெய். கலப்படமில்லாத செக்கு நல்லெண்ணெய்யின் பலன்கள் குறித்துச் சொல்கிறார் ஆயுர்வேத மருத்துவர் ஆர்.பாலமுருகன்.

``உலகத்தில் இருக்கிற எண்ணெய்களில் மிகச்சிறந்த எண்ணெய் நல்லெண்ணெய்தான். ஆயுர்வேத மருத்துவத்தில் எண்ணெய் என்று குறிப்பிட்டிருந்தாலே அது நல்லெண்ணெய்தான்.ஆயுர்வேத மருத்துவத்தைப் பொறுத்தவரை உடல் இயக்கத்துக்கு உதவுபவை வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்று தோஷங்கள். இவை உடலில் அதிகமாகவும் கூடாது, குறைவாகவும் கூடாது. உடலில் வாதம் சரியாக இருந்தால்தான் கண் சிமிட்டுவது ஆரம்பித்து நுரையீரல் சுருங்கி விரிவதுவரை நடக்கும். இதுவே வாதம் அதிகமானால் இடுப்புவலி, மூட்டுவலி, பக்கவாதம் உள்ளிட்ட 80 வகையான நோய்கள் வரும். வாதத்தைக் குறைப்பதில் முக்கிய பங்கு வகிப்பது நல்லெண்ணெய் தான். ஏனென்றால் வாதத்தின் குணமும் நல்லெண்ணெய் யின் குணமும் நேர் எதிர் தன்மை கொண்டவை.

உடல் எடை அதிகரித்தவர்களுக்கு மூட்டுகள் விரைவாக கல கலத்துப் போவதற்குக் காரணமாக, மூட்டுகளில் உள்ள ஜவ்வு வெளிப்பிதுங்குவதாலும், ஜவ்வு கிழிவதாலும் ஏற்பட வாய்ப்புகள் அதிகமுள்ளன. அமர்ந்த நிலையில் தெரியாத கஷ்டம், நிற்கும் நிலையிலோ, நடக்கும் நிலையிலோ, மூட்டுகளில் ஏற்படுத்தும். இந்த நிலை மாற, தொடர்ந்து நெய்ப்பை அப்பகுதிக்கு தருவது ஒன்றே வழியாகும். ஆனால், இதிலுள்ள கஷ்டம், நெய்ப்பைத்தரும் பல பொருட்களும், உடல் பருமனை மேலும் வளர்க்கும் என்பது தான். அதனால் உடல் பருமனைக் குறைக்கும் வராதி கஷாயம், வரணாதி கஷாயம், குக்குலுதிக்தகம் கஷாயம், கைசோர குக்குலு, த்ரயோதசாங்க குக்குலு போன்ற மாத்திரைகள் அடிக்கடி சாப்பிடப்பட வேண்டியவை. இதன் மூலம், உடல் லேசாவதுடன், மூட்டுகளிலுள்ள ஜவ்வுகள் வீக்கம், வலி போன்ற பிரச்னைகளிலிருந்து விடுபடும். அதன் பிறகு, மூலிகை தைலத்தைக் கொண்டு, வறட்சி அடைந்துள்ள மூட்டுகளின் மீது இளஞ் சூடாகத் தடவி 1/2 மணி நேரம் ஊறலாம். பிறகு துடைத்து விடலாம். பிண்ட தைலம், கொட்டஞ் சுக்காதி தைலம், முக்கூட்டு தைலம் ஆகியவை இந்த ஏற்பாட்டிற்காக பயன்படுத்தத் தேவையானவை.




ஊடுருவும் தன்மை, செரிமானமாவதற்கு முன்பாகவே உடலில் பரவிவிடும் குணம், தோலின் வலிமை,கண்பார்வை சக்திக்கு வலுவூட்டுதல் (வெளி உபயோகத்தினால்), சூடான வீர்யம், தேய்த்துக் குளிப்பதால் உடல் மெலிந்தவர் பருப்பதும், உள் உபயோகத்தினால் பருத்தவர் இளைப்பதும், மலத்தை இறுக்குவதும், குடல் கிருமிகளை அழிப்பதும், மூலிகைகளால் காய்ச்சப்பட்டதும் பல நோய்களுக்கு அருமருந்தாகவும் பயனளிக்கக் கூடிய நல்லெண்ணெய், மனிதர்களுக்குக் கிடைத்துள்ள வரப்பிரசாதம் தான் !

நல்லெண்ணெயை காலையில் வெறும் வயிற்றில் சிறிது குடித்தால், குடலியக்கம் சீராக நடைபெற்று, மலச்சிக்கல் பிரச்சனை நீங்கும். நல்லெண்ணெயில் லெசித்தின் என்னும் பொருளும், லினோலிக் என்னும் அமிலமும் இருப்பதால், இரத்தத்தில் உள்ள அதிகப்படியான கெட்ட கொழுப்பைக் கரைத்து, நல்ல கொழுப்பின் அளவை அதிகரிக்கும்.

நல்லெண்ணெய்யில் கால்சியம் மற்றும் ஜிங்க் வளமாக இருப்பதால், தினமும் சிறிது நல்லெண்ணெய்யை வெறும் வயிற்றில் குடித்தால், ஆஸ்டியோபோரோசிஸ் என்னும் எலும்புப்புரையின் தாக்கம் குறைந்து, எலும்புகளின் ஆரோக்கியம் மேம்படும்.நல்லெண்ணெயை




எஸ். சுவாமிநாதன்

சமையலிலும் சேர்க்கலாம் அல்லது காலையில் வெறும் வயிற்றில் 1 டீஸ்பூன் குடித்தும் வரலாம். இப்போது நல்லெண்ணெயை எடுத்துக் கொள்வதன் மூலம் பெறும் நன்மைகளைப் பற்றிப் பார்ப்போம். அதைப் படித்து தெரிந்து கொண்டு, உணவில் நல்லெண்ணெய்யை சேர்க்க தவறாதீர்கள்.

மலச்சிக்கல்: நல்லெண்ணெய்யை காலையில் வெறும் வயிற்றில் சிறிது குடித்தால், குடலியக்கம் சீராக நடைபெற்று, மலச்சிக்கல் பிரச்சனை நீங்கும்.

கெட்ட கொழுப்பு: நல்லெண்ணெய்யில் லெசித்தின் என்னும் பொருளும், லினோலிக் என்னும் அமிலமும் இருப்பதால், இரத்தத்தில் உள்ள அதிகப்படியான கெட்ட கொழுப்பைக் கரைத்து(**LDL**), நல்ல கொழுப்பின் (**HDL**)அளவை அதிகரிக்கும்.

உடலுக்கு குளிர்ச்சி: உடல் சூட்டினால் அவஸ்தைப்படுபவர்கள், நல்லெண்ணெயை சிறிது குடித்தால், உடல் வெப்பம் தணிந்து, உடல் குளிர்ச்சியுடன் இருக்கும்.

இரத்த அழுத்தம்: நல்லெண்ணெய்யில் ஆன்டி—ஆக்ஸிடன்ட்டுகள் மற்றும் பாலி அன்சாச்சுரேட்டட் கொழுப்புக்கள் உள்ளதால், இவை இரத்த அழுத்தத்தைக் குறைக்கும். குறிப்பாக நல்லெண்ணெய் குடிப்பதால், இரத்த அழுத்த மருந்துகளை நாளடைவில் குறைத்துவிடலாம்.




மூட்டு வலிகள்: மூட்டு வலிகளால் கஷ்டப்படுபவர்கள், நல்லெண்ணெய்யை உணவில் சேர்ப்பதன் மூலமோ அல்லது குடிப்பதன் மூலமோ குணப்படுத்தலாம்.




பல் பிரச்சனைகள்: நல்லெண்ணெய்யில் உள்ள ஆன்டி—பாக்டீரியல் தன்மையினால், இந்த எண்ணெய்யைக் தினமும் காலையில் வாயில் சிறிது ஊற்றி, 10 நிமிடம் கொப்பளித்து, வர வேண்டும். இப்படி செய்து வந்தால், பல் வலி, ஈறு பிரச்சனைகள் போன்றவை நீங்கி வாய் ஆரோக்கியம் மேம்படும்.

நல்லெண்ணெய் உட்கொள்ளுவதன் பலன் உள் உயவு. எள்

எண்ணெய் குடலை உயவூட்டுவதற்கும் மற்றும் மலத்தை மென்மையாக்கவும் பயன்படுத்தப்படுகிறது. மலச்சிக்கல் இருப்பவர்கள் அளவோடு செய்யலாம்.

எள் எண்ணெயை வாயில் தேய்க்கும்போது, பற்கள் மற்றும் ஈறுகளை வலிமையாக்கும். வாயில் உள்ள பாக்டீரியாக்களின் அளவைக் குறைப்பதாகவும் ஒரு ஆய்வில் காட்டப்பட்டுள்ளது.

நல்லெண்ணெய் கொண்டு வாய் கொப்பளிக்கும் ஆயில் புல்லிங் வழக்கம் பல் ஆரோக்கியத்திற்கு நல்லது.

- ஒரு தேக்கரண்டி எண்ணெயை உங்கள் வாயில் ஊற்றிக் கொள்ளுங்கள்.
- வாயின் இருபுறமும் உங்கள் பற்களைச் சுற்றியுள்ள பகுதிகள் உட்பட, உங்கள் முழு வாயையும் சுற்றி எண்ணெயை இழுக்கவும். (கொப்பளிப்பது போல)
- 15—20 நிமிடங்கள் அல்லது எண்ணெய் மெல்லியதாகவும் வெண்மை நிறமாகவும் மாறும் வரை தொடரவும். (நீங்கள் எண்ணெய் இழுப்பதில் புதியவராக இருந்தால், 5 நிமிடங்களுக்கு கொப்பளிக்க ஆரம்பிக்கலாம்). படிப்படியாக பரிந்துரைக்கப்பட்ட காலக்கெடு வரை செய்யலாம்.
- இந்த எண்ணெயை விழுங்க வேண்டாம்.
- உங்கள் வாயை வெதுவெதுப்பான நீரில் கழுவவும்.




எள்ளுடன் தேவையான சரக்குகளை பொடித்து,செக்குகளில் ஆட்டி எடுக்கும்போது ஒருவித நெய் உண்டாகும்.. எள் நெய் என்பதே காலப்போக்கில் மருவி எண்ணெய் ஆனது. (எள் + நெய் = எண்ணெய்) ஆகிவிட்டது.




நல்லெண்ணெயில் சீசேமோல் என்ற பொருள் நிறைய உள்ளது.. இந்த பொருள் இதயத்திற்கு மிகவும் நல்லது. உடல் இயக்கத்துக்கு இந்த எண்ணெய் உதவுகிறது.. வாதம், பித்தம், கபம் போன்றவற்றை சரிசமமாக வைக்க நல்லெண்ணெய் உதவுகிறது.. ஒருவேளை வாதம் அதிகமாகிவிட்டால் ஏராளமான உடல்நலக்கோளாறுகள் வரும்.. இந்த வாதத்தை குறைப்பதில் முக்கிய பங்கு வகிப்பது நல்லெண்ணெய்தான்.எந்த பொருளுடன் சேர்த்து சமைக்கிறோமோ, அந்த பொருளின் ருசியை அதிகப்படுத்தும் பண்பு, நல்லெண்ணெய்க்கு உள்ளது..நல்லெண்ணெயில் உள்ள அதிகப்படியான மக்னீசியம், இன்சுலின் சுரப்பை தடுக்கக்கூடியது.. அத்துடன், உடலில் நீரிழிவு வருவதைத் தடுக்கக்கூடியது..

கெட்ட கொழுப்பு: நல்லெண்ணெயில் உள்ள லெசித்தின் என்ற பொருளும், லினோலிக் என்ற அமிலமும் இருப்பதால், ரத்தத்தில் உள்ள அதிகப்படியான கெட்ட கொழுப்பை கரைத்து, நல்ல கொழுப்பின் அளவை அதிகரிக்க செய்கிறது.நல்லெண்ணெயில் ஈஸ்ட்ரோஜென் உள்ளதால், எலும்பு தேய்மானத்தை தடுக்கிறது.. மாரடைப்பு வந்தவர்கள் டாக்டர்களின் ஆலோசனையை கேட்டு, அதன்பிறகு இந்த எண்ணெய்யை பயன்படுத்துவது நல்லது.. ஆனால், அனைவருமே, நல்லெண்ணெயை உணவில் சேர்க்கும்போது, இஞ்சி, பூண்டு, மிளகு ஆகியவற்றை எல்லாம் நிறைய சேர்த்துக்கொண்டால் கூடுதல் நல்லது..

இந்த நல்லெண்ணெயில் முட்டையில் இருக்கும் புரோட்டீனுக்கு சமமான அளவில் புரோட்டீன் இருக்கிறதாம்.. இதனை உணவில் சேர்த்து சாப்பிடும் போது, குடலியக்கம் சீராகும்.. செரிமான பிரச்சனைகள் நீங்கும்.. தினமும் சிறிது நல்லெண்ணெய்யை வெறும் வயிற்றில் குடித்துவந்தால், ஆஸ்டியோபோரோசிஸ் என்ற எலும்புப்புரையின் தாக்கம் குறையும்.. எலும்புகளும் ஆரோக்கியம் பெறும்..

குளிர்ச்சி: உடல் சூட்டினால் அவஸ்தைப்படுபவர்கள், நல்லெண்ணெயை சிறிது குடித்தால், உடல் வெப்பம் தணியும்.. மூட்டு வலியில் அவதிப்படுபவர்கள், நல்லெண்ணெய்யை உணவில் சேர்த்து பலன் பெறலாம்.. நல்லெண்ணெயில் இருக்கும் மக்னீசியம், ரத்த அழுத்தத்தைக் குறைக்க பெரிதும் உதவியாக இருக்கும். அதிலும் நீரிழிவு

நோயாளிகளுக்கு, உயர் இரத்த அழுத்தம் இருந்தால் அவர்கள் நல்லெண்ணெயை சாப்பிடுவது நல்ல பலனைத் தரும். இப்படி சமையலில் நல்லெண்ணெயை பயன்படுத்தி அதன்மூலம் பல நன்மைகளை பெறலாம்.. மற்றொருபுறம், புற அழகுக்கும், சிகிச்சைக்கும் இந்த நல்லெண்ணெய் தேவைப்படுகிறது. தினமும் காலையில் எழுந்து நல்லெண்ணெயால் வாயை கொப்பளித்தால் பற்களில் தங்கியிருக்கும் சொத்தைகள் நீங்குவதோடு, பற்கள் பளிச்சென்றிருக்கும். பல் வலி, ஈறு பிரச்சனைகள் போன்றவை நீங்கி வாய் ஆரோக்கியமும் மேம்படும்.




தினம்தோறும் 5 நிமிடங்கள் செக்கு நல்லெண்ணெய்யால் வாய்க்கொப்பளித்தால், முகத்துவாரங்களில் இருக்கிற உமிழ்நீர் சுரப்பி உள்ளிட்ட நொதிகள் சரியாக செயல்பட ஆரம்பிக்கும்.இதனால் உடலில் நோய் எதிர்ப்பு சக்தியும் அதிகமாகும்... முகத்தில் பொலிவு ஏற்படும். ஒட்டிய கன்னங்களிலும் சதைப்பிடிப்பு ஏற்படும். சரும அழகுக்கு நல்லெண்ணெய் மிகச்சிறந்த தீர்வாக உள்ளது.. சருமத்தில் கொலாஜெனின் வளர்ச்சியை இந்த எண்ணெய் ஊக்குவிக்கும்.. மூட்டுவலி உள்ளவர்கள், நல்லெண்ணையில் மசாஜ் செய்து வந்தால், வீக்கமும், வலியும் குறையும்.

பொடுகு தொல்லை: நல்லெண்ணையை தலைக்கு தேய்த்துக் குளித்து வந்தால், கண் வலி, கண்ணில் நீர் வடிதல் போன்றவை நீங்கும்... முடிக்கு ஆரோக்கியம் தரும்.. பொடுகு தொல்லையும் காணாமல் போகும்... தூக்கமின்மையால் அவஸ்தைப்படுபவர்கள், அல்லது கம்ப்யூட்டரிலேயே எந்நேரமும் பணிபுரிபவர்கள், வாரம் ஒருமுறை நல்லெண்ணெய் தேய்த்து குளித்து வந்தால் நலம் பயக்கும்..

தினமும் 1 டீஸ்பூன் நல்லெண்ணெயுடன் 1 டீஸ்பூன் எலுமிச்சை சாறு சேர்த்து கலந்து, பஞ்சில் தொட்டு, பருக்கள் உள்ள இடத்தில் தடவி ஊற வைத்து கழுவினால், பருக்கள் குறையும்.. குதிகால் வெடிப்பு இருப்பவர்கள், நல்லெண்ணெயை ரோஸ் வாட்டருடன் கலந்து தினமும் இரவில் படுக்கும் முன்பு குதிகாலில் தடவினால் போதும்.. வெடிப்புகள் மெல்ல நீங்கும்..!!எந்தப் பொருளுடன் சேர்கிறதோ அந்தப் பொருளின் நன்மையையும் ருசியையும் அதிகப்படுத்துகிற இயல்பு நல்லெண்ணெய்க்கு உண்டு.

நம் உடலில் இருக்கிற மூட்டுகள் உராய்வு இல்லாமல் இயங்க வேண்டுமென்றால் உடல் முழுக்க செக்கு நல்லெண்ணெய் பூசி ஊறிக் குளிக்க வேண்டும். அந்தக் காலத்தில் போர்வீரர்கள் உடல் முழுக்க நல்லெண்ணெய் பூசிக் குளிப்பார்கள். நல்லெண்ணெய் உஷ்ணத்தன்மை கொண்டது. அதனால் எப்பேர்ப்பட்ட பனிக்காலத்திலும் நல்லெண்ணெய் உறைவதில்லை. அதனால் நல்லெண்ணெய் சாப்பிடும்போது அது உடல் முழுக்க எளிதாகப் பரவும். கர்ப்பப்பையில் வரக்கூடிய பிரச்னைகளைத் தடுக்கக்கூடிய தடுக்கிற ஆற்றல் கொண்டது நல்லெண்ணெய். அதனால்தான் அந்தக் காலத்தில் மாதவிடாய் நாள்களில் நல்லெண்ணெய்யைக் குடிக்கக் கொடுத்தார்கள். தற்போது ஒரு பெண் குழந்தை பெரிய மனுஷியாகும்போது தருவதோடு நிறுத்திவிட்டோம். இது சரி கிடையாது. நவ துவாரங்களில் முகத்தில்தான் அதிகமான துவாரங்கள் இருக்கின்றன. அவற்றின் வழியாக நம் உடலுக்குள் கிருமிகள் சுலபமாகச் சென்றுவிடும். தினம்தோறும் 5 நிமிடங்கள் செக்கு நல்லெண்ணெய்யால் வாய்க் கொப்பளித்தால், முகத்துவாரங்களில் இருக்கிற உமிழ்நீர் சுரப்பி உள்ளிட்ட நொதிகள் சரியாகச் செயல்பட ஆரம்பிக்கும். இதனால் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகமாகும். இதன் மூலம் நம்மைத் தாக்க வருகிற கிருமிகளை முகத்துவாரங்களிலேயே தடுத்துவிடலாம்.




உள்ளங்காலில் தினம்தோறும் நல்லெண்ணெய் தேய்த்து வந்தால் இடுப்புவலி வருவது தடுக்கப்படும். நரம்பு சுருட்டல் என்று சொல்லப்படுகிற வெரிக்கோஸ் வெயின்ஸ் வராது. நல்லெண்ணெய் உடலுக்கு மட்டுமல்ல உள்ளத்துக்கும் நல்லது. நம் உடலில் வாதம் அதிகமாகும்போது மனம் ஒரு நிலையில் இருக்காது. குழப்ப நிலையிலேயே இருக்கும் நல்லெண்ணெய் இதைச் சரி செய்யும்.

(பொறுப்பு துறப்பு: இங்கே கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் வீட்டு வைத்தியம் மற்றும் பொதுவான தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை. இவற்றை பின்பற்றுவதற்கு முன் கண்டிப்பாக மருத்துவ ஆலோசனையைப் பெற வேண்டும். அய்தமிழ் இந்த தகவல்களுக்கு பொறுப்பேற்காது.)

# நம்பிக்கை

இன்றைய அவசர கால ஓட்டத்தில் மற்றவர்கள் நம்மை ஊக்கப்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. நம்மை நாமேதான் ஊக்கப்படுத்திக் கொண்டு முன்னேற முயற்சிக்க வேண்டும்.

நம்மை நாமே ஊக்கப்படுத்தி கொள்வதற்கும், பெற்ற ஊக்கத்தை தக்க வைத்துக் கொள்வதற்கும் சிலவழிகளில் தொடர்ந்து நாம் பயணிக்க வேண்டும். அந்த வழிகள் என்னவென்று பார்ப்போம்.

நம்மை நாமே பாராட்டுதல் நாம் செய்யும் அனைத்து விஷயங்களும் அல்லது வேலைகளும் அல்லது புராஜெக்ட்களும் விரும்பியபடியே இருக்குமென்று கருத முடியாது. சில நம் ஆர்வத்தைத் தூண்டுவதாகவும், நாம் விரும்பக் கூடியதாகவும் இருக்கும். பல விஷயங்கள் நமக்கு ஆர்வத்தைத் தராதவையாகக் கூட இருக்கலாம். இத்தகைய சூழலில் குறிப்பிட்ட இலக்கை நாம் அடைந்தால் கிடைக்கக் கூடிய நன்மைகளை நினைத்து நம்மை நாமே உற்சாகப்படுத்திக் கொள்ள வேண்டும். நம்மால் இது முடியும் என்ற ஆர்வத்துடன் செயல்பட்டால், நம்மை அறியாமலேயே நமக்கு அந்தச் செயல்பாடு மீது உற்சாகம் வந்துவிடும் . அது வெற்றியைத் தந்து விடும்.

கொஞ்ச நேரம் ஓய்வெடுங்கள்

தற்போது கரோனா காலத்தில் பெரும்பாலோனோர் வீடுகளில் இருந்தே அலுவலகப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன. அலுவலகத்தில் இருந்து பணியாற்றும்போது குறிப்பிட்ட நேரம் மட்டுமே பணியாற்றியவர்கள் தற்போது நேரம், காலம் பார்க்காமல் பணியாற்ற வேண்டிய சூழலுக்குத் தள்ளப்பட்டு விட்டனர்.

இதனால் அவர்களுக்கு மனச் சோர்வு ஏற்பட்டு பணி

களில் தொய்வு நிலையும் உருவாகி வருகிறது. இதை தவிர்க்க, சோர்ந்த மனதை உற்சாகப்படுத்த, வேறு ஏதேனும் மனதுக்குப் பிடித்த செயல்களில் ஈடுபட வேண்டும். உதாரணமாக புத்தகங்கள் படிப்பது, இசை கேட்பது போன்றவற்றில் ஈடுபடலாம். இது மனதிற்கும், மூளைக்கும் உற்சாகத்தை அளித்து அந்தச் செயலை சிறப்பாக செய்ய உதவியாக இருக்கும். சினிமாவில் முழு நேர கதைகளுக்கு இடையிடையே பாடல்களும், சிரிப்பு காட்சிகளும் ,சண்டைக் காட்சிகளும் இடம் பெற்று உற்சாகத்தை அதிகரிப்பது போல் பணிகளுக்கிடையே சிறிது நேர ஓய்வு எடுத்து விட்டு, அதைத் தொடர்ந்து வேறு செயல்களில்






# வை!

## உன்னில்!!

முனைவர்

**வி.குமாரமுருகன்**

பொழுதைக் கழித்து விட்டு மீண்டும் பணியைத் தொடங்கினால் நாம் மேற்கொண்ட புராஜெக்ட் வெற்றிகரமாக முடிவடையும்.

கடந்த கால அனுபவங்களைத் திரும்பிப் பார்த்தல்


மிகப்பெரிய அலுவலகத்தில், மிக உயர்ந்த பதவியில் இருந்தாலும் கூட, நமது கடந்த கால வெற்றிகளையும் ,இடையே ஏற்பட்ட தோல்விகளையும் கண்டிப்பாக திரும்பிப் பார்க்க வேண்டியது அவசியம். நாம் இவ்வளவு உயரிய இடத்தில் இருப்பதற்கு கடந்த காலத்தில் நாம் செய்த ஒவ்வொரு முயற்சிகளும் தான் பலன் தந்தன என்பதை நினைவு கூர்வதற்கு இது வாய்ப்பாக அமையும் . இதன்மூலம் இனியும் அத்தகைய சிறு, சிறு முயற்சிகளை உற்சாகத்துடன் எடுப்பதற்கு மனம் நம்மை ஊக்கப்படுத்தும். அதுபோல் கடந்தகால தோல்விகளையும் நினைவுகூர்ந்து அவை திரும்ப நிகழாமல் இருப்பதற்கு எத்தகைய ஊக்கம் அவசியம் என்பதை உணர்ந்து செயல்பட வேண்டியதும் அவசியம்.

உடற்பயிற்சி

பணிகளுக்கு இடையே உடற்பயிற்சி செய்வது மூளைக்கு மிகுந்த உற்சாகத்தை அளிக்கக்கூடியது .சிறு உடற்பயிற்சி தானே என்று








நினைத்துவிடக்கூடாது. அந்த சிறிய அளவிலான உடற்பயிற்சி கூட மூளைத் திறனை வெகுவாக அதிகரித்து உற்சாகமாக நம்மை செயல்படத் தூண்டும்.

வாசித்தல்

புத்தக வாசிப்பு என்பது மிகப்பெரிய ஊக்கத்தை அளிக்கக்கூடிய விஷயம். நல்ல புத்தகங்களை ஒவ்வொரு நாளும் வாசிப்பது மிகப்பெரிய உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அளிக்கும். சோர்ந்து கிடக்கும் நம் மனதை உற்சாகப்படுத்தும் நேர்மறை கருத்துக்களைக் கொண்ட புத்தகங்களை வாசிப்பதன் மூலம் நமக்கு உற்சாகம் பிறக்கும். அது நம்முடைய செயல்பாட்டை அதிகரிப்பதற்கு ஊன்றுகோலாக இருக்கும்.

கலந்துரையாடுங்கள்

கரோனா நோய்த்தொற்று காரணமாக வீடுகளிலிருந்து பணி செய்யும் நிலை இன்றளவும் நீடித்து வருகிறது . இதனால் பெரும்பாலானோர் வெளி உலக தொடர்பின்றி மன அழுத்தத்திற்கு ஆளாகி வருகின்றனர் . இச்சூழலால் செய்யும் வேலையில் உற்சாகத்தையும் அவர்கள் இழந்து வருகின்றனர். இத்தகையவர்கள் தங்களின் உறவினர்கள், நண்பர்கள், உடன் பணிபுரிபவர்களுடன் இணையம் வழியாக சிறிது நேரம் கலந்துரையாடினால் அது அவர்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். இதன் மூலம் அவர்கள் ஊக்கத்துடன் பணி செய்ய முடியும்.




வாழ்க்கைப்பயணம் பல சவால்கள் நிறைந்தது,'சுய ஊக்கம்' மிகவும் இன்றியமையாதது. நமது வாழ்க்கைப்பயணம் பல சவால்கள் நிறைந்தது. இந்தப் பயணத்தில் நாம் பல்வேறு இலக்குகளைக் கொண்டு பயணிக்கிறோம். இப்பயணம் வெற்றிபெற 'சுய ஊக்கம்' மிகவும் இன்றியமையாதது. ஒருவர் தன் வாழ்க்கையில் வெற்றி பெற, தன்னம்பிக்கை, விடாமுயற்சி, உழைப்பு இவையனைத்தும் மிகவும் தேவை. ஒருவருக்கு சுய ஊக்கம் இல்லாத போது, பரிசுப் பொருட்கள் தருதல், கலந்தாய்வு கொடுத்தல் போன்ற புறக்காரணிகளால் அவரிடம் சுய ஊக்கத்தை ஏற்படுத்த முடியும். எத்தனையோ பேர் தங்களிடம் தகுதிகளும், திறமைகளும் இருந்தும் ஊக்கமின்மையால் வாழ்வில் பின் தங்கிவிடுகின்றனர். மனம் உறுதியாக இருந்தால் வாழ்வு வளமாக இருக்கும். மனிதனின் மனஉறுதிதான் நாடோடியாக வாழ்ந்தவனை நாடாளத் தூண்டியது. கால்நடையாக திரிந்தவனை கப்பலிலும் விமானத்திலும் பயணிக்கத் தூண்டியது. அடிமையாக வாழ்ந்தவனை சுதந்திரமாக வாழத் தூண்டியது.

நமக்குள்ளே இருக்கும் 'சுய ஊக்கம்' ஓர் சிறந்த உந்து சக்தியாகும். இது நமது இலக்குகளை நோக்கி நம்மை முன்னேறத் தூண்டுகிறது. எதிர்வரும் தடைகளைத் தன்னம்பிக்கையுடன் கடக்க உதவுகிறது. சுய ஊக்கம் நம்மை நேர்மறையாக சிந்தித்து செயலாற்ற உதவுகிறது. சுய ஊக்கம் நம் வாழ்வில் தெளிவான இலக்குகளை நிர்ணயிக்கவும், அவற்றை அடைய கடினமாக உழைக்கவும் தூண்டுகிறது. தியானம், யோகா போன்ற பயிற்சிகள் நமது மனதை அமைதிப்படுத்தி, நமது சுய ஊக்கத்தை மேம்படுத்துகின்றன.

நாம் ஒவ்வொருவரும் நம்முடைய இலக்குகளைப் பற்றி தெளிவாக அறிந்திருக்க வேண்டும். நம்முடைய இலக்குகளை தீர்மானித்த பின்பு அதை அடையும் வழியை தீர்மானித்து அதற்கான திட்டங்களை தீட்ட வேண்டும். அவற்றை நோக்கி பயணிக்க ஏதுவாக, இலக்கை சிறு,சிறு பகுதிகளாக பிரித்துக் கொண்டு அதற்கு ஏற்றாற் போல் செயல்படலாம்.

நாம் நமது சிறிய வெற்றியைக் கூட கொண்டாட வேண்டும். இது நமது சுய ஊக்கத்தின் தரத்தை அதிகரிக்கும். நாம் நம் தோல்விகளில் இருந்தும் ஏராளம் கற்றுக் கொள்ள முடியும். நம் மனதில் நேர்மறையான எண்ணங்களை நிரப்பி, 'என்னால் இது முடியும், நான் இதை சாதிப்பேன்' போன்ற உறுதிமொழிகளை நமக்குள் அடிக்கடி சொல்லிக்

# Positive Thinking Creates Self Confidence – Be Positive Be Confident

கொள்ளுவது நல்லது.

நமக்கு பிடித்த செயல்களைச் செய்யும்போது நமது உடல் ஆரோக்கியமும், மன ஆரோக்கியமும் மேம்படுகின்றன. இது நமது சுய ஊக்கத்தையும் அதிகரிக்கிறது. நேர்மறையாக ஊக்கமளிக்கும் நபர்களுடன் நமது நட்புகளை வளர்த்துக் கொள்ளும்போது நமது செயலில் நிபுணத்துவமும், ஆர்வமும் அதிகரிக்கிறது.

வாழ்வின் இலட்சியங்களை சென்றடைவதில் தனிப்பட்ட நபர்களின் அறிவு, திறமை, மனத்திண்மை, விடாமுயற்சி, தோல்வி கண்டு துவளாத மனம் ஆகியவை முக்கிய பங்கு வகிக்கின்றன. இதற்கு முன்னால் இவ்வாறான இலட்சியங்களை சென்று அடைந்தவர்கள் அந்த இலட்சியங்களை சென்றடைவதற்கு பயன்படுத்திய யுக்திகளையெல்லாம் அறிந்து செயல்பட்டால் நமது இலட்சியத்தை நம்மால் எளிதாக அடைய முடியும்.

நமது இலட்சியங்கள் எல்லாம் தொட்டுவிடும் தூரத்தில்தான் இருக்கின்றன.ஆனால் அவற்றை அடைவதற்கு நாம் எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் இன்னும் அதிகமாக இருத்தல் முக்கியமானது.

இலட்சியங்களை எடுத்துக்கொள்ளும்போது நம்முடைய திறமைக்கு எது சாத்தியமோ அவ்வாறான லட்சியங்களில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது. மனதில் சேர்வை உணரும் சமயங்களில் நம்பிக்கையை இழக்கக் கூடாது. நமது ஆர்வத்தை அதிகரித்து கொண்டு தொடர்ந்து உழைப்பது நல்லது. காலம், பொருள், பணம், உழைப்பு இவை அனைத்தையும் சீரான அளவில் பயன்படுத்துவது நல்ல பலன் தரும்.

குடும்ப உறவுகளின் நெருக்கடிகளும் பொருளாதார நெருக்கடிகளும் நமது இலட்சியத்தை அடைவதில் தடைக்கற்களாக மாறிவிடலாம். இதனால் நம்மில் பலர் தொடக்கத்தில் வரும் பிரச்னைகளை பர்த்து பாதிவழியிலேயே தனது முயற்சிகளை கைவிட்டு விடுவதும் உண்டு. இதை தவிர்க்க வேண்டும்.

திட்டத்தை செயல்படுத்த தேவைப்படும் ஆதாரங்கள், அவை எங்கு கிடைக்கும், யாருடைய உதவி இதற்கு தேவைப்படும், அவருடைய உதவியை நாடுவது எப்படி இவையெல்லாம் இலட்சியத்தை அடைவதற்கு தேவைப்படும் முக்கிய அடிப்படைகளாகும்.

இலட்சியத்தை அடைய முயற்சிப்பவர்கள் முதலில் சோம்பேறியாக இருக்க கூடாது. மான அவமானங்களை பர்க்கக்கூடாது. அன்றாட நடவடிக்கைகளில் கணிசமான நேரத்தை இலட்சியத்தை அடைவதற்காக செலவிடுவது நல்லது. 'உழைப்பின்றி ஊதியம் இல்லை' என்பதை மனதில் கொண்டு செயலாற்ற இவர்கள் முனையலாம்.

இன்றைய படித்த இளைஞர்கள் பலர் வேலையின்றி இருக்கும் நிலை பரிதாபகரமானது. இதற்கு காரணம் அவர்களின் ஆர்வமின்மையே. அவர்கள் வேலைவாய்ப்பு பெறுவதற்கான பல துறைகள் உள்ளன.அவர்களுக்கு அதிக ஆர்வமும், அடிப்படைத் திறனும் உள்ள துறைகளில் பள்ளிப்படிப்பின் போதே கவனம் செலுத்தலாம். அவ்வாறான துறையைத் தேர்ந்தெடுத்து, அதை இலட்சியமாகக் கொண்டு பயணம் செய்யத் தொடங்கினால் அவர்களின் வாழ்வு மேலும் சிறக்கும்.




வீட்டிலும், பள்ளியிலும் சாதனையாளர்களைப் பற்றிய புத்தகங்களை குழந்தைகள் படிப்பதற்கான வாய்ப்புகளை பெற்றோர்களும் ஆசிரியர்களும் வழங்கலாம். படிப்பின் மீதான அவர்களின் ஊக்கம் மட்டுமே அவர்களின் உயர்வான வாழ்வுக்கு அடிப்படையாக அமையும்.

தொடர்ந்து வரும் தோல்விகளை கண்டு அஞ்சாது, விடா முயற்சிடன் தம்முடைய திட்டத்தை படிப்படியாகவும், உறுதியாகவும் எடுத்துச் செல்வதுதான் ஒரு வெற்றியாளரின் அடையாளமாகும்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால் நம்மால் முடியும் என்ற சிந்தனை இருந்தாலே ஊக்கமும் ,உற்சாகமும் பெருக்கெடுத்து வரும். அந்த ஊக்கத்தின் விளைவால் கிடைத்த வெற்றியை நினைத்து நம்மை நாமே பாராட்டிக் கொண்டால் அடுத்த வெற்றியை நோக்கி நமது மனம் பயணிக்கத் தொடங்கும்.

# தமிழ் 2024

நற்றமிழரின் நாடித்துடிப்பு

## JANUARY




## FEBRUARY




## MARCH




## APRIL





## MAY




## JUNE




## JULY




## AUGUST




## SEPTEMBER




## OCTOBER







## NOVEMBER





## DECEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

Email: editor@ithamil.com




Happy Diwali

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com


தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
HAPPY
DIWALI
2024
1 NOVEMBER
VARSHA